KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

ஆண்டு
TAHUN
4



KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
(SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

ஆண்டு
TAHUN
4

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL




**Penulis**
Saraswathy Kannan
Tamilmathi Arumugam

**ஆசிரியர்கள்**
சரஸ்வதி கண்ணன்
தமிழ்மதி ஆறுமுகம்

**Editor**
Pithaullah Hayath Basha
Dr. Richard Samy Pakari
Letchumy Suppiah

**பதிப்பாசிரியர்கள்**
பிதாவுல்லாஹ் ஹயாத் பாஷா
முனைவர் ரிச்சர்ட் சாமி பக்கிரி
லட்சுமி சுப்பையா

**Pereka Bentuk**
Prabu Palani

**வடிவமைப்பாளர்**
பிரபு பழனி

**Ilustrator**
Azrul Helmi Bin Abd. Wahab
Maseh Bin Supian

**ஓவியர்கள்**
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
மாசேஹ் பின் சுப்பியான்



Multi Educational Book Enterprise
2019

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku: 0033

KPM2019 ISBN 978-967-2046-39-4

Cetakan Pertama 2019

© **Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:14 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- SJKT Nilai, Negeri Sembilan.
- SJKT Kajang, Selangor.
- SJKT Puchong, Batu 14, Selangor.
- SJKT Serdang, Selangor.
- SMK Raja Mahadi, Klang, Selangor.
- SJKT West Country Barat, Kajang, Selangor.





முன்னுரை V

**தொகுதி 1 : நன்னெறியும் நற்பண்பும்**

1. உயர்ந்த பண்பு 1
2. காலத்தின் அருமை 2
3. கடமைகள் 4
4. செய்யுளும் மொழியணியும் 6
5. இலக்கணம் 7

**தொகுதி 2 : மொழி**

1. தாய்மொழி முழக்கம் 8
2. மொழியும் தலைமுறையும் 9
3. அறிவும் மொழியும் 11
4. செய்யுளும் மொழியணியும் 13
5. இலக்கணம் 14

**தொகுதி 3 : பண்பாடு காப்போம்**

1. பாரம்பரிய நிகழ்ச்சி 15
2. இனிதே கொண்டாடுவோம் 16
3. கவர்ந்த பண்பாடு 18
4. செய்யுளும் மொழியணியும் 20
5. இலக்கணம் 22

**தொகுதி 4 : உணவின் சிறப்பு**

1. உள்நாட்டுப் பழங்கள் 24
2. சிறந்தவை அறிவோம் 25
3. நான் ஓர் உணவுத் தட்டு 26
4. செய்யுளும் மொழியணியும் 28
5. இலக்கணம் 30

**தொகுதி 5 : கலையும் கதையும்**

1. கேட்போம் அறிவோம் 32
2. தக்காளித் திருவிழா 33
3. மனுநீதிச் சோழன் 35
4. செய்யுளும் மொழியணியும் 37
5. இலக்கணம் 38

**தொகுதி 6 : அனுபவங்கள்**

1. ஒரு நாள் சுற்றுலா 40
2. நிறைந்த வாழ்வு 42
3. ஓய்வுநேர நடவடிக்கைகள் 44
4. செய்யுளும் மொழியணியும் 45
5. இலக்கணம் 47

**தொகுதி 7 : சுற்றுச்சூழலும் நாமும்**

1. தோட்டம் போடுவோம் 48
2. அன்புச் சோலை 51
3. அழகோ அழகு 52
4. செய்யுளும் மொழியணியும் 54
5. இலக்கணம் 56

**தொகுதி 8 : இனியதொரு குடும்பம்**

1. ஒற்றுமை விருந்து 58
2. அண்ணனின் திருமணம் 59
3. சமையல் கற்றேன் 61
4. செய்யுளும் மொழியணியும் 63
5. இலக்கணம் 65

**தொகுதி 9 : இலக்கியம் அறிவோம்**

1. சிலப்பதிகாரம் 66
2 உயர்ந்த தூது 67
3. அரசரின் வீரம் 69
4. செய்யுளும் மொழியணியும் 71
5. இலக்கணம் 72

**தொகுதி 10 : விளையாட்டுகள்**

1. பாரம்பரிய விளையாட்டு 73
2. அறிந்தோம் தெளிந்தோம் 74
3. உடலுக்கு உறுதி 76
4. செய்யுளும் மொழியணியும் 78
5. இலக்கணம் 79

**தொகுதி 11 : மனமகிழ் நடவடிக்கைகள்**

1. சிந்தித்துச் செயல்படு 80
2. மனம் மகிழ்வோம் 81
3. நான் ஓவியரானால்... 83
4. செய்யுளும் மொழியணியும் 85
5. இலக்கணம் 87

**தொகுதி 12 : பொருளாதாரம் அறிவோம்**

1. விற்பனைப் பொருள்கள் 88
2. விவசாயத் தொழில் 89
3. வியாபாரத்தில் வெற்றி 91
4. செய்யுளும் மொழியணியும் 93
5. இலக்கணம் 95

**தொகுதி 13 : போக்குவரத்து**
1. சின்னங்களும் குறிப்புகளும் 96
2. போக்குவரத்து வளர்ச்சி 98
3. சாலை விபத்துகள் 100
4. செய்யுளும் மொழியணியும் 102
5. இலக்கணம் 104

**தொகுதி 14 : சுகாதாரம்**
1. பல் பரிசோதனை 105
2. தூய்மையைப் பேணுவோம் 106
3. உணவே மருந்து 107
4. செய்யுளும் மொழியணியும் 108
5. இலக்கணம் 110

**தொகுதி 15 : நேசமிகு சமூகம்**
1. ஒற்றுமையுணர்வு 111
2. விளம்பரத்தின் அவசியம் 112
3. முடிவுரையை அறிக 114
4. செய்யுளும் மொழியணியும் 116
5. இலக்கணம் 118

**தொகுதி 16 : பாதுகாப்பு**
1. ஆபத்தைத் தவிர்ப்போம் 119
2. நலம் பேணுக 121
3. அன்பே தெய்வம் 123
4. செய்யுளும் மொழியணியும் 125
5. இலக்கணம் 127
மொழி விளையாட்டு 128

**தொகுதி 17 : நிறைவான கல்வி**
1. பாராட்டுகள் 130
2. நமது பண்பாடு 131
3. சிறப்பாகச் செயல்படுவோம் 133
4. செய்யுளும் மொழியணியும் 134
5. இலக்கணம் 135

**தொகுதி 18 : குடியியல்**
1. ஆர்வமே முக்கியம் 136
2. எறும்பு கற்பிக்கும் பாடம் 138
3. கூட்டுப்பணி 140
4. செய்யுளும் மொழியணியும் 142
5. இலக்கணம் 144

**தொகுதி 19 : கடமைகள் போற்றுவோம்**
1. எங்கள் பொறுப்பு 145
2. அடிச்சொற்கள் அறிந்தேன் 146
3. ஆனந்தம் கொண்டோம் 148
4. செய்யுளும் மொழியணியும் 150
5. இலக்கணம் 152

**தொகுதி 20 : வரலாறும் இலக்கியமும்**
1. கற்காலத் தொடர்பு மொழி 153
2. போரும் வேந்தர்களும் 155
3. பேசும் திருக்குறள் கிடைத்தால்... 157
4. செய்யுளும் மொழியணியும் 158
5. இலக்கணம் 160


**தொகுதி 21 : அறிவியல்**
1. பள்ளியின் அறிவியல் வாரம் 161
2 சூழலும் தாவரங்களும் 162
3. உடற்பயிற்சியின் நன்மைகள் 164
4. செய்யுளும் மொழியணியும் 166
5. இலக்கணம் 167

**தொகுதி 22 : தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்**
1. தீதும் நன்றும் 168
2. பல்திறன் கற்றல் 170
3. நன்மைகள் அறிவோம் 172
4. செய்யுளும் மொழியணியும் 173
5. இலக்கணம் 175

**தொகுதி 23 : சமயம்**
1. கல்விப் பயணம் 176
2. நவராத்திரி விழா 178
3. சமயச் சின்னங்கள் 179
4. செய்யுளும் மொழியணியும் 181
5. இலக்கணம் 182

**தொகுதி 24 : வணிகவியல்**
1. விளம்பர அட்டைகள் 183
2. சிறுதொழில் கற்போம் 185
3. சந்தையில் ஒரு நாள் 186
4. செய்யுளும் மொழியணியும் 189
5. இலக்கணம் 191

**தொகுதி 25 : போதைப்பொருள்**
1. அரிய வாய்ப்பு 192
2. விழிப்புணர்வு கொள்வோம் 193
3. நல்லதைச் செய்வோம் 195
4. செய்யுளும் மொழியணியும் 197
5. இலக்கணம் 199
**மீள்பார்வை** 201



# முன்னுரை

**பின்னை நின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

**- திருமூலர்**

இரண்டாம் படிநிலையில் காலடி பதிக்கும் மாணவர்கள் அனைவரும் அடிப்படை மொழித் திறன்களை முறையே அடைந்திருப்பது அவசியமாகும். இனிய தமிழ்மொழியைப் பயன்படுத்திப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் வாசிப்பின்வழி பல தகவல்களைப் பெறவும் இலக்கணப் பிழையின்றித் தரமான எழுத்துப் படிவங்களைப் படைக்கும் ஆற்றலை மாணவர்கள் பெறவும் இப்பாடநூல் பேருதவியாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எழுத்தறிவை மட்டுமே மாணவர்களுக்கு வழங்குவது தொடக்கக்கல்வியின் நோக்கமன்று. மாறாக, தமிழ்மொழியின் சிறப்புகளை உள்வாங்கி, உணர்ந்து, தெளிவுறச் சிந்திக்கும் ஆற்றலை உருவாக்குவதும் தமிழ்மொழிக் கற்றலின் இலக்காகும்.

‘வல்லமை தாராயோ! இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!’ எனும் மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளை நினைந்து, அதில் நனைந்து இப்பாடநூல் பல வகையில் மாணவர்களுக்குப் பயனுறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்து தொகுதிகளைக் கொண்ட இந்நூல், மாணவர்கள் திறம்பட தமிழ்மொழியைக் கற்க பாலமாய் அமையும். ஒவ்வொரு தொகுதியும் வெவ்வேறு கருப்பொருளைத் தாங்கி, கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது. செய்யுள் மொழியணியும் இலக்கணமும் நற்பண்புகளையும் முறையான இலக்கண விதிகளையும் எடுத்துரைக்கின்றது.

கல்விப் பயணத்தில் இனிதே பயணிக்கும் மாணவ மணிகள் அனைவருக்கும் இப்பாடநூல் அறிவாற்றலைப் பெருக்குவதோடு பாட, பேச, எழுத, உரையாட, நடிக்க, விவாதிக்க, மேடை அமைக்கும்; அறிவுரை கூறி அன்புவழி காட்டும்; ஈந்து மகிழும் உணர்வை ஊட்டும்; சிந்திக்கவும் காரண காரியங்களை ஊகித்து மகிழவும் கதைகள் பல கூறும்; நடவடிக்கைகளும் பயிற்சிகளும் தன்னம்பிக்கையையும் மொழித்திறனையும் முழுமையாக்கும். திறம்பெற்ற நம் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் துணையோடு, இப்பாடநூல்வழி கற்றல் திறன் நிச்சயம் வலுப்பெறும்.

இறுதியாக, இப்பாட நூலைப் படைப்பதற்குப் பெரிதும் உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருந்த மலேசியக் கல்வி அமைச்சின் பாடநூல் பிரிவுக்கு மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

**தமிழ் என்று தோள் தட்டி ஆடு! - நல்ல**
**தமிழ் வெல்க! வெல்க! என்றே தினம்பாடு!**

அன்புடன்,
ஆசிரியர்கள்





# மொழிக்கூறுகளுக்கான படவுருக்கள்

தொகுதிகள்

பாடம்

கேட்டல் பேச்சு

வாசிப்பு

எழுத்து

செய்யுளும் மொழியணியும்

இலக்கணம்

ஆசிரியர் குறிப்பு

அருஞ்சொற்கள்

சொற்களஞ்சியம்

தகவல் அறிக

செவிமடுத்திடுக

உயர்நிலைச் சிந்தனைத் திறன் (உ.சி.தி)

நடவடிக்கை

சொல்லும் பொருளும்

**ஜாப்பர் (ZAPPAR)**

**இங்கு நோக்குக**

Zappar நோக்குக் குறியீடு

**QR நோக்குக் குறியீடு**

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணைபுரிகிறது.



# தொகுதி 1
## நன்னெறியும் நற்பண்பும்

# பாடம் 1
## உயர்ந்த பண்பு

### கோவையாகக் கூறுக.



நண்பர்களோடு சேர்ந்து வகுப்பறையைச் சுத்தம் செய்தேன்.



தினமும் அம்மா செய்யும் அயராத சேவைக்காக நன்றி கூறி, பள்ளிக்குப் புறப்பட்டேன்.



அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துப் பள்ளிக்குச் செல்லத் தயாரானேன்.



அப்பாவின் மகிழுந்தில் முன் இருக்கையில் அமர்ந்தேன். பாதுகாப்புப் பட்டையை மறவாமல் அணிந்து கொண்டேன்.



பள்ளியை அடைந்ததும் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த பொறுப்பாசிரியருக்கு வணக்கம் கூறினேன். சக நண்பர்களுக்கும் வணக்கம் கூறினேன்.



காலைச் சிற்றுண்டி சிறிதேனும் உண்ண வேண்டும் என அம்மா வலியுறுத்தினார். நானும் அவ்வாறு செய்தேன்.

### நடவடிக்கை 1

செவிமடுக்கும் வாக்கியங்களைக் கோவையாகக் கூறுக.

செவிமடுத்திடுக

### நடவடிக்கை 2

வாக்கியங்களில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கலந்துரையாடுக.

1.3.4 - செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செவிமடுத்த முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறப் பணித்தல்.
- கருத்துகளில் கூறப்பட்ட நன்னெறிப் பண்புகளை உரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 2

# காலத்தின் அருமை

## வாசித்து அறிக.



காலம் என்பது மானிடர்களுக்குக் கிடைத்த வரம் என்றால் அது மிகையாகாது. காலத்தைத் தவறவிட்டால் மீண்டும் பெறுவதென்பது இயலாத ஒன்றாகும்.

மாணவர்கள் தங்களின் அன்றாட வாழ்வில், காலத்தின் அருமை பெருமைகளை அறிந்து செயல்படுவது அவசியமாகும். இளமையில் கல், காலமறிந்து உண், காலமும் நேரமும் யாருக்கும் காத்திருக்காது, பருவத்தே பயிர் செய் போன்ற பொன்மொழிகள் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

**ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்.** (484)

எனும் குறளின்வழி திருவள்ளுவர் காலத்தின் மகிமையைப் பற்றி மிகச் சிறப்பாகக் கூறியிருக்கிறார். இக்கருத்திற்கேற்ப மாணவர்கள் ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் தங்களின் கடமைகளைச் செய்து முடிப்பது சாலச் சிறந்ததாகும்.

அதிகாலையில் எழுந்து சிறிது நேரம் படித்தல், அதன் பிறகு காலைக் கடன்களை முடித்தல், குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்லுதல், பாடங்களைக் கருத்தூன்றிக் கற்றல், ஓய்வு நேரங்களில் வாசித்தல் போன்ற நடவடிக்கைகளைக் கையாள வேண்டும். இவை யாவும் காலத்தின் சிறப்பை உணர்த்தும் நேர்மறைச் சிந்தனை நடவடிக்கைகளாகும்.

சில வேலைகளை நாளை பார்ப்போம் என்று தள்ளிப்போடுவது, வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாமை, சோம்பல் குணம் போன்றவை காலத்தை மதியாதவரின் எதிர்மறைச் செயல்களாகும். எனவே, மாணவர்கள் சிறு வயதிலிருந்தே காலம் எனும் வரத்தைப் போற்றிச் செயலாற்றி வாழ்வில் மேன்மை அடைய வேண்டும்.




## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியை ஏற்ற தொனியுடன் வாசித்து அறிக.

## நடவடிக்கை 2

வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளைக் குமிழி வரிபடத்தில் எழுதி வாசித்திடுக.




### அருஞ்சொற்கள்

- காலம்
- இயலாத
- மகிமை
- செயல்படும்
- மேன்மை

## நடவடிக்கை 3


வாசிப்புப் பகுதியில் கொடுக்கப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கொண்டு 'காலத்தின் அருமை' எனும் தலைப்பில் உரையாற்றுக.

2.4.9 - வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை மாணவர்கள் வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காணச் செய்தல்.
- முக்கியக் கருத்துகளை வரிபடத்தில் எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்



பாடம் 3

# கடமைகள்



## பத்தியில் எழுதுக.

| | |
|---|---|
| தலைப்பு | மாணவர் கடமைகள் |
| முதன்மைக் கருத்து | பெற்றோருக்கு உதவுதல் / நண்பர்களுக்கு உதவுதல் / பொதுமக்களுக்கு உதவுதல் |
| துணைக் கருத்து | வீட்டு வேலைகள் / பள்ளியில் உதவிகள் / விபத்து, ஆபத்து அவசர வேளை |
| விளக்கம் | மாணவர்களின் தலையாய கடமைகளில் ஒன்று பெற்றோருக்கு உதவி செய்வதாகும். மாணவர்கள் தங்களின் ஓய்வு நேரங்களில் பெற்றோருக்கு வீட்டு வேலைகள் செய்து உதவுவது சிறப்பாகும். |
| சான்று | வீட்டைச் சுத்தம் செய்வது, பூச்செடிகளுக்கு நீர் ஊற்றுவது, மகிழுந்தைச் சுத்தம் செய்வது போன்ற உதவிகளின் மூலம் பெற்றோரின் பணிச்சுமையைக் குறைக்கலாம். மேலும், அவர்களின் அன்பையும் பாராட்டையும் பெறவும் இயலும். |

3.5.5 - முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுவர்.



**ஆசிரியர் குறிப்பு**

- கொடுக்கப்பட்ட தலைப்பில் முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## நடவடிக்கை 1

முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுக.

**தலைப்பு** → கல்வியில் வெற்றி பெற வழிகள்

**முதன்மைக் கருத்து** → கவனம் | உணவு | ஓய்வு

**துணைக் கருத்து** → ஆசிரியர் போதிக்கும் நேரத்தில் கவனம் செலுத்துதல் | காலைச் சிற்றுண்டி அவசியம் உண்ணுதல் | கால நேரத்தோடு தூங்கச் செல்லுதல்

**விளக்கம்** → கல்வியில் வெற்றிபெற ஒவ்வொரு மாணவனும் கவனத்தைச் செலுத்துவது முக்கியமாகும். பாடத்தில் ஆசிரியர்கள் போதிக்கும் வேளையில் மாணவர்கள் கருத்தூன்றிச் செவி சாய்த்தால் மட்டுமே அப்பாடங்களைப் புரிந்துகொள்ள இயலும்.

**சான்று** → கேட்டல் திறன் அதிகரிக்கும்போது கற்பிக்கும் பாடங்களைச் சுலபமாக விளங்கிக் கொள்ளலாம். இதனால், ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கும் முறையே விடையளித்துச் சிறந்த புள்ளிகளையும் பெற முடியும்.

## நடவடிக்கை 2

எழுதிய பத்திகளை வாசித்துக் காட்டுக.


மேலே கொடுக்கப்பட்ட முதன்மைக் கருத்து, துணைக் கருத்துகளுக்கு ஏற்ப விளக்கத்தையும் சான்றையும் பத்தியில் எழுதுக.

எதிர்காலத்தில் நீ ஒரு சிறந்த அறிவியலாளராக வர நேரிட்டால், நம் நாட்டிற்கு மிகப் பயனுள்ள கண்டுபிடிப்பாக எதனை உருவாக்குவாய்?

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.




**திருக்குறளும் பொருளும்**

- **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
  **தெய்வத்துள் வைக்கப் படும். (50)**

  உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்திலுள்ள தெய்வத்தோடு சேர்த்து மதிக்கப்படுவான்.

### நடவடிக்கை 1

திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.

**QR நோக்குக் குறியீடு**

https://youtu.be/UjNHDTEAaSo?t=4

### நடவடிக்கை 2

திருக்குறளையும் அதன் பொருளையும் சரியான வரிவடிவத்துடன் எழுதுக.

4.3.4 - நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- திருக்குறளையும் அதன் பொருளையும் வாசிக்கப் பணித்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறச் செய்தல்.
- பொருத்தமான வேறு சூழலைக் குழுமுறையில் உருவாக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வேற்றுமை உருபுகளை அறிக.

**வேற்றுமை**
- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.
- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை :-

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) | உருபு இல்லை | **வளர்மதி** நடனம் ஆடினாள். |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | ஆசிரியர் **வளர்மதியைப்** பாராட்டினார். |

### நடவடிக்கை 1

சரியான வேற்றுமை உருபுகளை அறிந்து கூறுக.

- தம்பி தண்ணீர் குடித்தான்.
- அண்ணன் தங்கையை அழைத்தார்.
- குதிரை வேகமாக ஓடியது.
- விவசாயி வயலை உழுதான்.
- அம்மா துணிகளைத் துவைத்தாள்.
- செடி செழிப்பாக வளர்ந்தது.

### நடவடிக்கை 2

வேற்றுமை உருபுக்கு ஏற்ப சொல்லை எழுதுக.

| முதல் வேற்றுமை | இரண்டாம் வேற்றுமை |
|---|---|
| • ________ பரிசு வாங்கினான். | • வீரன் ________ நீட்டினான். |
| • கனத்த ________ பெய்தது. | • மதியழகி ________ பறித்தாள். |
| • ________ வானில் பறந்தன. | • அதிகாரி ________ வழங்கினார். |
| • ________ கருமை நிறம். | • பாடகி ________ பாடினாள். |
| • ________ பால் தரும். | • கண்ணகி ________ உடைத்தாள். |
| • ________ பானை வனைந்தான். | • கண்ணன் ________ உதைத்தான். |

5.3.17 - முதலாம், இரண்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வேற்றுமை உருபு பற்றிய குறிப்புகளை வாசிக்கச் செய்தல்.
- வேற்றுமை உருபு தொடர்பான எடுத்துக்காட்டுகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

தொகுதி 2
# மொழி
## பாடம் 1
## தாய்மொழி முழக்கம்

### செவிமடுத்த கருப்பொருளைக் கூறுக.



ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்வழி வந்த மொழியே தாய்மொழியாகும்.

நம் தாய்மொழியான தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ள வேண்டும்.

இலக்கிய இலக்கண நூல்களின்வழி தமிழ்மொழியின் சிறப்புகளை அறிய வேண்டும்.

பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் கவிதைகளைப் பாடி தமிழ்மொழியின் இனிமையை உணர வேண்டும்.

நாம் பேசும் மொழியே நமது அடையாளமாகும்.

### நடவடிக்கை 1

உரையில் கூறப்பட்ட வாக்கியங்களில் காணப்படும் கருப்பொருளைக் கூறுக.

### நடவடிக்கை 2

கருப்பொருளுக்கு ஏற்ப வேறு சில வாக்கியங்களைக் கூறி உரையாடுக.

**தகவல் அறிக**

தமிழ், கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம் ஆகிய ஆறும் செம்மொழியாகும்.

1.3.5 - செவிமடுத்தவற்றிலுள்ள கருப்பொருளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செவிமடுத்த வாக்கியங்களில் காணப்படும் கருப்பொருளைக் கூறப் பணித்தல்.
- கருப்பொருளுக்கு ஏற்ப வேறு வாக்கியங்களை உருவாக்கிக் குழுமுறையில் உரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

பாடம் 2

# மொழியும் தலைமுறையும்

## வாசித்து அறிக.




தமிழ் என்றால் இனிமை என்று பொருள். தமிழ்மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவேதான், முத்தமிழ் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது.

உரைநடையும் செய்யுள்களும் இயற்றமிழ் என்றும், இசையோடு பாடப்படும் பாடல்கள் இசைத்தமிழ் என்றும், இயலும் இசையும் கலந்தவை நாடகத் தமிழ் என்றும் அழைக்கப்படும். தமிழைப் பேசும் தமிழினம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி எனவும் பெயர் பெற்றுள்ளது. மேலும், உலகிலுள்ள பழமையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும் எனும் சிறப்பையும் பெற்றுள்ளது.

பெற்றோர் ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது அவர்களின் பிள்ளைகள் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களாவர். அந்தப் பிள்ளைகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்களாகின்றனர்.

ஒரு குடும்பக் கிளை அமைப்பில் வியக்கத்தக்க தலைமுறை கணக்கீடும் அதற்கேற்ப உறவுப் பெயரும் தமிழ்மொழியில் உள்ளன. முதலாம் தலைமுறை என்பது நாம். இரண்டாம் தலைமுறை என்பது தாயும் தந்தையும். மூன்றாம் தலைமுறை பாட்டன், பாட்டி. நான்காம் தலைமுறை என்பது பூட்டன், பூட்டி. ஐந்தாம் தலைமுறை ஓட்டன், ஓட்டி. ஆறாம் தலைமுறை சேயோன், சேயோள். ஏழாம் தலைமுறை பரன், பரை. ஏழாம் தலைமுறையே பரம்பரை என்றழைக்கப்படுகிறது.

ஒரு தலைமுறை என்பது 60 ஆண்டுகளாகும். ஏழு தலைமுறை என்பது 420 வருடங்கள் என்று பொருள்படுகின்றது. பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் பதினான்கு தலைமுறையாக எனும் பொருளைத் தருகின்றது. வேறெந்த மொழியிலும் இப்படியோர் உறவு முறையை நாம் காண இயலாது.




## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ள கருப்பொருளை அடையாளம் காண்க.

### சொற்களஞ்சியம்

- முத்தமிழ்
- இசைத்தமிழ்
- வியக்கத்தக்க
- இயற்றமிழ்
- தலைமுறை
- சராசரி

2.4.7 - வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளைக் கூறச் செய்தல்.
- மாணவர்கள் குழுமுறையில் குடும்பக் கிளை வரைந்து உறவு முறைகளை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்


KPM

பாடம் 3

# அறிவும் மொழியும்

## முன்னுரை எழுதுக.

### அ மொழி

மனிதர்களின் அறிவு வளர்ச்சியை மொழியே உருவாக்கியது. தங்களின் கருத்துகளைக் கூறவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் மொழி எனும் கருவி பயன்படுகிறது.

### ஆ தாய்மொழி

சிறுவயதில் கற்பிக்கப்பட்டு, ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குக் கடத்தப்படும் மொழியே தாய்மொழி எனப்படும். தாய்மொழியே ஒருவரின் இன அடையாளத்தைக் காட்டுகிறது.

### இ கல்வி

கல்வி, 'கல்' எனும் சொல்லிலிருந்து தோன்றியது. ஒரு மனிதன் ஐம்புலன்களால் புறத்தில் பெறப்படும் தகவல்களைக் கொண்டு தங்களது அறிவையும் நல்லொழுக்கத்தையும் உள்ளத்தின் வளர்ச்சியையும் வளப்படுத்துவதாகும்.

### ஈ இளமையில் கற்பது சிறப்பு

கல்வி எனும் செல்வம் அனைவருக்கும் நன்மை பயக்கும் அரிய செல்வமாகும். இச்செல்வத்தை இளமையில் கற்பதே அனைவருக்கும் சாலச் சிறந்தது.

### உ நாளிதழ்

உலகில் நாளுக்குநாள் நிகழும் செய்திகளை உடனுக்குடன் தாங்கி வெளிவருபவை நாளிதழ்களாகும். நாளிதழ்கள் நாட்டின் நலன், மொழி, கல்வி, ஒற்றுமை, வெளிநாட்டுத் தொடர்பு ஆகியவற்றிற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

## நடவடிக்கை 1


கட்டுரைத் தலைப்புக்கேற்ற முன்னுரையைப் பத்தியில் எழுதுக.

| | |
|---|---|
| **சேமிப்பு** | செலவுக்கு மிஞ்சிய - தனியாக வைத்திருப்பது |
| **உடற்கல்வி** | உடல்நலம் - வளம் பெருக - கற்பிக்கும் கல்வி |
| **நூலகம்** | தகவல் மூலங்களின் களம் - நூல்களின் சேமிப்பு |

## நடவடிக்கை 2

படங்களுக்கு ஏற்ப முன்னுரை எழுதுக.

1



திருவள்ளுவர் - 1330 குறட்பாக்கள் - முப்பால்

2



வாசிப்பு - பல்வகை - அவசியம்

3.5.3 - கட்டுரைத் தலைப்புக்கேற்ற முன்னுரையைப் பத்தியில் எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கொடுக்கப்பட்ட தலைப்புக்கேற்ப முன்னுரையைப் பத்தியில் எழுதச் செய்தல்.
- படங்களுக்கு ஏற்ற முன்னுரையை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளையும் பொருளையும் அறிக.




**இணைமொழிகளும் பொருளும்**

- **அண்டை அயலார்** ⟶ அக்கம் பக்கத்தார் / சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள்
- **அன்றும் இன்றும்** ⟶ எந்தக் காலத்திலும்

### நடவடிக்கை 1

சூழலுக்கு ஏற்ற இணைமொழியை எழுதிடுக.

1. திரு. மாறன் குடும்பத்தினர் தங்களின் வாழிட மக்களை மதித்து ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

2. நாம் பாரம்பரியத்தைையும் பண்பாட்டையும் பின்பற்றி வாழும் சமுதாயமாகத் திகழ்வதில் பெருமை கொள்ள வேண்டும்.

4.4.4 - நான்காம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- இணைமொழிகளையும் பொருளையும் வாசித்து அறிதல்.
- இணைமொழிக்கேற்ற சூழலை உருவாக்குதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிக.

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
| --- | --- | --- |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | • கோயில் **குமரனால்** கட்டப்பட்டது.<br>• அம்மா **தங்கையோடு** கடைக்குச் சென்றாள்.<br>• அண்ணன் தன் **நண்பர்களுடன்** காற்பந்து விளையாடினார்.<br>• **அறத்தான்** வருவதே இன்பம். |
| நான்காம் வேற்றுமை | கு | • பேச்சுப் போட்டியில் **கவிவர்மனுக்கு** முதல் பரிசு கிடைத்தது. |

## நடவடிக்கை 1

சரியான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து வாக்கியங்களாக எழுதுக.

| உருபு | வாக்கியங்கள் | | | |
| --- | --- | --- | --- | --- |
| ஆல் | - | பலகை | - | செய்யப்பட்டது |
| ஒடு | - | வளவன் | - | கிராமத்திற்கு |
| ஓடு | - | பூவரசன் | - | அப்பா |
| உடன் | - | மாணவர்கள் | - | சுற்றுலா |
| கு | - | நண்பன் | - | பரிசு |

### சொல்லும் பொருளும்

- மணம் - வாசனை
- மறம் - வீரம்
- நூல் - புத்தகம்
- மெய் - உண்மை
- அறம் - தர்மம்

5.3.18 - மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறியச் செய்தல்.
- வேற்றுமை உருபு சேர்த்து வாக்கியங்களை எழுதப் பணித்தல்.
- மாணவர்கள் சுயமாகச் சில வாக்கியங்களை எழுதப் பயிற்சி அளித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்



# தொகுதி 3
## பண்பாடு காப்போம்

# பாடம் 1
## பாரம்பரிய நிகழ்ச்சி

### செவிமடுத்திடுக.



**படிநிலை இரண்டில் பயிலும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!**

நமது பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் பண்பாட்டு நிகழ்ச்சி ஒன்றனை ஏற்பாடு செய்துள்ளது. மாணவர்கள் பின்வரும் போட்டிகளில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்.



- கோலம் போடுதல்
- தோரணம் பின்னுதல்
- பூச்சரம் தொடுத்தல்
- பண்பாட்டு உடை அணிதல்

போட்டிகளின் விவரம் பின்வருமாறு:
இடம் : பள்ளி மண்டபம்
நாள் : 01 பிப்ரவரி 2020
நேரம் : காலை மணி 8:30

- கலந்துகொள்ள விரும்பும் மாணவ மாணவியர் பள்ளியின் தமிழ்மொழிக் கழகச் செயலாளரிடம் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். வெற்றி பெறும் மாணவர்களுக்குச் சிறந்த பரிசுகள் காத்திருக்கின்றன.

செவிமடுத்திடுக

### நடவடிக்கை 1

செவிமடுத்த அறிவிப்பிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுக.

1.4.4 - செவிமடுத்த அறிவிப்பிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

### சொற்களஞ்சியம்

- கழகம்
- பண்பாடு
- செயலாளர்
- தொடுத்தல்
- பின்னுதல்
- தோரணம்

**ஆசிரியர் குறிப்பு**

- செவிமடுத்த அறிவிப்பிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 2

# இனிதே கொண்டாடுவோம்

## அறிவிப்பை வாசித்து அறிக.



**தாமான் மலூரியில் வசிக்கும்**
**இந்தியர்களுக்கு ஒரு நற்செய்தி!**

எதிர்வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, தேர்த்திருவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ளோம்.

வருடந்தோறும் கொண்டாடப்படும் இவ்விழா, இவ்வாண்டு சற்று மாறுபட்ட விதத்தில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. தைத்திங்களின் மூன்றாம் நாளில் கொண்டாடப்படும் காணும் பொங்கலன்று இத்தேர்த்திருவிழாவைக் கொண்டாடவுள்ளோம்.

பொதுமக்களே! கண்கவரும் தேர்த்திருவிழாவன்று பெரியவர்கள், சிறுவர்கள் அனைவரும் நம் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் உடையணிந்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அழகிய தேர், நம் வசிப்பிடத்தை வலம் வரும் நேரத்தில் மயிலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், கரகாட்டம் போன்ற பாரம்பரிய நடனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது மக்களைக் களிப்பில் திளைக்கச் செய்யும் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறோம்.

**வாருங்கள்! வாருங்கள்! திரண்டு வாருங்கள்!**
**அனைவரும் சேர்ந்தே கொண்டாடுவோம்!**

### சொற்களஞ்சியம்

- திளைக்க
- விமரிசையாக
- மாறுபட்ட
- கண்கவரும்
- களிப்பில்
- திங்கள்

### நடவடிக்கை 1

அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.

## நடவடிக்கை 2

அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.



**அன்பார்ந்த பொதுமக்களே!**
**இதோ, உங்கள் அனைவருக்கும் ஒரு நற்செய்தி!**

பொங்கல் திருநாளை முன்னிட்டு, தமிழ் இளைஞர் சங்கம் ‘முத்தான பொங்கல்’ எனும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் ஞாயிறன்று இந்நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

நிகழ்ச்சியின் சிறப்பு அங்கம் பொங்கல் வைக்கும் போட்டியாகும். போட்டியில் தனி நபராகவோ குழுவாகவோ கலந்து கொள்ளலாம். போட்டியில் பங்குபெறும் அனைவரும் பாரம்பரிய உடை அணிந்து வர வேண்டும்.

முதல் பத்து வெற்றியாளர்களுக்குச் சிறப்பான பரிசும் ரொக்கமும் வழங்கப்படும். பொங்கல் பானை மட்டும் போட்டியாளர்களுக்குக் கொடுக்கப்படும். இதர பொருள்களைப் போட்டியாளர்களே கொண்டு வர வேண்டும். பொங்கல் பானை அலங்கரிப்பு, கரும்பு, தோரணம், குலவை ஒலி எழுப்புதல் ஆகியவற்றிற்குச் சிறப்புப் புள்ளிகள் தரப்படும்.

ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் தமிழ் இளைஞர் சங்கச் செயலாளர் திரு. தமிழ்வாணன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**திரண்டு வாருங்கள்!**
**பரிசை வெல்லுங்கள்!**





2.3.7 - அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

பாடம் 3

# கவர்ந்த பண்பாடு

## உறவுக் கடிதம்.

க. செழியன்,
6 மல்லிகைத் தெரு,
கிண்டி,
600000 சென்னை.

10.02.2020

பேரன்பு கொண்ட மகள் காவியாவிற்கு,

உன் சிற்றப்பாவின் வணக்கம். நாங்கள் அனைவரும் நலமுடன் நாடு திரும்பிவிட்டோம். ஏறக்குறைய ஒரு மாத காலம் மலேசியாவில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்த நாங்கள் அளவில்லா ஆனந்தம் கொண்டோம். உன் வீட்டில் தங்கியிருந்த இந்த ஒரு மாதத்தில் எங்களை அன்போடு கவனித்த உனக்கும் உன் குடும்பத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலேசியாவில் வாழும் பல இன மக்களின் சிறந்த பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் கண்டு நாங்கள் பிரமித்துப் போனோம். நமது இந்தியர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கைகூப்பி வணக்கம் கூறும் பண்பு என்னை மிகவும் நெகிழச் செய்தது. உரையாடல்களின்போது ஆங்கிலம் கலக்காமல் தமிழில் அவர்கள் பேசியது எனக்கு வியப்பை அளித்தது.

பல இன மக்கள் வாழும் உங்கள் நாட்டில் மலாய்க்காரர்கள் மற்றவரைச் சந்திக்கும் போதும் வீட்டிற்கு வருபவர்களை உபசரிக்கும் போதும் ‘சலாம்’ எனும் முகமன் கூறிக் கொள்வதும் எங்களை ஈர்க்கவே செய்தது.

மதம், இனம் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுணர்வுடனும் வாழ்வது மிகவும் போற்றுதலுக்குரியதே! சீனர்கள் அதிகமாக சிவப்பு நிறத்தை நேசிப்பவர்களாக உள்ளனர். பட்டாசுகளை வெடித்து அவர்களின் பண்டிகையின்போது பேய்களை விரட்டுவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். மேலும், இறந்தவர்களுக்கெனப் படைக்க வேண்டிய இசை, சமயப் பாடல்கள், காகிதத்தால் செய்யப்பட்ட கப்பல், மகிழுந்து போன்றவற்றை எரிக்கும் பண்பாட்டைப் பின்பற்றுகின்றனர். அவையாவும் எங்களுக்குப் புதுமையாக இருந்தன.

பிற இனத்தவரின் பண்பாடுகளை மதித்துப் போற்றும் ஒற்றுமைச் சமுதாயமாக உன் தாய்நாட்டு மக்கள் வாழ்கின்றனர். இதுவே, உங்கள் நாட்டின் சுபிட்சமான நிலைக்கு அடித்தளம் என்று எண்ணுகிறேன்.

எங்கள் நாட்டிற்குத் திரும்பிவிட்டாலும் உங்கள் நாட்டில் நாங்கள் பெற்ற இனிய எண்ண அலைகள் இன்னும் நிழலாடுகின்றன. மீண்டும் வாய்ப்பு கிடைக்குமாயின், நாங்கள் அனைவரும் குடும்பத்தோடு மலேசிய நாட்டிற்கு வருவோம்.

இத்துடன் முடிக்கிறேன். உங்கள் அனைவரின் நலனுக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகிறேன். மீண்டும் உங்கள் மடல் பார்த்துத் தொடர்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
உன் சிற்றப்பா,
**க. செழியன்**

## நடவடிக்கை 1

உறவுக் கடிதத்தை வாசித்து அதன் அமைப்பு முறையைக் கலந்துரையாடுக.

1. முகவரி
2. திகதி
3. விளிப்பு
4. நலம்
5. நோக்கம்
6. எதிர்பார்ப்பு
7. முடிவு
8. நன்றி
9. ஒப்பம்
10. கையொப்பம்

## நடவடிக்கை 2

உடல்நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வீடு திரும்பிய உனது உறவினர் ஒருவருக்கு ஆறுதல் கடிதம் ஒன்றனை எழுதுக.

3.6.9 - 80 சொற்களில் உறவுக் கடிதம் எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உறவுக் கடிதம் எழுதும் அமைப்பு முறையை விளக்கப் பணித்தல்.
- குழுமுறையில் உறவுக் கடிதம் ஒன்றனை எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## உலகநீதியையும் பொருளையும் அறிக.




**உலகநீதியும் பொருளும்**

- **நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.**
  மனசாட்சிக்கு விரோதமாகப் பொய் சொல்லக்கூடாது.
- **நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.**
  நிலையற்றது என்று தெரிந்தும் அதை நிலைநிறுத்த முயலக்கூடாது.

## நடவடிக்கை 1

உலகநீதியையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக.


## நடவடிக்கை 2

உலகநீதியையும் அவற்றின் பொருளையும் சரியான வரிவடிவத்துடன் எழுதுக.

## நடவடிக்கை 3

படத்திற்குப் பொருத்தமான உலகநீதியைத் தேர்ந்தெடுத்துக் கதை கூறுக.

அ




ஆ




4.7.2 - நான்காம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உலகநீதியையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.
- உரையாடலைப் பாகமேற்று நடித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை அறிக.

**பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.**

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஐந்தாம் வேற்றுமை | இன், இருந்து, இல், நின்று | • **வள்ளியின்** வீடு பெரியது.<br>• சுகுணா **பள்ளியிலிருந்து** புறப்பட்டாள்.<br>• **மாறனில்** சிறந்தவர் கீதன்.<br>• பழம் **மரத்தினின்று** விழுந்தது. |
| ஆறாம் வேற்றுமை | அது, உடைய | • **இளவரசியினது** முத்து மாலை தொலைந்துபோனது.<br>• **அண்ணனுடைய** மகிழுந்து மஞ்சள் நிறம். |
| ஏழாம் வேற்றுமை | இல், இடம், பால், கண் | • **அகிலாவிடம்** பல கதைப் புத்தகங்கள் உள்ளன.<br>• திலகவதி **பள்ளியில்** படித்தாள்.<br>• **அவள்கண்** நட்பு கொண்டாள்.<br>• **ஆசிரியர்பால்** அன்பு கொள்க. |
| எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) | உருபு இல்லை. (விளித்தல் / அழைத்தல்) | • **காவியா!** இங்கே வா.<br>• **தம்பி!** அங்கே போகாதே! |






## நடவடிக்கை 1

வேற்றுமை உருபைச் சேர்த்துச் சரியாக எழுதுக.



1. நண்பன் (இன்) மகிழுந்து புதியது.
2. கிளை மரம் (நின்று) விழுந்தது.
3. பாட்டி (அது) சேலை அழகானது.
4. குமரன் (உடைய) புத்தகம் அறையில் உள்ளது.
5. பெற்றோர் (பால்) அக்கறை கொள்க.
6. மாணவி நூலகம் (இல்) படிக்கிறாள்.




## நடவடிக்கை 2

வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு வேற்றுமை உருபு சேர்த்து வாக்கியங்களை எழுதுக.



1. நமது **நாடு** தென் மாநிலம் ஜோகூர். (இன்)
2. **சிறுவன்** கால்கள் வலித்தன. (உடைய)
3. அரசன் **தேர்** இறங்கினான். (நின்று)
4. **வளவன்** வல்லவன் அமலன். (இல்)
5. **பெரியவர்** நிறைய திறமைகள் உள்ளன. (இடம்)
6. **அவன்** நட்பு கொண்டான். (கண்)
7. **முதியவர்** அன்பு கொள்க. (பால்)
8. அண்ணன் **அலுவலகம்** வேலை செய்தார். (இல்)
9. **மாணவர்கள்** அமைதியாக அமருங்கள். (விளி வேற்றுமை)
10. **அத்தை** தங்க மோதிரம் விலை உயர்ந்தது. (இன்)



5.3.19 - ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை அறியப் பணித்தல்.
- வாக்கியங்களில் சரியான வேற்றுமை உருபு சேர்த்து எழுதப் பணித்தல்.
- கோடிட்ட சொற்களுக்கு வேற்றுமை உருபு சேர்த்து முழு வாக்கியங்களாக எழுதக் கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 4
## உணவின் சிறப்பு

## பாடம் 1
## உள்நாட்டுப் பழங்கள்

### முக்கியக் கருத்துகளைக் கூறுக.




### நடவடிக்கை 1

செவிமடுத்த விளம்பரத்திலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுக.

### நடவடிக்கை 2

செவிமடுத்த விளம்பரத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகளைத் தொகுத்துக் கூறுக.

செவிமடுத்திடுக

1.4.5 - செவிமடுத்த விளம்பரத்திலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

• விளம்பரத்தில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கூறப் பணித்தல்.
• விளம்பரத்தின் மூலம் பெறும் நன்மைகள் பற்றி கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 2

# சிறந்தவை அறிவோம்

## வாசித்து அறிக.

### விரைவில் திறப்பு விழா காண்கின்றது

### அல்லி பாரம்பரிய உணவகம்



- சத்துள்ள பாரம்பரிய உணவுகள் இங்கே கிடைக்கும்.
- கம்பு, சோளம், தானிய வகை உணவுகளைச் சுவையாக உண்ணலாம்.
- வல்லாரை, பொன்னாங்கண்ணி, சிறுகீரை போன்ற பசுமையான கீரை வகை உணவுகளும் பரிமாறப்படும்.

- புதினா, தேங்காய், கொத்துமல்லி, கறிவேப்பிலை, வெங்காயம், போன்ற துவையல் வகையும் இங்கே கிடைக்கும்.
- சுத்தமான முறையில் வாழை இலையில் உணவு பரிமாறப்படும்.
- வீடுகளுக்கு உணவு அனுப்பும் சேவையும் எங்களிடம் உண்டு.



### நடவடிக்கை 1

மேற்கண்ட விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.

### நடவடிக்கை 2

விளம்பரத்தில் கூறப்பட்ட தகவல்களை உனது சொந்த மொழிநடையில் கூறுக.

**தகவல் அறிக**

தாவர மரபு பெயர் :
- மாந்தளிர்
- மாவிலை
- பனையோலை
- தென்னங்கீற்று

2.3.8 - விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- விளம்பரத்தில் கூறப்பட்ட விவரங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசிக்கப் பணித்தல்.
- விளம்பரத்தில் கூறப்பட்ட கருத்துகளைக் கூறப் பணித்தல்
- முக்கியக் கருத்துகளைப் பொருத்தமான வரிபடம் வரைந்து எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை




பாடம் 3

# நான் ஓர் உணவுத் தட்டு



## வாசித்து தன் கதை எழுதுக.

நான் உங்கள் வீடுகளில் இருப்பேன். நீங்கள் உணவு உண்பதற்காக என்னைத்தான் முதலில் தேடுவீர்கள். ஆம் மாணவர்களே! நான் ஓர் உணவுத் தட்டு. நான் கண்ணாடியால் உருவாக்கப்பட்டேன். நான் வட்டமாகவும் சற்றுக் கனமாகவும் இருப்பேன்.



என்னை எங்கு, எப்படி உருவாக்கினார்கள் என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது நண்பர்களே! என்னையும் என் நண்பர்கள் பலரையும் கண்ணாடித் தொழிற்சாலையில் தயாரித்தனர். எங்கள் உடல்களைப் பல வண்ணப் பூக்களை வரைந்து அழகுபடுத்தினர். பணியாளர்கள் எங்களைப் பெட்டியில் அடுக்கினர். ஒரு மூடுந்தில் அந்தப் பெட்டிகளை அடுக்கினர்.

நாங்கள் நெடுஞ்சாலையில் பயணம் செய்தோம். மூடுந்து ஓட்டுநர் எங்களை ஈப்போ எனும் பட்டணத்திற்கு கொண்டு செல்கிறார் என்பதை அவர் நண்பரிடம் உரையாடியதைச் செவிமடுத்து அறிந்தோம். சில மணி நேரப் பயணத்திற்குப் பிறகு மூடுந்து நின்றது. ஐந்து மாடி பேரங்காடி எங்களை அன்புடன் வரவேற்றது.

வருகையாளர்களின் பார்வையில் படும்படி எங்களை அழகாக அடுக்கினர். முதல் தளத்தில் தஞ்சம் புகுந்த நாங்கள், வருவோர் போவோரைப் பார்த்து மகிழ்ந்தோம். அன்றைய தினம் ஓர் இளம் மாது எங்களை அதிக நேரம் உற்று நோக்கினாள். நாங்கள் அவளது மனதை ஈர்த்துவிட்டோம். என்னோடு சேர்ந்து என் நண்பர்கள் ஐவரை அவள் தேர்ந்தெடுத்தாள்.

அன்றைய மதிய உணவுக்காக எங்களைக் கழுவிச் சுத்தம் செய்து துடைத்து மேசையில் வைத்தாள். மாதுவின் நான்கு பிள்ளைகளுக்கும் எங்களை மிகவும் பிடித்திருந்தது.

ஒவ்வொரு முறையும் எங்களைப் பயன்படுத்திய பின்னர் சுத்தம் செய்து அடுக்கி வைத்தனர். அனைவரின் பொறுப்புணர்வு எங்களைப் பெரிதும் கவர்ந்தது. அவர்களுக்கு உணவுத் தட்டாகச் சேவை செய்வதில் பெரிதும் மகிழ்கின்றோம்.

## நடவடிக்கை 1

குறிப்புகளைக் கொண்டு தன்கதை கட்டுரையை எழுதுக.




**1. அறிமுகம்**
- பெயர்
- கண்கவர் முகப்பு
- சிறந்த ஆசிரியர்களின் கைவண்ணம்

**2. பயணம்**
- அச்சிடப்பட்ட பின்
- கனவுந்தின் மூலம்
- பல நண்பர்களுடன்
- கல்வி அமைச்சு இலவசமாக
- தமிழ்ப் பள்ளிகளை நோக்கி

**3. விற்பனை**
- கனவுந்து நின்றது
- ஒவ்வொரு பெட்டியாக
- வள்ளுவர் தமிழ்ப்பள்ளி வரவேற்றது
- பாடநூல் பொறுப்பாசிரியர்
- பதிவேட்டில் பதித்தார்.

**4. பயன்பாடு**
- மாணவர்கள் வரிசையாக
- என்னைப் பற்றிய கரம்
- தமிழரசி எனும் மாணவி
- நான்காம் ஆண்டு மாணவி
- என் அன்பு எஜமான்

**5. அனுபவம்**
- வீட்டிற்குக் கொண்டு
- என் மேனிக்கு நெகிழி அட்டை
- பாடத்தின்போது பயன்பாடு
- கவிதை, கதை, கட்டுரை
- தினமும் வாசிப்பது

**6. தற்போதைய நிலை**
- கவனமுடன் பாதுகாப்பது
- கிறுக்க மாட்டாள்
- ஓராண்டுவரை
- அடுத்த ஆண்டு மற்றொருவர் கையில்

3.6.5 - 80 சொற்களில் தன்கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- தன்கதை கட்டுரையை வாசிக்கச் செய்தல்
- கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளைக் குமிழி வரிபடத்தில் எழுதுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்


## மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.

### 1 சூழல்



சத்தியா வழக்கம்போல மட்பாண்டங்களை விற்கப் புறப்பட்டாள். ஓர் ஆற்றைக் கடப்பதற்காகப் பாலத்தின் மீது நடந்தாள். தனது **மனக்கோட்டை**யைக் கட்ட ஆரம்பித்தாள். "மட்பானைகள் அனைத்தையும் விற்று ஓர் ஆடு வாங்குவேன். ஆடுகள் குட்டி போட்டுப் பெருகும். பிறகு அவற்றை விற்று ஒரு பசு வாங்குவேன். பசுவின் பாலை விற்றுப் பணத்தைச் சேமிப்பேன். நிறைய பணம் சேர்ந்தவுடன் செவ்வாய்க்கிரகத்தில் மாடி வீடு ஒன்றைக் கட்டுவேன். அங்கு நடனமாடி மகிழ்வேன்," என்று மட்பானைகள் இருப்பதையும் மறந்து நடனமாடினாள். மட்பானைகள் அனைத்தும் கீழே விழுந்து நொறுங்கின. சத்தியா தான் கண்ட வெற்றுக் கற்பனையை நினைத்து வருந்தினாள்.

### 2 சூழல்



பாட்டி தரையில் சம்மணமிட்டு அமர்ந்தார். வாழையிலையில் சோற்றைச் சுற்றி பலவகையான காய், கீரைகள், கறிவேப்பிலைத் துவையல் போன்றவை இருந்தன. அறுசுவை உணவின் நறுமணம் என்னை ஈர்க்கச் செய்தது. பாட்டியின் அருகில் சென்று அமர்ந்தேன். "பாட்டி, நீங்கள் நாற்காலியில் அமர்ந்து உண்ணலாமே!" என்றேன்.

"இல்லை பேராண்டி! இப்படித் தரையில் அமர்வது நான் **தொன்று தொட்டுக்** கடைப்பிடிக்கும் பழக்கமாகும். அருகில் வா! ஒரு கவளம் சோறு ஊட்டுகிறேன்," என்றார் பாட்டி. பாட்டி ஊட்டிவிட்ட சோற்றை இரசித்துச் சுவைத்து மென்றேன்.

**மரபுத்தொடரும் பொருளும்**

- **மனக்கோட்டை** - வெறும் கற்பனை
- **தொன்று தொட்டு** - நெடுங்காலமாய் / ஆதிகாலத்திலிருந்து

## நடவடிக்கை 1

சரியான மரபுத்தொடரை எழுதுக.




1. திருமதி அபிராமியின் குடும்பத்தினர் நெடுங்காலமாகவே மட்பானை செய்யும் தொழிலைச் செய்து வருகின்றனர்.
2. பொறுப்பின்றி ஊர் சுற்றித் திரிந்த முகிலன், சொந்தமாக ஒரு பேரங்காடியை விலைக்கு வாங்கி வியாபாரம் செய்ய வேண்டும் என்று பகல் கனவு காண்கின்றான்.
3. நெடுங்காலமாய்ப் பாட்டி வைத்தியம் செய்து வரும் பார்கவியின் பாட்டி மிகவும் திறமைசாலி என அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.
4. மாட் ஜெனின் எனும் வாலிபன் வெறும் கற்பனை உலகத்திலேயே வாழ்ந்து கொண்டு நேரத்தைக் கழித்தான்.

## நடவடிக்கை 2

மரபுத்தொடருக்கு ஏற்ற சூழலை உருவாக்குக.

**அ மனக்கோட்டை**

**ஆ தொன்று தொட்டு**

4.6.4 - நான்காம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் கதைகளை வாசித்து அறிதல்.
- மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் கூறப் பணித்தல்.
- மரபுத்தொடரை வாக்கியங்களில் எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 5

# இலக்கணம்

## இடைச்சொற்களை அறிக. ஆகவே, எனவே, ஆகையால், ஏனென்றால்

- பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் அல்லது முன்னும் பின்னும் இருந்து பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.
- இவற்றால் தனித்து நிற்க இயலா.
- இடைச்சொற்களுள் வாக்கியங்களைக் கருத்தால் இணைக்கப் பயன்படுபவை **இணைப்பிடைச் சொற்கள்** என்று அழைக்கப்படும்.

**எடுத்துக்காட்டு:**

1. ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்வதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். **ஏனென்றால்**, ஆரோக்கியமான வாழ்வுக்கு அ∴து அடித்தளமாகும்.
2. நீங்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறது. **எனவே**, நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்.
3. இடைவிடாது கனத்த மழை பெய்தது. **ஆகையால்**, வெள்ளப் பேரிடர் ஏற்பட்டது.
4. நாம் எப்போது தவறு செய்வோம் என்று எதிரிகள் காத்திருக்கின்றனர். **ஆகவே**, நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.
5. கல்வி அதிகாரி நம் பள்ளிக்கு நாளை வருவார். **ஆகவே**, மாணவர்கள் அனைவரும் பள்ளிக்குத் தவறாமல் வர வேண்டும்.
6. செம்மலரும் பனிமலரும் இரட்டைச் சகோதரிகள். **எனவே**, இருவரும் ஒரே மாதிரியான குணங்களைப் பெற்றிருக்கின்றனர்.
7. மாணவர்கள் தினசரி நாளிதழ்களை வாசிக்க வேண்டும். **ஏனென்றால்**, அவை பலவகைச் செய்திகளைத் தாங்கி வருகின்றன.

**தகவல் அறிக**

- இடைச்சொற்கள் தனியே நின்று பொருள் உணர்த்தாது.
- இரு சொற்களுக்கு இடையே வருவதால் இடைச்சொல் எனப்படுகிறது.
- இடைச்சொல் எட்டு வகைப்படும்.

## நடவடிக்கை 1

சரியான இடைச்சொல்லை எழுதி நிறைவு செய்க.

1. நாளை நம் பள்ளியில் பரிசளிப்பு விழா நடைபெறவிருக்கின்றது. __________ நீங்கள் அனைவரும் பள்ளிக்குக் குறித்த நேரத்தில் வந்துவிட வேண்டும்.
2. தம்பி எல்லாப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றான். __________ வகுப்பாசிரியர் அவனுக்குப் பரிசு கொடுத்தார்.
3. அடுத்த இரண்டு நாள்களுக்கு நமக்குப் பொது விடுமுறை. __________ நாம் அனைவரும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடவுள்ளோம்.
4. காகம் ஒன்று தாகத்தால் தவித்தது. __________ அது தண்ணீரைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தது.

ஆகவே | எனவே | ஆகையால் | ஏனென்றால்

## நடவடிக்கை 2

சரியான இடைச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்திடுக.

| | | |
|---|---|---|
| நெடுஞ்சாலையில் அதிகமான வாகனங்கள் சென்றன. | ஆகவே | அவர் வசிக்கும் பகுதி மக்கள் பலரையும் அழைத்து விருந்து அளித்தார். |
| மதியழகன் தம் மகளின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினார். | எனவே | அவன் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றான். |
| தமிழரசியைப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர். | ஆகையால் | அவள் சிறப்பான முறையில் திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவித்தாள். |
| அமலனுக்குக் கடுமையான காய்ச்சல் கண்டது. | ஏனென்றால் | வாகன நெரிசல் ஏற்பட்டது. |

5.3.20 - ஆகவே, எனவே, ஆகையால், ஏனென்றால், ஏனெனில், ஆனால், ஆதலால் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இடைச்சொற்களையும் வாக்கியங்களையும் வாசித்து அறிதல்.
- வாக்கியங்களில் சரியான இடைச்சொல்லை எழுதப் பணித்தல்.
- சரியான இடைச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# தொகுதி 5
## கலையும் கதையும்
## பாடம் 1
## கேட்போம் அறிவோம்

### வினா விடுத்திடுக.




### நடவடிக்கை 1

கட்டத்தில் உள்ள நடவடிக்கைக்கு ஏற்ப ‘ஆ’, ‘ஓ’, எழுத்துகளைக் கொண்ட வினாக்களைக் கேட்டிடுக.

**எடுத்துக்காட்டு:**
இதுதான் பரத நாட்டியமா?
உனக்குப் பரதம் தெரியுமோ?

1.6.5 - ‘ஆ’, ‘ஓ’ எனும் வினா எழுத்துகளைக் கொண்ட வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ‘ஆ,’ ‘ஓ’ சேர்த்த வினாக்களை அறியச் செய்தல்.
- தாயக்கட்டையை உருட்டி விளையாட்டினை விளையாடுதல்.
- படங்களுடன் ‘ஆ,’ ‘ஓ’ சேர்த்து வினாக்கள் உருவாக்கிக் கேட்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

பாடம் 2

# தக்காளித் திருவிழா

## வாசித்து அறிக.



ஸ்பெயின் நாட்டில் தக்காளித் திருவிழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகிறது. 1959ஆம் ஆண்டு முதல் இவ்விழாவைக் கொண்டாட அரசாங்கம் அனுமதித்தது. 2002ஆம் ஆண்டு முதல் சர்வதேச சுற்றுலா விழாவாக இத்திருவிழா அறிவிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம், கடைசி புதன்கிழமை ஸ்பெயின் நாட்டிலுள்ள புயூனால் பகுதியில் வேலன்சியன் நகரில் இது கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. காலை மணி 10:00க்கு வழுக்கு மரம் ஏறுவது என்ற விளையாட்டோடு இவ்விழா துவங்குகிறது.

இதைக் காணும் மக்கள் முகத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் பொங்கும். வழுக்கு மரத்தில் ஓரிருவர் ஏறியவுடன் காலை மணி 11:00க்குத் தக்காளித் திருவிழா களைகட்ட ஆரம்பிக்கும். வண்டிகளில் தக்காளிகளைக் கொண்டு வந்து வீதிகளில் கொட்டுவார்கள். பார்வையாளர்கள், பங்கேற்பாளர்கள் அனைவரும் கண் கவசம், கையுறை, மூக்குக் கவசம் போன்றவற்றை அணிந்து கொள்வர்.

நசுங்கிய தக்காளிகளை அனைவரும் அடித்துப் பிழிந்து குளித்து விளையாடுவர். அந்தச் சிறிய நகரம் சிவப்பு நகரமாகக் காட்சியளிக்கும். எங்குப் பார்த்தாலும் மகிழ்ச்சி எல்லை விரித்தாடும். விளையாட்டுகள் முடிந்த பின்னர், மக்கள் குளங்களுக்குச் சென்று குளித்துத் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்வர்.

திருவிழாவிற்குப் பின்னர் வீதிகள் அனைத்தும் முறையாகச் சுத்தம் செய்யப்பட்டு, மீண்டும் பளிச்செனக் காட்சி தரும். உள்ளங்களின் மகிழ்ச்சி, அன்பு, நகைச்சுவை ஆகியவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறி விளையாடிக் கொள்கின்றனர். இச்செயல் அவர்களின் ஒருமைப்பாட்டையும் அன்பையும் விளக்குகின்றது. ‘லா டோமாடினா’ எனப்படும் இந்தத் திருவிழா இன்று பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படுகின்றது.

## நடவடிக்கை 1

கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.

1. இவ்விழாவை எப்போது அரசாங்கம் அங்கீகரித்தது?

2. இவ்விழா எப்படித் தொடங்கப்படுகின்றது?

3. எவ்வாறான பாதுகாப்பினை மக்கள் அச்சமயம் கடைப்பிடிக்கின்றனர்?

4. இத்திருவிழாவின்போது நகரத்தின் நிலைமை எப்படி இருக்கும்?

5. திருவிழாவைக் கொண்டாடும் மக்கள் கட்டொழுங்கு மிக்கவர்கள் எனும் கூற்றை விளக்கும் வரிகள் யாவை?

6. இவ்விழாவின் மூலம் வெளிப்படும் மக்களின் உணர்வு யாது?

## நடவடிக்கை 2

வாக்கியம் அமைத்து வாசித்திடுக.

- சிறப்பு :
- உற்சாகம் :
- நகரம் :
- உள்ளம் :
- கடைவீதி :
- தூய்மை :
- நகைச்சுவை :
- பரிமாறி :
- பார்வையாளர் :
- திருவிழா :

2.6.4 - பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- உரைநடைப் பகுதி தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கச் செய்தல்.
- சொற்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களை எழுதுதல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 3

# மனுநீதிச் சோழன்

## கதையை வாசித்திடுக.

வெகுகாலத்திற்கு முன் மனுநீதிச் சோழன் என்ற ஓர் அரசர் இருந்தார். குடிமக்களிடம் மிகவும் அன்பு உடையவர். நீதி நெறி தவறாத சத்தியவான். அவரின் அரண்மனை வாயிலில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. துன்பம் அடைந்தவர்கள் அந்த மணியை அடித்தால் அரசர் உடனே விசாரிப்பார்.


மனுநீதிச் சோழருக்கு வீதிவிடங்கன் என்ற மகன் இருந்தான். வீதிவிடங்கன் ஒருநாள் தேரில் ஏறி கோவிலுக்குச் செல்லும்பொழுது ஒரு பசுவின் கன்று துள்ளிக் குதித்து ஓடி வந்தது. அக்கன்று தேர்க்காலில் அகப்பட்டு இறந்து போனது. தாய்ப்பசு கதறிக் கொண்டு கண்ணீருடன் அரண்மனை வாயிலில் வந்து மணியை அடித்தது. அரசரும் வெளியில் வந்தார்.

தாய்ப்பசு அரசரைத் தன் கன்று இறந்து கிடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றது. அரசர் மிகுந்த வருத்தம் கொண்டார். தமது தனயனை இதே போல தேர்க்காலில் இட்டுத் தண்டிக்கச் சொன்னார். ஆனால், அமைச்சர்கள் யாரும் இதனைச் செயல்படுத்த முன்வரவில்லை. எனவே, அரசரே தாய்ப்பசுவிற்கு நீதி வழங்க தமது தனயனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றார்.




## நடவடிக்கை 1 தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுக.

அ




ஆ




3.6.6 - 80 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தனிப்படத்தைக் கொண்ட கதையை வாசிக்கப் பணித்தல்.
- கதையில் கூறப்பட்ட கருத்துகளைக் குழுமுறையில் உரையாடச் செய்தல்.
- தனிப்படங்களுக்கு ஏற்பக் கதையை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



அப்துல் கலாம்

- சிறந்த விஞ்ஞானி.
- ஏவுகணைச் சிற்பி.



சர்.சி.வி இராமன்

- இயற்பியல் மேதை.
- இராமன் விளைவு எனும் விதியைக் கண்டுபிடித்தவர்.



மேரி கியூரி

- கதிர்வீச்சு தொடர்பான ஆராய்ச்சியைத் தொடங்கினார்.



வ.உ.சிதம்பரனார்

- ஆங்கிலேய வணிகர்களை எதிர்த்துப் போராடியவர்.
- கப்பலோட்டிய முதல் தமிழர்.

**திருக்குறளும் பொருளும்**

- **தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
  **தோன்றலின் தோன்றாமை நன்று. (236)**

ஒரு துறையைச் சார்ந்து இருக்க எண்ணங்கொண்டவர்கள் அத்துறையில் பிறர் புகழும்படியாகச் சிறந்து விளங்க வேண்டும். இல்லையேல் அத்துறையில் ஈடுபடாதிருத்தல் நல்லது.

QR நோக்குக் குறியீடு

https://youtu.be/iE4wsLC5PgQ?t=3

## நடவடிக்கை 1

திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.

4.3.4 - நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அறிஞர்களையும் அவர்களின் சாதனைகளையும் பற்றி உரையாடுதல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுதல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் சரியான வரிவடிவத்துடன் எழுதிக் காட்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## தொடர் வாக்கியம் அறிக.



நேற்று நாம் படித்த தொடர் வாக்கியம் பற்றி உனக்கு விளங்கியதா வள்ளி?



நன்றாக விளங்கியது மதன். **ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ, பல பயனிலைகளைக் கொண்டு முடிவது தொடர் வாக்கியம்** எனப்படும்.



சில எடுத்துக்காட்டு வாக்கியங்களைக் கூறுவாயா வள்ளி?



இதோ சொல்கிறேன் மதன். திலகன் முறையாகப் பாடங்களைப் படித்தான்; தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெற்றான்.



மிக்க நன்றி வள்ளி. **ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அதனால், இதனால், ஏனெனில், இருப்பினும் முதலிய இணைப்புச் சொற்களாலும் கருத்துத் தொடர்பாலும் இணைந்துவரின் அதுவும் தொடர் வாக்கியம்**தானே!



மிகச் சரியாகச் சொன்னாய் மதன். வா, இருவரும் சேர்ந்து இன்னும் சில தொடர் வாக்கியங்களை எழுதுவோம்.

## நடவடிக்கை 1

தொடர் வாக்கியங்களாக எழுதுக.

1 கிளி பறந்து வந்தது.
கிளி மாம்பழத்தைக் கொத்தியது.



2 முகிலனுக்குக் காய்ச்சல் கண்டது.
அவன் பள்ளிக்கு வரவில்லை.



3 அன்பழகன் வேகமாக ஓடினான்.
அன்பழகன் முதல் பரிசை வென்றான்.

4 விவசாயிகள் வயலை உழுதனர்.
விவசாயிகள் நாற்றுகளை நட்டனர்.
விவசாயிகள் நாற்றுகளுக்கு உரமிட்டு நீர்பாய்ச்சினர்.



5 செல்வி காலையில் எழுந்தாள்.
செல்வி கருத்துடன் கற்றாள்.
செல்வி வாழ்வில் வென்றாள்.

6 நண்பர்கள் வீட்டிற்கு வந்தனர்.
அம்மா சுவையான உணவு வகைகளைச் சமைத்தார்.



7 தேன்மொழி சிறப்பாக நடனம் ஆடினாள்.
அனைவரும் அவளைப் பாராட்டிச் சிறப்பித்தனர்.

5.4.7 - தொடர் வாக்கியம் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்து அறிதல்.
- தொடர் வாக்கியங்களைக் கண்டறிந்து வாசிக்கப் பணித்தல்.
- தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# தொகுதி 6
## அனுபவங்கள்

## பாடம் 1
## ஒரு நாள் சுற்றுலா

**கலந்துரையாடுக.**



அங்கே பாருங்கள்! அழகிய புள்ளிமான்கள்!

நேராக நில்லுங்கள், கொஞ்சம் சிரியுங்களேன்!

இந்தக் கடையில் உணவு சுவையாகவும் சுத்தமாகவும் இருக்கின்றது.

வாருங்கள் ஐயா, உங்களுக்குப் பிடித்த நினைவுப் பொருள்களைத் தெரிவு செய்யுங்கள்.



**நடவடிக்கை 1**


தொடர்படத்தையொட்டிய சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.

## நடவடிக்கை 2

'ஒரு நாள் சுற்றுலா' என்ற தலைப்பில் தொடர்படத்தையொட்டிய அனுபவக் கதை ஒன்றனைக் கூறுக.

## நடவடிக்கை 3

தொடர்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.




வீடு திரும்புதல் - வெயில் - தூய்மையற்ற அங்காடி - குளிர்பானம் - வயிற்றுவலி - மருத்துவரிடம் செல்லுதல் - மருத்துவமனையில் அனுமதி - சிகிச்சை

1.7.14 - தொடர்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- தொடர்படங்களுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுதல்.
- தொடர்படங்களுக்கு ஏற்ப கதை ஒன்றனைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச்செயல்படுதல்

## பாடம் 2
# நிறைந்த வாழ்வு

## வாசித்து அறிக.




வாழ்வில் எந்நாளும் மகிழ்ச்சி பொங்க வாழ இயலுமா? இதோ, நாம் பின்பற்ற வேண்டிய சில எளிய முறைகள். நம்மிடம் இல்லாததை எண்ணி ஏங்கித் தவிப்பதைவிட, நமக்கு எது கொடுக்கப்பட்டதோ அதற்காக இறைவனுக்கு நன்றி கூற வேண்டும்.

வாழ்க்கையில் எதையும் எதிர்மறையாகக் காணாமல், நேர்மறையாக எதிர்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் பழைய கோணத்தில் செல்லாமல், புதிய கோணத்தில் மாற்றிச் சிந்திக்க வேண்டும். அனைவரின் வாழ்க்கையும் அழகாகவும் அர்த்தம் உள்ளதாகவும் மாறும் என்பதை உணர்த்தும் ஒரு நிகழ்ச்சியைப் படியுங்கள்.

பார்வையற்ற சிறுவன் ஒருவன் வீதியில் இருக்கும் ஒரு கடைக்கு முன்புறம் அமர்ந்து கொண்டு பிச்சை எடுக்கிறான். அவன் அருகே, ‘நான் பார்வையற்றவன், அருள்கூர்ந்து உதவுங்கள்’ என்ற வாசகம் எழுதப்பட்ட பலகை இருந்தது. அவனது கையில் காசு போடுவதற்கு ஒரு பாத்திரமும் இருந்தது.




பலர் அவ்வழியே சென்றாலும் அவனைக் கண்டும் காணாமலும் அவ்விடத்தைக் கடந்தனர். சற்று நேரத்திற்குப் பிறகு ஒருவர் அங்கு வந்தார். சில்லறையை எடுத்துப் பாத்திரத்தில் போட்டார். அருகில் இருந்த பலகையில் வேறு ஒரு வாசகத்தை மாற்றி எழுதினார். அவர் சென்ற பிறகு பாத்திரத்தில் சில்லறைக் காசுகள் நிரம்பத் தொடங்கின. சிறுவனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

மீண்டும் அந்நபர் மாலையில் அவ்விடத்திற்கு வந்தார். அவரின் கால் ஓசையைக் கொண்டு அந்தச் சிறுவன் அவரைக் கண்டு கொண்டான். “நீங்கள்தானே இந்தப் பலகையை மாற்றினீர்கள்? என்ன எழுதி வைத்தீர்கள்? எப்படி இப்போது மட்டும் நிறைய பேர் எனக்கு உதவி செய்கிறார்கள்?” என்று அடுக்கடுக்கான கேள்விகளைத் தொடுத்தான். ‘இன்று மிகவும் அழகான நாள். ஆனால், அதை என்னால் பார்க்க முடியவில்லை...’ என்று மாற்றி எழுதி வைத்தேன்.

இரு வாசகங்களுமே சிறுவன் குருடன் என்பதைத்தான் குறிப்பிடுகின்றன. ஆனால், முதல் வாசகம் சிறுவன் பார்வை இல்லாதவன் என்று மட்டுமே சொல்கிறது. இரண்டாம் வாசகமோ நம் அனைவருக்கும் பார்வை இருப்பதை நினைவுபடுத்துகிறது. சிறுவனிடம் இல்லாத ஒன்று தம்மிடம் இருப்பதைக் கண்டதும் நிறைய உள்ளங்கள் உதவ முன்வருகின்றன.

## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியில் உள்ள கருச்சொற்களை அடையாளம் கண்டு வாசித்திடுக.

**அருஞ்சொற்கள்**

- கோணத்தில்
- வீதியில்
- சில்லறை
- வாசகம்
- அருள்கூர்ந்து

## நடவடிக்கை 2

கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.

1. மகிழ்ச்சியாக வாழக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் யாவை?
2. பார்வையற்ற சிறுவன் எழுதிய வாசகத்திற்கு ஏன் வரவேற்பு இல்லை?
3. சிறுவன் ஏன் வியந்து போனான்?
4. இரண்டாவது வாசகம் பலரின் உள்ளத்தைக் கவர்ந்த காரணம் யாது?

2.4.8 - வாசிப்புப் பகுதியிலுள்ள கருச்சொற்ளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள கருச்சொற்களைக் கண்டறிந்து கூறச் செய்தல்.
- வாசிப்புப் பகுதி தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்கு விடையளிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 3

# ஓய்வு நேர நடவடிக்கைகள்

## தொடர்படங்களையொட்டி வாக்கியங்கள் அமைத்திடுக.




## நடவடிக்கை 1

தொடர்படங்களையொட்டி சில வாக்கியங்களை எழுதிடுக.



3.4.13 - தொடர்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- தொடர்படங்களையொட்டிய சில வாக்கியங்களைச் சுயமாக அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.

கோகுலன் மரத்தின் மீது ஏறி பசுமையான ஒரு கிளையை வெட்டிக் கொண்டிருந்தான். கை தவறி ஆற்றினுள் கத்தி விழுந்தது.

"ஐயையோ! புதுக் கத்தியாயிற்றே! அம்மாவுக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்...." என்று வருத்தப்பட்டான் கோகுலன். சிறுவயதில் படித்த விறகு வெட்டியின் கோடரியும் தேவதையும் என்ற கதை நினைவுக்கு வந்தது. அந்தக் கதையில் வந்ததுபோல திடீரென தேவதை வந்து நின்றால் எப்படியிருக்கும் என்று கோகுலன் எண்ணிப் பார்த்தான். கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டான். அடுத்த நொடியில் ஆற்றிலிருந்து ஒரு தேவதை வெளியே வந்தது. கோகுலன், "தேவதை...! தேவதை...!" எனக் கூச்சலிட்டான். இந்தத் தேவதை தங்கக் கத்தியை எடுத்து உன்னுடையதா என்று கேட்கும், நான் இல்லை என்பேன்... பின்பு வெள்ளிக் கத்தியைக் காட்டும்... இது உன்னுடையதா என்று கேட்கும். நான் மறுப்பேன். இறுதியில் என் கத்தியை எடுத்துக் கேட்கும்போது ஆமாம் என்பேன். எனது நேர்மையைப் பாராட்டி, தேவதை மூன்று கத்திகளையும் எனக்கே கொடுத்துவிட்டுச் சென்றுவிடும் என்று கற்பனை செய்தான்.

"கோகுலா!" என்று தேவதையின் குரல் ஒலித்தது. "பசுமையைப் போற்ற வேண்டிய நீயே மரக் கிளைகளை வெட்டலாமா? மரங்களை வெட்டிச் சேதப்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை நீ அறியவில்லையா?" என்றது. கோகுலன் திகைத்தான். **குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்** என்பதன் பொருளை அப்போது உணர்ந்தான்.



தேவதை தொடர்ந்தது. "அருமைச் சிறுவனே! நீ விளையாடுவதற்குக் கீழே விழுந்து கிடக்கும் குச்சிகளைப் பயன்படுத்திக் கொள். அக்குச்சிகளைத் தேவையற்றது என்று எண்ணாதே! **சிறு துரும்பும் பல் குத்த உதவும்** என்பதைப் புரிந்து கொள்," என்றது.

"என்னை மன்னித்துவிடு தேவதையே!" என்றான் கோகுலன். சிரித்துக் கொண்டே தேவதை ஆற்றில் விழுந்த கத்தியையும் ஒரு மரக் கன்றையும் கொடுத்து, "இந்த மரக்கன்றை ஆற்றின் கரையோரம் நட்டுவிட்டுப் போ..." என்று கூறி மறைந்தது.

**பழமொழிகளும் பொருளும்**

- **குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.**
  குற்றம் செய்தவனின் மனசாட்சி அவனை வருத்திக் கொண்டிருக்கும்.
- **சிறு துரும்பும் பல் குத்த உதவும்.**
  தேவையற்றது அல்லது அற்பமானது என நாம் நினைக்கும் பொருளும் தக்க வேளையில் நமக்கு உதவும்.

## நடவடிக்கை 1

சூழலுக்கேற்ற பழமொழியை எழுதுக.

1. அண்ணனின் கண்ணாடிக் கோப்பையைத் தம்பி உடைத்து விட்டான். அதனால், மனம் வருந்தினான்.

2. சுண்டெலியை அற்பமான உயிர் எனச் சிங்கம் நினைத்தது. ஆனால், சிங்கம் வலையில் சிக்கிக் கொண்டபோது சுண்டெலிதான் காப்பாற்றியது.

3. நண்பனின் கதைப்புத்தகத்தைக் கோகுலன் தொலைத்துவிட்டான். அவன் அதனை எண்ணிப் பல நாள் வருந்தினான். நண்பனிடம் சென்று மன்னிப்புக் கோரினான்.

4. கயல்விழி பழைய நாளிதழ்களையும் சஞ்சிகைகளையும் தேவையில்லை என்ற எண்ணத்தில் குப்பையில் போட்டாள். ஆனால், அதிலுள்ள சில படங்களும் செய்திகளும் திரட்டேடு செய்ய உதவும் என்பதைத் தன் தாயார் கூற அறிந்து வருந்தினாள்.

4.7.4 - நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் விளக்கி உரையாடச் செய்தல்.
- பழமொழிகளுக்கேற்பக் குழுமுறையில் வேறு ஒரு சூழல் அல்லது கதையை உருவாக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 5

# இலக்கணம்

## அரைப்புள்ளி, முக்காற்புள்ளி அறிக.

### அ அரைப்புள்ளி ( ; )

தொடர் வாக்கியங்களில் பயனிலைகளுக்குப் பின் அரைப்புள்ளி இட வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

- திருமதி புனிதா இரவுச் சந்தைக்குச் செல்ல எண்ணினார்; வீட்டு வேலை மிகுதியால் மறந்து போனார்.

;

### ஆ முக்காற்புள்ளி ( : )

வாக்கியத்தில் கூறிய ஒன்றை விரித்துக் கூறும்போது முக்காற்புள்ளி இடவேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

- வாழ்வு இரு கூறுகளைக் கொண்டது: ஒன்று உயிர் வாழ்வு, மற்றொன்று உடல் வாழ்வு.

:

வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ, அதற்கு இசைந்த இன்னொரு கருத்தைக் குறிக்கவோ முக்காற்புள்ளி இட வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

- உடல் நலத்தைப் பாதுகாக்க எல்லா வகைகளிலும் முயற்சி செய்: உடல் நலம் இல்லையேல் வாழ்வில் மகிழ்ச்சி இருக்காது.

## நடவடிக்கை 1

சரியான நிறுத்தக்குறியை இடுக.

1. சிறுவர்கள் மண்டபத்தில் நுழைந்தனர் ☐ அவரவர் இருக்கையில் அமர்ந்தனர்.
2. தமிழர்கள் தனிப்பண்பு உடையவர்கள் ☐ வீரத்தில் சிறந்தவர்கள் ☐ நன்றி மறவாதவர்கள் ☐ விருந்தோம்பலில் சிறந்தவர்கள்.

5.5.4 - அரைப்புள்ளி, முக்காற்புள்ளி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- அரைப்புள்ளி, முக்காற்புள்ளி பயன்பாட்டினை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் சரியான நிறுத்தக்குறிகள் இடும் பயிற்சியைச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 7
## சுற்றுச்சூழலும் நாமும்

## பாடம் 1
## தோட்டம் போடுவோம்

**சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.**






## நடவடிக்கை 1

லகர, ழகர, ளகர எழுத்துச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.

1.7.15 - லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்களை வாசித்தல்.
- லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.
- சொற்களைப் பயன்படுத்திக் குழுமுறையில் உரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## நடவடிக்கை 2

கவிதையில் உள்ள லகர, ழகர, ளகர எழுத்துச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.



வெள்ளை நிறத்தில் ஒரு சேவல்
வேங்கை மலையில் வாழ்ந்ததுவாம்!
கொள்ளை அழகு என்றேதான்
குருவிகள் அதனைப் புகழ்ந்திடுமாம்!

பார்க்கும் உணவைச் சேவலுமே
பாய்ந்தே சென்று தின்றிடுமாம்!
கேட்கும் மற்ற கோழிகளைக்
கீழே தள்ளிக் கொத்திடுமாம்!

ஒருநாள் அந்தச் சேவலுமே
ஓடைக் கரையில் வரும்போது
மரத்தில் இருந்த காகத்தின்
மலர்ந்த முகத்தைப் பார்த்ததுவாம்!

கரிய நிறத்தில் உடல் இருந்தும்
கண்டேன் உன்றன் மகிழ்ச்சியினை
ஏனோ உனக்குக் கவலையில்லை
என்றே சொல்லி வருந்தியதாம்!

உண்ணக் கொடுத்து உண்டாலே
உள்ளம் திளைக்கும் மகிழ்ச்சியிலே
என்றே காகம் இயம்பியதே
இதுதான் இனிக்கும் நீதியுமே!

**- குலேந்திரன்**
(குங்குமம்)



செவிமடுத்திடுக

## பாடம் 2

# அன்புச் சோலை

### பதாகையை வாசித்து அறிக.

## நமது பூமி அன்புச் சோலை

சொற்பொழிவும் கருத்தரங்கமும்
நாள் : 24. 03. 2020
நேரம் : மாலை மணி 6:00 தொடக்கம்
இடம் : நகராண்மைக் கழக மண்டபம்
நுழைவு : இலவசம்

குறிப்பு : இயற்கையை நேசிக்கும் அனைத்து நல்லுள்ளங்களையும் அன்புடன் வரவேற்கிறோம்.

- வருகை புரியும் அனைவருக்கும் ஒரு மாங்கன்று அன்பளிப்பாகத் தரப்படும்.

**திரண்டு வருக! நன்மை அடைக!**



### நடவடிக்கை 1

பதாகையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசித்துக் காட்டுக.

### நடவடிக்கை 2


குழுமுறையில் ‘இயற்கையை நேசிப்போம்’ என்ற கருப்பொருளில் பதாகை ஒன்றனைத் தயாரித்து வாசித்திடுக.

2.3.9 - பதாகையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- பதாகையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- குழுமுறையில் ‘இயற்கையை நேசிப்போம்’ எனும் கருப்பொருளுக்கேற்பப் பதாகை ஒன்றனை உருவாக்கி வாசித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்



பாடம் 3

# அழகோ அழகு



## வாசித்து எழுதுக.

1
- **மலைத்** தொடர்களின் அழகை இரசித்தேன்.
- பாட்டி **மழை** நீரைச் சேமித்து வைத்தார்.


2
- வயலில் உழவர்கள் **வேலை** செய்தனர்.
- மாலை **வேளையில்** அவர்கள் வீடு திரும்புவர்.

3
- அக்காள் தண்ணீரை **அள்ளினாள்**.
- குளத்தில் **அல்லி** மலர்கள் பூத்திருந்தன.

4
- ஆடுகள் இலை **தழை**களைத் தின்றன.
- தம்பி தன் **தலை**யை ஆட்டிச் சிரித்தான்.

5
- கிளியின் **அலகு** வளைந்திருந்தது.
- இயற்கையின் **அழகு** என் மனத்தைக் கவர்ந்தது.





## நடவடிக்கை 1

லகர, ழகர, ளகரச் சொற்கள் அடங்கிய வாக்கியங்களை வாசித்திடுக.

## நடவடிக்கை 2

சரியான லகர, ழகர, ளகரச் சொற்களை எழுதுக.

**1**
- கடற்கரையில் நின்று கடல் _____ பார்த்து இரசித்தோம்.
- தம்பியின் தலைமுடியை அம்மா வாஞ்சையுடன் _____ ந்தவாறு அமர்ந்திருந்தாள்.
- மாணவனின் பெயரைச் சொல்லி ஆசிரியர் _____ த்தார்.

**2**
- வெகுதூரம் நடந்ததால் தங்கைக்குக் கால் _____ ஏற்பட்டது.
- தோட்டத்திற்குச் செல்லும் _____ கரடுமுரடாக இருந்தது.
- காற்றை _____ என்றும் கூறலாம்.

**3**
- குரங்கின் _____ நீளமாக இருந்தது.
- வீரர்கள் கையில் கூர்மையான _____ வைத்திருந்தனர்.
- முதியவர் மணமக்களை 'நீடூழி _____ க' என வாழ்த்தினார்.

**4**
- தம்பி புலியைக் கண்டு _____ பிடித்தவன் போல் அலறினான்.
- புத்தகங்களை மாணவர்கள் _____ க்கக் கூடாது.
- பச்சை நிற _____ ஒன்று மரக்கிளையில் அமர்ந்திருந்தது.

**5**
- அம்மா குழந்தைகளைக் கொஞ்சிக் _____ னார்.
- மரத்தடியில் அமர்ந்திருந்த தாத்தாவை _____ கொட்டியது.
- குழந்தையை _____ என்றும் கூறுவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாள் | அளை | வழி | குலவி | கிளி |
| வால் | அழை | வலி | குளவி | கிழி |
| வாழ் | அலை | வளி | குழவி | கிலி |

3.4.14 - லகர, ழகர, ளகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- லகர, ழகர, ளகரச் சொற்கள் கொண்ட வாக்கியங்களை வாசித்தல்.
- சூழல் படத்தைப் பார்த்து குழுமுறையில் உரையாடுதல்.
- பொருத்தமான வேறு லகர, ழகர, ளகரச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## நல்வழிச் செய்யுளையும் பொருளையும் அறிக.



**நல்வழியின் பொருள்**

ஒருவன் தனது வருமானத்திற்கு மிஞ்சிய செலவு செய்தால் கௌரவம் கெட்டு அறிவிழக்க நேரிடும். இதிலிருந்து தப்பிக்க, தான் போகும் இடங்களில் உள்ள அனைவரிடமும் திருடன் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவான். ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வரும் பாவத்திற்கு ஆளாகித் தன்னிடம் அன்புகொண்ட அனைவருக்கும் பொல்லாதவனாக விளங்க நேரிடும். இவ்வுண்மையை ஆராய்ந்து உணரவேண்டும். வரவுக்கு மிஞ்சி செலவு செய்வதால் பழி பாவங்களுக்கு ஆளாக நேரிடும். ஆகவே, வரவுக்குத்தக்க செலவு செய்ய வேண்டும்; வரவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். செலவைச் சுருக்கிக் கொள்ள வேண்டும்.

## நடவடிக்கை 1

செய்யுளடிகளுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

1. ஆனமுதலில் அதிகஞ் செலவானால
2. மானம் அழிந்து
3. மதிகெட்டுப்
4. போனதிசை எல்லார்க்கும் கள்ளனாய்
5. நல்லார்க்கும் பொல்லனாம் நாடு

## நடவடிக்கை 2

செய்யுளையும் பொருளையும் மனனம் செய்து கூறுக.

## நடவடிக்கை 3

செய்யுளுக்கு ஏற்ப வேறு சூழல் அல்லது கதை ஒன்றனைக் குழுவில் உருவாக்கிக் கூறுக.

**சொற்களஞ்சியம்**

- வியாபாரம்
- பேரிழப்பு
- ஆசிபெற்று
- வரவு
- கௌரவம்

4.10.2 - நான்காம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுதல்.
- செய்யுளடிகளுக்கு ஏற்ற பொருளை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


பாடம் 5

# இலக்கணம்

## நிறுத்தக்குறிகள் அறிக.

### அ ஒற்றை மேற்கோள் குறி ( ‘ ’ )

மற்றவரின் கருத்தையோ மொழியையோ சொற்றொடரில் எடுத்தாளும்போது ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.



**எடுத்துக்காட்டு :**

தமிழ்மொழி இனிமையும் இளமையும் கொண்டது; வளம் நிறைந்தது. ‘இவள் என்று பிறந்தவள்... என்ற இயல்பை அறியாதவள் எங்கள் தாய்’ என்று பாரதியாரும் கூறிச் சென்றுள்ளார்.

- ஏதேனும் ஒரு குறிப்பைச் சிறப்பாக எடுத்துக்காட்ட ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

**எடுத்துக்காட்டு :**

தொல்காப்பியத்தை ‘தமிழர்களின் உயிர் நூல்’ எனக் கூறுவார் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்.

### ஆ இரட்டை மேற்கோள் குறி ( “ ” )

ஒருவர் கூறிய சொற்களை அப்படியே எடுத்தாளும்போது, அவர் கூறிய மொழிகளின் தொடக்கம், முடிவு ஆகிய இரு இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.



**எடுத்துக்காட்டு :**

“எங்கள் பள்ளியில் கல்விச் சுற்றுலா ஒன்றனை ஏற்பாடு செய்துள்ளனர் அப்பா,” என்றான் நீலமேகன்.

## நடவடிக்கை 1

ஒற்றை மேற்கோள் குறி, இரட்டை மேற்கோள் குறி ஆகியவற்றைச் சரியான இடத்தில் இடுக.

1. மாணவர்களே! ஒழுக்கம் உயிரை விட மேலானது என்று திருவள்ளுவர் கூறியது போல் நடந்து கொள்ளுங்கள், என்று தலைமையாசிரியர் கூறினார்.

2. திருக்குறளை உலகப் பொதுமறை என்றும் கூறலாம்.

3. நான் நாளை என் அண்ணனின் பட்டமளிப்பு விழாவிற்குச் செல்கிறேன், என்று குகன் தமயந்தியிடம் கூறினான்.

4. தம்பியைக் கவனமாகப் பார்த்துக் கொள், என்று அம்மா அக்காவிடம் கூறிச் சென்றார்.

5. யார் தரையில் நீர் ஊற்றியது? என்று அப்பா எங்களைக் கடிந்து கொண்டார்.

6. மலாக்கா மாநிலம் வரலாற்று மாநிலம் எனும் சிறப்பையும் பெற்றுள்ளது.

7. நாளை நீங்கள் அனைவரும் உங்கள் திரட்டேடுகளைக் கொண்டுவர வேண்டும், என்று ஆசிரியர் கட்டளையிட்டார்.

8. பினாங்குத் தீவை முத்துத் தீவு என்னும் சிறப்புப் பெயர் கொண்டும் அழைப்பர்.

9. மலேசியாவின் நிர்வாக நகரம் புத்ரா ஜெயாவாகும்.

10. லங்காவியின் கழுகுச் சதுக்கம் சுற்றுலாப் பயணிகளிடையே புகழ்பெற்றது.

5.5.5 - ஒற்றை மேற்கோள் குறி, இரட்டை மேற்கோள் குறிகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


**ஆசிரியர் குறிப்பு**

- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசித்துக் காட்டுதல்.
- வாக்கியங்களை மாணவர்கள் உருவாக்கி வாசித்துக் காட்டப் பணித்தல்.
- ஒற்றை மேற்கோள் குறி, இரட்டை மேற்கோள் குறி வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## தொகுதி 8
# இனியதொரு குடும்பம்
## பாடம் 1
# ஒற்றுமை விருந்து

### கலந்துரையாடுக.



- தேநீர் விருந்து
- உறவினர்கள் வருகை
- பொரித்த உணவு
- அறிமுகம்
- மருமகள்
- விருந்தோம்பல்
- பாசிப்பயறு உருண்டை
- பரிமாறுதல்
- நெய்ச்சோறு
- சுற்றத்தார்
- உபசரிப்பு
- புரிந்துணர்வு

### நடவடிக்கை 1

ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.

### நடவடிக்கை 2

ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பட்டியலிட்டு உரையாடுக.

1.7.16 - ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்தி உரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்



பாடம் 2

# அண்ணனின் திருமணம்



## வாசித்து அறிக.



### இருவீட்டார் திருமண அழைப்பிதழ்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (45)

அன்புடையீர்,

நிகழும் **மங்கலகரமான** சார்வரி ஆண்டு வைகாசித் **திங்கள்** 11ஆம் நாள் (ஆங்கிலம் 24.05.2020) ஞாயிற்றுக்கிழமை ரிஷப லக்கனத்தில், காலை மணி 8:30க்கு மேல் 10:30 மணிக்குள்

எண் 15, ஜாலான் ஆர்க்கிட் 6,
தாமான் ஆர்க்கிட்,
41050 கிள்ளான், சிலாங்கூர்.
திரு. திருமதி சுந்தரம் - மீனா
தம்பதிகளின் **குமாரன்**
திருநிறை செல்வன்

**சு. முகில் வர்ணன்**



எண் 24, ஜாலான் லிமாவ் 10,
தாமான் லிமாவ்,
75260 மலாக்கா.
திரு. திருமதி சேது - மாதவி
தம்பதிகளின் **குமாரத்தி**
திருநிறை செல்வி

**சே. இலக்கியா**

இவர்களின் **திருமணம்** கிள்ளான் மாரியம்மன் **ஆலய** மண்டபத்தில் **நடைபெறுவதால்** அவ்வமயம் தாங்கள், தங்கள் **சுற்றமும் நட்பும் சூழ வருகை** தந்து புதுமணத் **தம்பதிகளை** வாழ்த்துவதுடன், தொடர்ந்து நிகழும் விருந்துபசரிப்பிலும் **கலந்து சிறப்பிக்குமாறு** அன்புடன் **அழைக்கின்றோம்**.

தங்களின் மேலான நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்

திரு. திருமதி ப. சுந்தரம் - ச. மீனா திரு. திருமதி ந. சேது - மு. மாதவி

குடும்பத்தினர்

## நடவடிக்கை 1

திருமண அழைப்பிதழை வாசித்து, வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருளை அறிய அகராதியைப் பயன்படுத்துக.

## நடவடிக்கை 2

சொற்களின் பொருளைத் தேர்ந்தெடுத்திடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 | **இறுதி** | தொடக்கம் | முடிவு |
| 2 | **ஈகை** | கொடை | திறமை |
| 3 | **ஈன்றவள்** | பெற்றவள் | உரியவள் |
| 4 | **ஊண்** | பயிர் | உணவு |
| 5 | **இறை** | பாடல் | கடவுள் |
| 6 | **உரு** | வடிவம் | நீர் |
| 7 | **ஒலி** | பொருள் | சத்தம் |
| 8 | **ஒளி** | வெளிச்சம் | சத்தம் |
| 9 | **மாரி** | வண்டி | மழை |
| 10 | **பாரம்** | கனம் | மனம் |
| 11 | **அலறி** | கதறி | கற்றல் |
| 12 | **உரவு** | வலிமை | கடினம் |

## நடவடிக்கை 3

அகராதியைப் பயன்படுத்திச் சொற்களின் பொருளைக் கூறுக.

| | | |
|---|---|---|
| 1 | சிசு | |
| 2 | புரவி | |
| 3 | வலி | |
| 4 | வளி | |
| 5 | யாசகம் | |
| 6 | மனை | |
| 7 | பொய்கை | |
| 8 | மலர் | |
| 9 | பகலவன் | |
| 10 | நேத்திரம் | |
| 11 | தோழன் | |
| 12 | தயை | |
| 13 | ஞாலம் | |
| 14 | குற்றம் | |

2.5.3 - சொல்லின் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- திருமண அழைப்பிதழை வாசித்தல்.
- கருமையாக்கப்பட்ட சொற்களின் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்தப் பணித்தல்.
- அகராதியைப் பயன்படுத்தி நடவடிக்கை 2, 3 ஆகியவற்றைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

பாடம் 3

# சமையல் கற்றேன்

## வாக்கியங்களை வாசித்து எழுதுக.



- எங்கள் சமையல் **அறை** பெரிதாக இருக்கும்.
- மீன்**கறி** சமைக்கும் முறையை அறிய ஆவல் கொண்டேன்.
- பாட்டி **கூறிய**படி நான் மட்சட்டியில் சமைத்தேன்.
- அக்காள் தக்காளிப் பழத்தை **அரை**ப் பாகமாக வெட்டினார்.
- தம்பி வண்ணத்தாளில் **கரி**யின் படத்தை வரைந்தான்.
- சட்டையில் **கறை** படாமல் அப்பா கவனமாக வேலை செய்தார்.
- **கூரிய** முனையைக் கொண்ட கத்தியை அம்மா பாதுகாப்பாக வைத்தார்.
- தங்கை புளியைக் **கரை**த்துக் குழம்பில் ஊற்றினாள்.

## நடவடிக்கை 1

சரியான ரகர, றகரச் சொல்லை அறிந்து எழுதுக.



1. பழுத்த பழங்களைத் தாத்தா ______ .
2. வீரர்கள் சிலர் தங்களின் ______ சவாரி செய்தனர்.
3. எழுதிய கடிதத்தை அண்ணன் ______ போட்டார்.
4. ஆசிரியர் ஆற்றிய ______ அனைவரும் ஆர்வமுடன் கேட்டனர்.
5. நெருப்பிலிருந்து தீப் ______ வந்தது.
6. கடையில் வாங்கிய ______ தம்பி விரும்பி உண்டான்.
7. பறவைகள் ______ தேடிப் பறந்தன.



## நடவடிக்கை 2

ரகர, றகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.

1. குரை : ______
   குறை : ______
2. ஏரி : ______
   ஏறி : ______
3. மரை : ______
   மறை : ______
4. விரகு : ______
   விறகு : ______
5. வரம் : ______
   வறம் : ______
6. சீரிய : ______
   சீறிய : ______
7. நரை : ______
   நறை : ______
8. துரை : ______
   துறை : ______
9. மாரி : ______
   மாறி : ______
10. பரவை : ______
    பறவை : ______
11. திரை : ______
    திறை : ______
12. உரி : ______
    உறி : ______

3.4.15 - ரகர, றகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- ரகர, றகர எழுத்துச் சொற்கள் அடங்கிய வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடர்களையும் பொருளையும் அறிக.

காலை மணி 6:00

வழக்கம் போல இன்றும் அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன். பள்ளி விடுமுறை என்றாலும் அதிக நேரம் உறங்கப் பிடிக்கவில்லை. காலைக் கடன்களைச் செய்யத் தொடங்கினேன்.

காலை மணி 6:45

காலை நேர வாசிப்பு மிக நல்லது என்று ஆசிரியர் கூறியதை வெகுநாள்களாகவே கடைப்பிடிக்கின்றேன். நான் வாங்கிய கதைப்புத்தகங்களுள் ஒன்று என் கையில் தவழ்ந்தது.

காலை மணி 7:15

வாசித்த கதை மனத்தில் நிழலாடுகின்றது. ஓர் அரசர் பக்கத்து ஊருக்கு வருவதாகக் கேள்விப்பட்ட ஊர் மக்கள் அனைவரும் தங்களின் வேலைகளை எல்லாம் அப்படியே போட்டுவிட்டு வேடிக்கை பார்க்கச் சென்றனர். ஒரு வயதான பாட்டி மட்டும் மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டு கூடை முடைந்தாள். அங்கு வந்த வழிப்போக்கன் ஒருவன் "பாட்டி! நீங்கள் ஏன் அரசரைப் பார்க்கப் போகவில்லை?" என்றான். "நான் உழைப்பதை நிறுத்தினால் எனக்கு வருமானம் இருக்காது. எனக்கு என் உழைப்புதான் முக்கியம்," என்றாள். கலகலவெனச் சிரித்தான் வழிப்போக்கன். அரச முத்திரையிட்ட தங்க மோதிரம் ஒன்றைப் பாட்டியிடம் தந்தான். "அரசனைத் தரிசிக்கப் போனவர்கள் திரும்பி வந்ததும், உழைப்பே பெரிது என வாழும் உன்னைத் தரிசிக்க அரசரே இங்கு வந்ததாகக் கூறிச் சென்றார் என்று இம்மோதிரத்தைக் காட்டு," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

காலை மணி 7:30

'உழைப்பின் அருமை' எனும் கதை மனத்தில் **சிலை மேல் எழுத்துப் போல** பதிந்தது. வாங்கிய எல்லா கதைப் புத்தகங்களையும் எடுத்துப் பாதுகாப்பாக வைத்தேன். பாடநூல்கள் உட்பட நாம் வாசிக்கும் அனைத்து நூல்களையும் **கண்ணினைக் காக்கும் இமை போல** காப்பது நமது கடமை என்ற ஆசிரியரின் அறிவுரையை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றேன்.

**உவமைத்தொடர்களும் பொருளும்**

- **சிலை மேல் எழுத்துப் போல** - மனத்தில் அழியாமல் பதிந்திருப்பது
- **கண்ணினைக் காக்கும் இமை போல** - மிகவும் பாதுகாப்பாக

## நடவடிக்கை 1

உவமைத்தொடர்களையும் பொருளையும் மனனம் செய்து கூறுக.

## நடவடிக்கை 2

பொருத்தமான உவமைத்தொடரை எழுதி விளக்குக.

1. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் அனைவரையும் - பாதுகாத்து வருவதைக் கடமையாகக் கொண்டவர்கள்.

2. வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்த பாடங்கள் அனைத்தும் - மனத்தில் பதிந்தன.

3. வயதான தனது பெற்றோரையும் உடன் பிறப்புகளையும் அரவிந்தன் - பாதுகாத்து வந்தான்.

4. உடல் ஊனமுற்ற அச்சிறுவனை உற்றார் உறவினர் அனைவரும் - பாதுகாத்தனர்.

5. சென்ற ஆண்டு கற்ற அனைத்துக் கட்டுரைகளும் இன்றும் - நினைவில் உள்ளன.

6. சுய உடைமைகளை என்றும் - பாதுகாப்பது நம் அனைவரின் கடமை எனத் தாயார் கூறினார்.

## நடவடிக்கை 3

உவமைத்தொடர்களுக்கு ஏற்பச் சூழல் கதை ஒன்றனைக் கூறுக.

4.11.2 - நான்காம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்குறிப்பினை வாசிக்கப் பணித்தல்.
- உவமைத்தொடர்களையும் பொருளையும் விளக்கிக் கூறப் பணித்தல்.
- குழுமுறையில் உவமைத்தொடரைக் கொண்டு சூழலை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 5

# இலக்கணம்

## இயல்பு புணர்ச்சி அறிக.

நிலைமொழியில் (முதல் சொல்லில்) உள்ள ஈற்றெழுத்தும் வருமொழியில் (இரண்டாவது சொல்லில்) உள்ள முதல் எழுத்தும் எவ்வித **மாற்றமுமின்றிப் புணர்வது** இயல்பு புணர்ச்சி ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

| | நிலைமொழி | | வருமொழி | | சொல் |
|---|---|---|---|---|---|
| 1 | மலர் | + | வளையம் | = | மலர்வளையம் |
| 2 | கயல் | + | விழி | = | கயல்விழி |
| 3 | மணி | + | மொழி | = | மணிமொழி |

## நடவடிக்கை 1

சரியாக எழுதுக.

1. மரம் + பெரிது = ______
2. ஒளி + மணி = ______
3. விண் + மீன் = ______
4. வேல் + விழி = ______
5. கண் + காட்சி = ______
6. வாழை + மரம் = ______
7. மணி + மகுடம் = ______
8. ஆணி + வேர் = ______
9. கனி + மொழி = ______
10. தனி + வீடு = ______
11. கண் + சிமிட்டு = ______
12. வயல் + வெளி = ______
13. மடை + வெள்ளம் = ______
14. புயல் + காற்று = ______
15. திணை + வகை = ______
16. தேன் + மொழி = ______
17. மலர் + மாலை = ______
18. சுனை + நீர் = ______

5.7.1 - இயல்பு புணர்ச்சி பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் மாணவர்களைக் கூறப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட சொற்களைச் சரியாகச் சேர்த்தெழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 9
# இலக்கியம் அறிவோம்

## பாடம் 1
## சிலப்பதிகாரம்

### கலந்துரையாடுக.



| | | | |
|---|---|---|---|
| கோவலன் - கண்ணகி | வணிகன் | வருமானம் | மாணிக்கக்கற்கள் |
| காவிரிப்பூம்பட்டினம் | மாசாத்துவான் | அரண்மனை | |
| பொற்கொல்லன் | பாண்டிய மன்னன் | அநீதி | நீதி கேட்க |

### நடவடிக்கை 1

ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுக.

### நடவடிக்கை 2

ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்திடுக.

### தகவல் அறிக

சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்:-

- வரலாற்றுக் காப்பியம்
- குடிமக்கள் காப்பியம்
- முத்தமிழ்க் காப்பியம்
- முதல் தமிழ்க்காப்பியம்

1.7.17 - ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ணகர, நகர, னகர எழுத்துகள் கொண்ட சொற்களைப் பயன்படுத்தி உரையாடுதல்.
- குழுமுறையில் ணகர, நகர, னகர எழுத்துகள் கொண்ட சொற்களைப் பயன்படுத்திக் கதையைக் கூறுதல்.
- ஆசிரியர் சிலப்பதிகாரம் தொடர்பான விபரங்களைக் கூறுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 2


# உயர்ந்த தூது

## வாசித்து அறிக.

செய்தியை ஒருவரிடம் தெரிவித்து வருவதற்கு மற்றொருவரை அனுப்புவதே தூதாகும். தூதர் ஒருவருக்கு அன்பு, அறிவு, சொல்வன்மை ஆகிய மூன்றும் இருப்பது அவசியமாகும். மேலும், ஒழுக்கம், துணிவு என்பதும் மிக முக்கியமாகும்.

தமது திறமையான சொல்வன்மையால் எதிரியையும் வெற்றி கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பதும் மிக முக்கியமாகும். பழங்காலத்தில் அரசர்கள் பலர் மற்ற நாடுகளுக்குத் தூதுவரை அனுப்புவது வழக்கமாகும். இம்முறையானது அரசர்களின் மரபு என்றும் கூறலாம்.

அதியமான், ஔவையாரைத் தூது அனுப்பியதாகப் புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது. தொண்டை நாட்டை ஆட்சி செய்த தொண்டைமான் தன்னிடம் மிகுந்த படை வலிமை உள்ளதெனக் கர்வம் கொண்டான். எனவே, அவன் அதியமானிடம் பகைமை கொண்டு போர் தொடுக்க எண்ணினான்.



போர் ஏற்படுமானால் உயிர்ச்சேதம், பொருள் சேதம் எனப் பல துயரங்கள் ஏற்படும் என்று அதியமான் அறிந்திருந்தான். எனவே, தொண்டைமானைக் காண அதியமான் ஔவையாரைத் தூதுவராக அனுப்பினான். தமது வீரத்தையும் படை பலத்தையும் தொண்டைமானுக்கு உணர்த்தவே அவ்வாறு செய்தான்.

தூது சென்ற ஔவையாரிடம் தொண்டைமான் தம்மிடம் உள்ள படைபலத்தைக் காட்டினான். "உன்னிடம் உள்ள படைக் கருவிகள் எண்ணெய் தடவி மாலை சூட்டி புத்தம் புதியனவாகப் பொலிவுடன் இருக்கின்றன. ஆனால், அதியமானிடம் உள்ள படைக் கருவிகளோ பகைவர்களை அடிக்கடி தாக்கியதால் நுனிப் பகுதி வளைந்தும் உடைந்தும் காணப்படுகின்றன. அவற்றைச் சீர்படுத்த கொல்லனும் இருக்கின்றான். கொல்லன் வேலை செய்ய பட்டறையும் உள்ளது" என்றார். அதியமான் அடிக்கடிப் போர் புரிபவன் ஆனால், தொண்டைமான் போர் புரிந்த அனுபவம் இல்லாதவன். போரில் தொண்டைமான் நிச்சயம் தோற்றுப் போவான் என்பதைச் சிலேடையாக எடுத்துரைத்தார் ஔவையார்.

## நடவடிக்கை 1

**உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. தூது என்பதன் பொருள் என்ன?

2. பழங்கால அரசர்களின் மரபு எனப்படுவது யாது?

3. தொண்டைமான் கர்வம் கொண்டதன் காரணம் என்ன?

4. அதியமான் ஏன் ஔவையாரைத் தூதுவராக அனுப்பினான்?

5. அதியமான் போரில் திறமை பெற்றவன் என்பதை ஔவையார் எவ்வாறு விளக்கினார்?

6. அதியமான், தொண்டைமான் ஆகிய இருவருக்கும் உள்ள குணங்களை எழுதுக.

2.6.5 - இலக்கியம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- உரைநடை தொடர்பான வினாக்களுக்கு விடை எழுதப் பணித்தல்
- சொற்களுக்குப் பொருத்தமான வாக்கியங்கள் அமைத்து வாசித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


பாடம் 3

# அரசரின் வீரம்

## ணகர, நகர, னகரச் சொற்களை அறிந்து எழுதுக.

பாண்டிய நெடுஞ்செழியன் அவைக்குள் வந்து அமர்கிறார்.

ஒற்றன் : வணக்கம் அரசே! சேர மன்னன் தம் யானைப்படை, தேர்ப்படையோடும் சோழ மன்னன் குதிரைப்படை, காலாட்படையோடும் நம் நாட்டை நோக்கிப் போர் புரிய வந்து கொண்டிருக்கின்றனர்.



புலவர் : பாண்டிய மன்னனே! நின் மரபில் தோன்றியவர் அனைவரும் புகழினை நாட்டினர். நீயும் புகழ் பெற்றுப் பாண்டிய நாட்டிற்குப் புகழைத் தேடித் தருவாயாக! பல்லாண்டு வாழ்கவென உம்மை வாழ்த்துகிறோம்.

நெடுஞ்செழியன் : மூர்த்தி சிறிது. ஆனால், கீர்த்தி பெரிது! என் பகைவரும் பாராட்டும்படி போர் புரிவேன். பாண்டிய நாட்டிற்கு வெற்றியைத் தேடித் தருவேன். வெற்றிவேல்! வீரவேல்!

## நடவடிக்கை 1

உரையாடலில் உள்ள ணகர, நகர, னகரச் சொற்களைப் பட்டியலிட்டு வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.

## நடவடிக்கை 2

சரியான சொல்லை எழுதுக.

1. மார்கழி மாதத்தில் ______ அதிகமாக இருக்கும் என்பர்.
2. திருமதி பாக்கியம் அலுவலகப் ______ யில் மூழ்கியிருந்தார்.
3. போரில் குதிரை வண்டியின் ______ கழன்று விழுந்தது.
4. குதிரைகள் ______ த்துக் கொண்டு வேகமாக ஓடின.
5. ______ வரும் சேர்ந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.
6. ______ யில் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டது.
7. ______ த்தில் முழுமதியைக் கண்டு இரசித்தோம்.
8. ______ வெடியின் அழகைப் பார்க்க மக்கள் திரண்டு வந்தனர்.
9. வெள்ளை ______ குளத்தில் நீந்தி மகிழ்கிறது.
10. மீன் முள் தம்பியின் மேல் ______ த்தில் குத்தியது.
11. வைகாசி மாதத்திற்குப் பிறகு வரும் மாதம் ______ .
12. அண்ணன் வீட்டுச் சுவரில் ______ அடித்துக் கடிகாரத்தை மாட்டினார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பனி | கனை | அனை | வான | அன்னம் | ஆனி |
| பணி | கணை | அணை | வாண | அண்ணம் | ஆணி |

3.4.16 - ணகர, நகர, னகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- உரையாடலில் உள்ள ணகர, நகர, னகரச் சொற்களை வேறுபாடு விளங்க வாக்கியங்கள் அமைத்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்



## திருக்குறளையும் பொருளையும் அறிக.

செல்வந்தர் ஒருவர் தம்மைப் பற்றி யாரும் புகழவில்லை என வருத்தம் கொண்டார். அவ்வூர் மக்கள் அச்செல்வந்தரைக் கருமி, கஞ்சன், கல்நெஞ்சன் என்று தூற்றினர்.

செல்வந்தர் அவர்கள் அனைவரையும் கடிந்து கொண்டார். மன அழுத்தத்திற்கு ஆளானார். ஞானி ஒருவரைச் சென்று சந்தித்தார். ஞானியிடம் தமது மகிழ்ச்சியின்மை பற்றிக் கூறினார். ஞானி தன் அருகில் அமர்ந்திருந்த ஒரு நண்பரை அழைத்தார். செல்வந்தரின் மனக் குறையைத் தீர்த்து வைக்கும்படி பணித்தார். ஞானியின் நண்பர் செல்வந்தரிடம் தமது அனுபவத்தைப் பரிமாறினார். “ஐயா, நான் என் மனைவி மக்களைச் சாலை விபத்தில் பறிகொடுத்தேன். மனவேதனை தாளாமல் கால்போன போக்கில் நடந்தேன். வழியில் ஒரு சிறிய பூனை கால்வாயில் விழுந்து அவதியுற்றதைக் கண்டேன். அதைத் தூக்கி வந்து குளிப்பாட்டி அதன் உரோமங்களை உலர்த்தினேன். வெள்ளை நிறப் பூனை என்னை அன்பாகப் பார்த்தது. அதன் பசியைப் புரிந்துகொண்டு கிண்ணத்தில் பால் ஊற்றி வைத்தேன். பாலைக் குடித்த பூனை நன்றியுடன் என் அருகில் வந்தது. அன்று முதல் என் கால்களை உரசி விளையாட ஆரம்பித்தது. நானும் அப்பூனையுடன் விளையாடி என் கவலையை மறந்தேன். மகிழ்ச்சி என்பது நாம் பிறருக்குக் கொடுப்பதில்தான் உள்ளது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். பிறருக்கு நாம் கொடுத்து உதவினால் பேரும் புகழும் நம்மைத் தேடி வரும்,” என்றார். செல்வந்தர் மன நிறைவுடன் வீடு திரும்பினார்.

**QR நோக்குக் குறியீடு**

https://youtu.be/xaaCWEfEiGs?t=3

**திருக்குறளும் பொருளும்**

- **புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை இகழ்வாரை நோவது எவன். (237)**

  தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழ முடியாதவர் தம்மைத் தாமே நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வதால் பயனில்லை.

## நடவடிக்கை 1

திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.

4.3.4 - நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறச் செய்தல்
- திருக்குறளுக்குப் பொருத்தமான வேறு ஒரு சூழலை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்



# பாடம் 5
# இலக்கணம்



## வலிமிகும் இடங்களை அறிக.




**எடுத்துக்காட்டு:**

1. குமரனை + பார் = குமரனைப் பார்
2. பையை + கொடு = பையைக் கொடு



### நடவடிக்கை 1

வலிமிகுந்து எழுதுக.

1. பெட்டியை + திறந்தான் =
2. கறியை + சமைக்கிறாள் =
3. அறிவை + சோதித்தான் =
4. குழந்தையை + தூக்கினார் =
5. குடையை + பார்த்தாள் =
6. நூல்களை +படித்தனர் =
7. பழங்களை + பறித்தான் =
8. தொழிலை + செய்தனர் =
9. துணிகளை + துவைத்தாள் =
10. பொருளை+ தேடினேன் =
11. இசையை + கற்றாள் =
12. பூக்களை + தொடுத்தாள் =
13. கல்வியை + போதித்தனர் =
14. பரிசுகளை + தந்தனர் =
15. கதவை + திறந்தான் =
16. உணவை + சுவைத்தனர் =
17. கண்களை +சிமிட்டினாள் =
18. பாடலை + கேட்டாள் =
19. கனிகளை + பறித்தனர் =
20. நாவலை + படித்தாள் =
21. கதையை + சொன்னார் =
22. பணத்தை + சேமித்தார் =

5.8.1 - இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



**ஆசிரியர் குறிப்பு**

- இரண்டாம் வேற்றுமை உருபு பற்றி அறிதல்.
- எடுத்துக்காட்டுச் சொற்களை வாசிக்கப் பணித்தல்
- சொற்களைச் சரியாகச் சேர்த்தெழுதி வாசிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 10
# விளையாட்டுகள்

## பாடம் 1
## பாரம்பரிய விளையாட்டு

### கலந்துரையாடுக.

**கண்ணாமூச்சி**



தன்னம்பிக்கை- பொறுமை - அனைவரின் வாழ்வில் முக்கியம்

**கோலி**



இலக்கு - குறி தவறாமை

**குதிரை தாண்டுதல்**



முயற்சி - முன்னேற்றம் - முறையான பயிற்சி

**ஒரு குடம் தண்ணீர்**



ஒற்றுமை - உற்சாகம் - விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

### நடவடிக்கை 1

சூழலுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.

பாரம்பரிய விளையாட்டுகள் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும்?

1.7.18 - சூழலுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படங்களையும் சொற்களையும் கொண்டு உரையாடப் பணித்தல்.
- பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 2

# அறிந்தோம் தெளிந்தோம்

## வாசித்து அறிக.




விளையாட்டு சிறந்ததோர் **உடற்பயிற்சியாகும்**. உடல், மன வளர்ச்சிக்கு விளையாட்டு மிக முக்கியமானதாகும். **விளையாட்டுகள்** குழு உணர்வு, கட்டொழுங்கு ஆகியவற்றை வளர்க்கும். மேலும், ஒற்றுமை எனும் **உணர்வையும்** விதைக்கும் தன்மை கொண்டவையாகும்.



விளையாட்டுகளைத் தனிநபர் விளையாட்டு, குழு விளையாட்டு எனப் **பிரித்துக்** கூறலாம். ஓட்டம், பளு தூக்குதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், வட்டு எறிதல் போன்றவை தனிநபர் விளையாட்டுகளாகும். காற்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து போன்றவை குழு விளையாட்டுகளைச் **சேர்ந்தவையாகும்**.



இந்தியா, கிரேக்கம், சீனா போன்ற **நாடுகளில்** வெகுகாலத்திற்கு முன்பே விளையாட்டுகளில் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. **குறிப்பாக**, உடல் வலுவிற்குக் கிரேக்கம் அதிக முக்கியத்துவம் **தந்தது**. இன்று உலக அளவில் காமன்வெல்த் தடகளப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எனப் பல விளையாட்டுப் **போட்டிகள் நடத்தப்படுகின்றன** என்பது நாம் அனைவரும் **அறிந்த** ஒன்றே.






## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியில் வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு ஏற்ற அடிச்சொல்லை அகராதியின் துணையுடன் கண்டறிக.

## நடவடிக்கை 2

அகராதியைப் பயன்படுத்தி அடிச்சொற்களைக் கண்டறிக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நின்றார் = | | 5 | கற்றவள் = | |
| 2 | நடந்தாள் = | | 6 | தொட்டாள் = | |
| 3 | காட்சி = | | 7 | ஆண்டான் = | |
| 4 | கேட்டார் = | | 8 | பசிக்கும் = | |

## நடவடிக்கை 3

சரியான அடிச்சொற்களைத் தேர்ந்தெடு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பார்த்து | பார் | பார்க்க | 10 | அழிந்து | அழி | அழித்தல் |
| 2 | எழுதினான் | எழுது | எழுதி | 11 | ஊறுகாய் | ஊறு | ஊற்று |
| 3 | வந்தாள் | வருக | வா | 12 | கனிதல் | கனிக | கனி |
| 4 | அடித்து | அடி | அடித்தல் | 13 | கொடுத்தல் | கொடு | கொடுத்து |
| 5 | விழுந்தார் | விழு | விழுக | 14 | சுடுதல் | சுடுக | சுடு |
| 6 | அறிந்தாள் | அரிக | அரி | 15 | செல்லல் | சென்ற | செல் |
| 7 | பாடினார் | படித்து | பாடு | 16 | பெற்றாள் | பெற்று | பெறு |
| 8 | சந்தித்தாள் | சந்தி | சந்தித்தல் | 17 | கேட்டல் | கேட்ட | கேள் |
| 9 | பருகுவாள் | பருகு | பருகுதல் | 18 | சென்றன | செல் | சென்ற |

2.5.4 - அடிச்சொற்களை அறிய அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- அகராதியைப் பயன்படுத்தி அடிச்சொற்களைக் கண்டறிதல்.
- சரியான அடிச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 3

# உடலுக்கு உறுதி

## சொற்களை விரிவுபடுத்துக.

**எடுத்துக்காட்டு:**



பல்லாங்குழி - இருவர் - தரையில் அமர்ந்து

**இது பல்லாங்குழி விளையாட்டு. இருவர் பல்லாங்குழி விளையாடுகின்றனர். தரையில் அமர்ந்து இருவரும் பல்லாங்குழி விளையாடுகின்றனர்.**

1




கூடைப்பந்து - சிறுவர்கள்- வளையம்

2



வளைதடிப்பந்து - அரங்கத்தில் - விளையாட்டு

3



சுவர்ப்பந்து - சுவரில் - பச்சை நிறம்

## நடவடிக்கை 1

சொற்களை விரிவுபடுத்தி வாக்கியங்கள் எழுதுக.

1



பெண்கள் - கோலாட்டம் - மகிழ்ச்சி

2



நீச்சல் - உடற்பயிற்சி - சிறந்த

3



காற்பந்து - திடலில் - குழுக்கள்

4



மேசைப்பந்து - இருவர் - உள் அரங்கம்

3.4.12 - சொற்களை விரிவுபடுத்தி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களை விரிவுபடுத்தும் முறையை அறிதல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்
- படங்களுக்கு ஏற்ப வாக்கியங்களை விரிவுபடுத்தி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிக.




அன்பார்ந்த வகுப்பாசிரியர் அவர்களே! எனதருமை சக நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கம். இன்று நான் உங்கள் முன்னிலையில் 'நான் ஓர் ஆசிரியரானால்' எனும் தலைப்பில் பேச வந்துள்ளேன்.

அருமை நண்பர்களே!

பெற்றோருக்கு அடுத்து உயர்ந்த நிலையில் இருப்பவர் ஆசிரியர். ஆசிரியர் எனும் சொல்லின் பொருள் என்பதே மிகவும் அற்புதமான ஒன்று. அதாவது, ஆசு என்றால் குற்றம். இரியர் என்றால் போக்குபவர். தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்களின் அறியாமையைப் போக்குபவர்தான் ஆசிரியர் என்பதே அதன் பொருள்.

அன்பானவர்களே!

நம் அனைவருக்கும் எழுத்துகளை அறிமுகம் செய்து, கல்வியைக் கற்றுக் கொடுப்பவர் ஆசிரியர். **எழுத்தறி வித்தவன் இறைவனாகும்** என்பது போல ஆசிரியர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள். இப்படிப்பட்ட புனிதமான ஒரு பணியை நான் செய்ய நேர்ந்தால் மனம் மகிழ்வேன்.

இனிய நண்பர்களே!

எனதருமை மாணவர்களுக்கு நல்வழிகாட்டி ஆசானாகத் திகழ்வேன். எனது ஆசிரியப்பணியை எனது இரு கண்களாய் மதித்துச் செயல்படுவேன். மாதா, பிதா, குரு, தெய்வம் எனப் பெற்றோருக்கு அடுத்து ஆசிரியர் இடம்பெற்றுள்ளார். உலக மக்கள் ஆசான்களை அவ்வாறே மதிக்கின்றனர். அத்தகைய மதிப்பினைக் காப்பாற்றும் வகையில் நான் நிச்சயம் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பேன்.

**வெற்றி வேற்கையும் பொருளும்**

- **எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.**
  கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் கடவுளுக்கு நிகராவார்.

### நடவடிக்கை 1

வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.

4.12.1 - நான்காம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுதல்.
- வெற்றி வேற்கையையும் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதி புத்தகக் குறியீட்டு அட்டை ஒன்றனைத் தயார் செய்யப் பணித்தல்

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும்.







### நடவடிக்கை 1

வலிமிகுந்து எழுதுக.

1. அந்த + பையன் =
2. இந்த + சொல் =
3. எந்த + குழந்தை =
4. அந்த + கீரை =
5. இந்த + குறிப்பு =
6. எந்த + கழகம் =
7. அந்த + குடை =
8. இந்த + பரிசு =
9. எந்த + பறவை =
10. அந்த + பாதை =
11. இந்த + பாவை =
12. எந்த + கதை =

5.8.2 - அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரையாடலை வாசித்து அறிதல்.
- வலிமிகும் இடங்களை மாணவர்கள் அறியச் செய்தல்.
- சொற்களைச் சேர்த்தெழுதி வாசித்துக் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# தொகுதி 11
## மனமகிழ் நடவடிக்கைகள்
### பாடம் 1
### சிந்தித்துச் செயல்படு

**படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுக.**

1




இரண்டு காகங்கள் போட்டி வைத்துக் கொண்டன. மூட்டையைத் தூக்கிக் கொண்டு உயரே பறக்க வேண்டும்.

2




ஒரு மூட்டையில் பஞ்சு வைக்கப்பட்டிருந்தது. ஒரு மூட்டையில் உப்பு வைக்கப்பட்டிருந்தது.

3



பஞ்சு மூட்டையை ஒரு காகம் தூக்கிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. உப்பு மூட்டையைத் தூக்கிக் கொண்டு மற்றொரு காகமும் பறக்க ஆரம்பித்தது.

4




### நடவடிக்கை 1
காக்கையின் முடிவினைக் கண்டறிந்து கூறுக.

### நடவடிக்கை 2
முழுக் கதையைக் கூறி உரையாடுக.

**சொல்லும் பொருளும்**
- வேழம் - யானை
- ஆ - பசு
- ஞமலி - நாய்
- பாவை - பெண்

1.8.4 - முற்றுப்பெறாத கதையின் முடிவினைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- படங்களைப் பார்த்து உரையாடுதல்.
- கொடுக்கப்பட்ட குறிப்புகளை வாசித்து அறிதல்.
- முழுக் கதையையும் மாணவர்கள் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

பாடம் 2

# மனம் மகிழ்வோம்

## உரையாடலை வாசித்து அறிக.



ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே! இன்று அனைவரும் **நலமா**?

மாணவர்கள்: வணக்கம் ஐயா.. நாங்கள் அனைவரும் நலமாக உள்ளோம்.

ஆசிரியர் : மாணவர்களே! உங்கள் தனி **ஆற்றலை** நான் அறியவேண்டும். உங்கள் மனமகிழ் நடவடிக்கைகள் பற்றிய படத்தையும் அதற்கேற்ற **விளக்கத்தையும்** எழுதிவரச் சொல்லியிருந்தேன். நீங்கள் அனைவரும் தயார்தானே?

மாணவர்கள்: ஆம் ஐயா! எங்களின் **படைப்பைச்** சிறப்பாகச் செய்துள்ளோம் ஐயா.

தெய்வானை: என் மனமகிழ் நடவடிக்கை பூச்செடிகள் நடுவது ஐயா. இதுவரை **ஏறக்குறைய** பத்து வகையான பூச்செடிகளை **நட்டு** வைத்துள்ளேன்.

அருணா : **புகைப்படம்** எடுப்பது எனது மனமகிழ் நடவடிக்கையாகும். அதிலும் இயற்கைக் காட்சிகளைப் புகைப்படமாக எடுத்து திரட்டேடு செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும்.

காவேரி : **பாடல் பாடுவது, பல குரலில் பேசுவது** என்னுடைய தனித்திறமை ஐயா.

இலக்கியன் : சிறந்த **உடற்பயிற்சியான** நீச்சல் அடிப்பதும், **வானொலி**, கடிகாரம் போன்றவற்றைப் **பழுது** பார்ப்பதுமே நான் விரும்பிச் செய்யும் நடவடிக்கைகளாகும்.

ஆசிரியர் : மிகவும் சிறப்பாகத் **தயார்** செய்து வந்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த **பாராட்டுகள்**.

இத்தகைய நடவடிக்கைகளால் பல வகையில் நாம் பயனடைகிறோம். மனமகிழ்வு, அறிவு வளர்ச்சி, வருவாயை **ஈட்டுதல்** போன்ற பல நன்மைகளை நாம் **பெறலாம்**.

## நடவடிக்கை 1

வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருளை அறிய அகராதியைப் பயன்படுத்துக.

## நடவடிக்கை 2

சில சொற்களையும் அவற்றின் பொருளையும் வாசித்து அறிக.

அங்குசம் - யானையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பயன்படுத்தும் கருவி.
ஆழ்ந்து - கூர்ந்து
உருக்கம் - நெகிழ்ச்சி

ஊசலாட்டம் - தடுமாற்றம்
எளிது - சுலபம்
ஏராளம் - அதிகம்
ஐதீகம் - நம்பிக்கை

## நடவடிக்கை 3

அகராதியைப் பயன்படுத்திப் பொருளை அறிக.

1. ஒவ்வாமை :
2. கச்சேரி :
3. கடப்பாடு :
4. கானம் :
5. கிள்ளை :
6. நாணயம் :
7. மதி :
8. குடியிருப்பு :
9. குதூகலம் :
10. கொய்து :
11. பட்டினி :
12. பட்டறிவு :
13. செயல் :
14. வருமானம் :

2.5.3 - சொல்லின் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்துப் புரிந்துகொள்ளப் பணித்தல்.
- கோடிட்ட சொற்களுக்குப் பொருள் அறிய அகராதியைப் பயன்படுத்தச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் அறிந்து எழுதுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 3

# நான் ஓவியரானால்...

## கற்பனைக் கட்டுரை எழுதுக.




### நடவடிக்கை 1

குறிப்புகளைக் கொண்டு ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.

ஓவியக் கண்காட்சி - மக்கள் கூட்டம் - அரங்கம் நிறைந்த - வரைந்த ஓவியங்கள் - இயற்கைக் காட்சிகள் - வாழ்த்தும் பாராட்டும் - விலையைப் பொருட்படுத்தாமல் - சிறுவயதில் - மேற்கொண்ட பயிற்சி

## நடவடிக்கை 2

விடுபட்ட சொற்களைக் கண்டறிந்து எழுதுக.



அப்பா வாங்கித்தந்த ஆங்கில மர்மக் கதை புத்தகம் ஒன்றனை அன்றுதான் வாசித்து முடித்தேன். அடேயப்பா! ________ எத்தனை விநோதங்கள்... எத்தனை மர்மங்கள்... என் மனத்திலும் ஓர் ________ தோன்றியது. எனக்கு ஒரு விநோத மேசை கிடைத்தால்... ஆம்! எனக்கு ________ மேசை கிடைத்தால் ஒவ்வொரு நாளும் உண்ணும் நேரத்தின் போது பலவகையான ________ அம்மேசை மீது தயாராக இருக்கும்படி செய்வேன். இதனால், தினமும் ஓய்வில்லாமல் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்யும் என் ________ சற்று ஓய்வு கிடைக்குமல்லவா!

என் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து ________ உணவுகளைச் சுவைக்க வேண்டும். உண்டபின் விநோத மேசை மீண்டும் முன்பு போல காட்சியளிக்க வேண்டும். நான் விரும்பிய ________ எல்லாம் என் விநோத மேசை உருமாற வேண்டும். நான் பள்ளி செல்லும்போது என் விநோத மேசை மீது ________ பறந்து செல்ல வேண்டும். பள்ளியை அடைந்ததும் விநோத மேசை தனது ________ மடக்கிக் கொள்ள வேண்டும். இதனால், நான் வாகன நெரிசலில் சிக்கிக் கொண்டு தவிக்க நேரிடாது அல்லவா!

ஓய்வுநேரத்தில் என்னை ஏற்றிக்கொண்டு என் விநோத மேசை வானத்தில் பறக்க வேண்டும். இறைவன் படைத்த ________ அழகை நான் கண்டு இரசிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த விநோதமான இந்த மேசையைக் கண்ணுங்கருத்துமாய் நான் காத்திட வேண்டும்.

| | | |
|---|---|---|
| உருவத்தில் | இயற்கை | விநோத |
| இறக்கைகளை | | தாயாருக்கு |
| அறுசுவை | எண்ணம் | அமர்ந்து |
| கதையில் | | உணவுகள் |

3.6.10 - 80 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- குறிப்புகளைக் கொண்டு கற்பனைக் கட்டுரையைக் கூறப் பணித்தல்.
- கற்பனைக் கட்டுரையை முழுமையாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.

New Subject

To pugazhenthi@yahoo.com CC / BCC

Subject நலம் விசாரித்தல்

அன்பு மகன் புகழேந்திக்கு,
நாங்கள் அனைவரும் இங்கு நலம். அங்கு நீ நலமுடன் இருக்க இறைவனை இறைஞ்சுகிறேன். மின்னியல் துறையில் நிபுணத்துவம் பெற நீ அயல்நாடு சென்று ஏறக்குறைய மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

உன் திறமைகளைப் பாராட்டி அரசாங்கமே உபகாரச் சம்பளம் அளித்திருப்பது மிகவும் பெருமையாக உள்ளது. எத்துறையானாலும் முறையாகப் பயிற்சி செய்வதே சிறப்பாகும். **சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்** எனும் பழமொழிக்கு ஏற்பச் செயல்பட வேண்டும் என்பது எங்களின் அவா.

சிறுவயது முதலே நீ விடாமுயற்சியுடன் கல்வி கற்று சிறந்து விளங்கும் மாணவன் என்பதை அனைவரும் அறிவோம். யாருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பு உனக்கு வாய்த்துள்ளது. எனவே, சரியாகவும் சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்வாய் என்று நம்புகிறோம். **காற்றுள்ள போதே தூற்றிக் கொள்** எனும் பழமொழியை உனக்கு நான் அடிக்கடி நினைவுபடுத்துவேன். அதை நீ மறந்திருக்க மாட்டாய். தலைசிறந்த ஆசிரியர்கள் உன்னருகில் இருக்கும்போது அவர்களிடம் உனது சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்துகொள்.

நிறைய வேலைகள், பயிற்சிகள் என்றாலும் சரியான நேரத்தில் உணவு உண்ண மறந்துவிடாதே! உடற்பயிற்சிகள் செய்து உடலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள். நீ கற்றுக் கொள்ளும் திறமைகளைப் பலருக்கும் பகிர்ந்து பல மின்னியல் திறமைசாலிகளை உருவாக்குவாய் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

இந்த மின்னஞ்சல் கண்டதும் பதில் அனுப்பு.

Send Saved

**பழமொழிகளும் பொருளும்**

- **சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.**
  எதையும் முறையாகப் பயிற்சி செய்து வந்தால்தான் அதில் நாம் வல்லமை பெறமுடியும்.
- **காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.**
  கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, சூழ்நிலை சாதகமாக இருக்கும்போதே தனக்கு வேண்டியதைச் சாதித்துக்கொள்ள வேண்டும்.

## நடவடிக்கை 1

பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக.

## நடவடிக்கை 2

சூழலுக்கு ஏற்ற பழமொழியைக் கூறுக.

1. சிகையலங்காரம் செய்யும் கலையை மதுமிதா முறையாகப் பயின்று பட்டம் பெற்றாள். சுயமாகக் கடை ஒன்றையும் வைத்து அக்கலையைச் சிறப்புறச் செய்து வருகிறாள்.
2. பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும் மாணவர்கள் தங்களின் இலக்கை அடைய அயராது உழைத்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. சிறுவயது முதலே நீச்சல் பயிற்சியைக் கற்ற குமுதினி, இன்று பள்ளியைப் பிரதிநிதித்துப் பல போட்டிகளுக்குச் சென்று வாகை சூடுகிறாள்.
4. வியாபாரத் துறையில் ஈடுபட எண்ணம் கொண்டிருந்த அண்ணன், அப்பாவின் வழிகாட்டலையும் பண உதவியையும் திறம்படப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றம் அடைகின்றார்.
5. அறிவியலில் சிறந்து விளங்கிய விமலன், தனது புத்தாக்க ஆற்றலைக் கொண்டு பல உருவாக்கங்களை உருவாக்கி, வெளிநாடு செல்லும் வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டான்.

பிற மொழிகளைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள் யாவை?

4.7.4 - நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மின்னஞ்சலை வாசித்து பழமொழிகளையும் பொருளையும் அறிதல்.
- பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.
- சூழலுக்கு ஏற்ற பழமொழியை எழுதி வாசிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகும் இடங்கள் அறிக.

அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு:**

| | நிலைமொழி | | வருமொழி | | |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கு | + | சென்றான் | = | அங்குச் சென்றான் |
| 2 | இங்கு | + | பார்த்தான் | = | இங்குப் பார்த்தான் |
| 3 | எங்கு | + | படித்தாள் | = | எங்குப் படித்தாள் |

### நடவடிக்கை 1

வலிமிகுந்து எழுதுக.

பூங்காவில் புத்தகம் படிக்க வந்தேன். அங்கு+பறந்த பறவைகள் சில மரக்கிளையில் அமர்ந்தன. அங்கு+கண்ட இயற்கை காட்சிகள் மிக அழகானவை. இங்கு+சாய்ந்த தென்னை மரம் ஒன்றனைக் கண்டேன். அங்கு+திரிந்த சில நாய்கள் சண்டையிட்டுக் கொண்டன. மாமரம் ஒன்றில் நிறைய மாங்கனிகள் காய்த்திருந்தன. அங்கு+சென்று பறிக்க எண்ணம் கொண்டேன். ஆனால், எங்கு+பறித்தாய் என்று தாயார் கேள்வி கேட்பார் என அஞ்சினேன்.



5.8.3 - அங்கு, இங்கு, எங்கு என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகும் இடங்களை வாசித்து அறிதல்.
- எடுத்துக்காட்டுகளை வாசித்து அறியச் செய்தல்.
- சொற்களை வலிமிகுந்து எழுதி வாக்கியங்களை முழுமைப்படுத்தப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்





தொகுதி 12

# பொருளாதாரம் அறிவோம்

பாடம் 1

## விற்பனைப் பொருள்கள்

### கலந்துரையாடுக.

| விவசாயம் | கிடைக்கும் பொருள் | விற்பனைப் பொருள் |
|---|---|---|
|  நெல்வயல் |  நெல் | அரிசி, மாவு |
|  செம்பனைத் தோட்டம் |  செம்பனைப் பழங்கள் | எண்ணெய், வழலை |
|  தென்னந்தோப்பு |  தேங்காய் | தேங்காய், எண்ணெய், இளநீர் |
|  நொய்வத் தோட்டம் |  நொய்வப் பால் | பந்து, அழிப்பி, நொய்வ வட்டயம் |
|  பழத்தோட்டம் |  பழங்கள் | பழங்கள், பழச்சாறு, பழக்கூழ் |
|  காட்டு மரங்கள் |  வெட்டு மரங்கள் | நாற்காலி, மேசை, காகிதம் |

### நடவடிக்கை 1

அட்டவணையில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுக.

1.9.1 - அட்டவணையில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அட்டவணையில் உள்ள தகவல்களைக் குழு முறையில் கலந்துரையாடப் பணித்தல்.
- விவசாயம் மூலம் கிடைக்கும் பொருள்களையும் விற்பனைப் பொருள்கள் பற்றியும் உரையாடச் செய்தல்.
- விவசாயம் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 2

# விவசாயத் தொழில்

## வாசித்து அறிக.



எல்லாத் தொழில்களுக்கும் அடிப்படையானது விவசாயத் தொழிலேயாகும். உலகத் தொழில்களிலேயே முதன்மைத் தொழிலாகவும் கருதப்படுகின்றது. விவசாயத் தொழில் என்பது அனைவருக்கும் உயிர் கொடுக்கும் தொழிலாகவும் கூறப்படுகின்றது.

செந்தமிழ்ப் புலவராகிய ஔவையாரும்கூட அரசர்களை வாழ்த்தும்பொழுது வரப்புயர என்றுதான் ஆரம்பிப்பார். இதன் பொருள் அறியாத ஓர் அரசன், “ஔவையே! தாங்கள் வாழ்த்திய பாடல் வரிகளின் பொருள் விளங்கவில்லையே!” என்றாராம். ஔவையாரும்,

‘வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் கோன் உயர்வான்
கோன் உயரக் குடி உயரும்...’

என்று கூறினார்.

இத்தகைய உன்னதமான விவசாயத் தொழில் ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரிதும் உறுதுணை புரிகின்றது. விவசாயத் தொழிலின் மூலம் விளையும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். ஏற்றுமதி அதிகரிப்பதனால் நாட்டின் வருமானம் பெருகுகின்றது என்பதை நாம் அனைவரும் அறிந்திருப்போம்.

விவசாயத் தொழிலின் மூலம் நாட்டு மக்கள் செழிப்பாக வாழ முடிகின்றது. விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்றால் மிகையாகாது. எந்த ஒரு நாடும் விவசாயத் துறையில் செழிப்பாக விளங்குமாயின் அந்நாடு எல்லாத் துறைகளிலும் செழிப்புற்றே திகழும். பஞ்சம் பட்டினி இன்றி அந்நாட்டு மக்கள் வாழ்வர். ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று அன்றே விவசாயத்தின் மகிமையை உயர்த்திப் பாடினார் பாரதியார்.

தற்போது அதிகமான இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் பட்டணங்களின் முன்னேற்றமும், தொழிற்சாலைகளில் உள்ள வேலை

வாய்ப்புகளுமே ஆகும். இந்நிலைமை மாறி பெரும்பாலோர் விவசாயத் துறையில் கவனம் செலுத்தினால் நம் நாட்டின் முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தலாம். ‘அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது’ என்பது போல உலகச் சக்கரத்துக்கு அச்சாணியாய் விளங்கும் விவசாயத்தை என்றும் ஆதரித்து வாழ்வோம்.



## நடவடிக்கை 1

கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

1. தொழில்களுக்கெல்லாம் அடிப்படைத் தொழில் யாது?
2. ‘கோன் உயரக் குடி உயரும்’ என ஔவையார் கூறக் காரணம் யாது?
3. விவசாயம் நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வாறு உதவுகின்றது?
4. தற்கால இளைஞர்கள் ஏன் விவசாயத்துறையை விரும்புவதில்லை?
5. அனைவருக்கும் உயிர் கொடுக்கும் தொழில் என இத்தொழிலைக் கூறுவதன் காரணம் என்ன?

## நடவடிக்கை 2

பொருள் அறிக.

1. தொழில் :
2. உன்னதமான :
3. விவசாயிகள் :
4. பஞ்சம் :
5. முன்னேற்றம் :
6. மகிமை :

2.6.6 - பொருளாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்கு விடையளிக்கப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் அறிதல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 3

# வியாபாரத்தில் வெற்றி

## வாசித்து எழுதுக.

வியாபாரம் என்பது சிறந்த முறையில் திட்டமிட்டபின் ஆரம்பிக்க வேண்டிய ஒரு துறையாகும். வியாபாரத்தைச் சிறந்த முறையில் செய்வதற்குச் சில வழிமுறைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

நாம் விரும்பி ஆரம்பிக்கும் ஒரு வியாபாரம் தனித்தன்மை வாய்ந்ததாக இருப்பது அவசியம். மற்றவர் போல ஒரே மாதிரியான பொருளை வியாபாரம் செய்வது சிறந்த ஓர் உத்தியாகாது. சுயமான தனித்தன்மையே அடித்தளமாக அமையும்.

வியாபாரம் செய்வதற்கு முதலீடு மிக முக்கியம். வெறும் ஆர்வத்தைக் கொண்டு நாம் எந்த ஒரு வியாபாரத்தையும் ஆரம்பிக்க முடியாது. மாறாக, பொருள்களை வாங்கவும் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் போதுமான முதலீட்டுப் பணம் நம் கையில் இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களுடன் நல்ல தொடர்பு இருப்பது சிறந்த வியாபாரிக்கு அழகு எனலாம். வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து நாம் சேவையையோ, பொருளையோ விற்பனை செய்தால் அதுவே சிறந்த வருமானத்தை நமக்கு ஈட்டித்தரும். நிறைய வாடிக்கையாளர்கள் நமது நீண்ட கால வாடிக்கையாளர்களாக இடம்பெற வேண்டும் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.



திட்டமிடுதல் என்பது வியாபாரத் துறையில் மிக முக்கியமான மற்றோர் அம்சமாகும். இன்னும் சில ஆண்டுகளில் நாம் நடத்துகின்ற வியாபாரத்தின் வளர்ச்சியைப் பற்றி திட்டமிடுதல் வேண்டும். நம்பிக்கையாளர்களுடன் நமது திட்டத்தைப் பகிர்ந்து கொண்டு அவர்களின் அறிவுரைகளையும் நேர்மறை கருத்துகளையும் பெறத் தயாராக இருக்க வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதையே முழு மூச்சாக நினைக்க வேண்டும். நமது எண்ணங்களே வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை மறக்கக்கூடாது. நேர்மையான முறையில் புதுப்புது விதத்தில் வியாபார நுணுக்கங்களைக் கையாள வேண்டும்.

வியாபாரத்தில் சீரான முறையில் செயல்படுவோமேயானால் வாழ்வில் சிறந்த வெற்றியை நிச்சயம் அடைவோம்.



## நடவடிக்கை 1

கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.

| | |
|---|---|
| தலைப்பு | சொந்தத் தொழில் செய்வதால் நன்மைகள் |
| முதன்மைக் கருத்து | தன்னம்பிக்கை சுயகாலில் நிற்றல் / சேமிப்பு / திறமைகள் அதிகம் / நேரக் கட்டுப்பாடு |
| துணைக் கருத்து | சுயமாகத் திட்டமிடுதலும் முடிவெடுப்பதும் |
| விளக்கம் | சொந்தத் தொழில் செய்வதற்குச் சுயமாகத் திட்டமிட்டுச் செயல்படலாம். வேலைகளின் தேர்வு, இடம், முதலீடு ஆகியவற்றை நாமே தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் உண்டு. |
| சான்றுகள் | எந்த வகைத் தொழிலை நாம் செய்ய இயலும் என்பதை நாமே முடிவு செய்யலாம். சுய அனுபவம், கல்வித் தகுதி ஆகியவற்றைக் கொண்டு முடிவு செய்யலாம். மேலும், பொருத்தமான இடம் சேமிப்புப் பணம் போன்ற வசதிகளைக் கொண்டே சொந்தத் தொழிலை ஆரம்பிக்க முடியும். |

3.6.8 - 80 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.



**ஆசிரியர் குறிப்பு**

- கட்டுரைப் பகுதியை வாசித்தல்.
- கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளைக் குமிழி வரிபடத்தில் எழுதப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்கேற்பக் கட்டுரை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## முதுரையையும் அதன் பொருளையும் அறிக.

கனத்த மழையில் நனைந்த சிறுவன் குளிரில் நடுங்கி ஓடுகிறான். ஒரு பணக்காரப் பெண்ணின் வீட்டின் முன்புறம் ஒதுங்கி நிற்கின்றான். மழையின் வேகத்தைவிடச் சிறுவனின் இதயத் துடிப்பு வேகமாக இருந்தது.





வீட்டில் தாய் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தாள். சிறுவன் தன் தாய் மீது அதிக பாசம் கொண்டவன். மருந்து வாங்கிக் கொடுக்கச் சிறுவனிடம் பணம் இல்லை. அவன் நாடிச் சென்று கேட்ட இடத்தில் இல்லை என்று கையை விரித்துவிட்டனர். சிறுவன் அழுதான். அவன் கண்ணீர்தான் மழையாகப் பெய்கின்றதோ என்று நினைத்து வேதனையில் துடித்தான்.

சற்றும் எதிர்பாராமல் அழகான பெண்மணி வீட்டிற்கு வெளியில் வந்தாள். கிழிந்த ஆடையில் வேதனை முகம் கொண்ட சிறுவனைக் கண்டாள். அவனருகில் சென்று விசாரித்தாள். தன் நிலையைக் கூறி முடித்தான் சிறுவன். சற்றும் தாமதிக்காமல் வீட்டினுள் சென்று பணத்தைக் கொண்டு வந்து சிறுவனிடம் கொடுத்தாள்.

பணத்தைப் பார்த்த சிறுவனின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. அவன் மனக் கண்ணில் அவன் தாய் எழுந்து நடமாடுவது போல் இருந்தது. அப்பெண் செய்த அரிய உதவிக்கு நன்றி கூறிவிட்டு மருந்துக்கடையை நோக்கி ஓடினான்.

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன. முதிர்ந்த வயதில் ஒரு பெண் கடுமையான நோயின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அறுவை சிகிச்சை செய்யவும் மருத்துவச் செலவுக்கும் பணம் இல்லாத நிலையில் அப்பெண் ஆபத்தான நிலையில் இருந்தாள்.



அன்று பணியில் இருந்த மருத்துவர், அப்பெண்ணை நெருங்கி அவளின் முகத்தை உற்றுப் பார்த்தார். அருகில் இருந்த மருத்துவக் குறிப்பு அட்டையைப் பார்த்தார். வியர்வைத் துளிகள் நெற்றியை நனைத்தன. அப்பெண்ணைக் கனிவோடு பார்த்தார். உடனடியாக சக மருத்துவர்களின் ஆலோசனையைக் கேட்டார். அப்பெண்ணுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று செய்தார். அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. விரைவில் குணமடைந்தாள். வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டாள். பணத்திற்கு என்ன செய்வதென்று புரியாமல் அவள் விழித்தாள். அருகிலுள்ள மேசையின் மீது ஏதோ குறிப்புகள் எழுதப்பட்ட தாள் இருந்தது.

அன்றைய மழை நாளில் என் தாய்க்கு மருந்து வாங்க நீங்கள் உதவி செய்ததை நான் என்றும் மறவேன். இன்று உங்கள் மருத்துவச் செலவு முழுவதையும் செலுத்த எனக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியுடனும் நிம்மதியுடனும் வீடு திரும்புங்கள் என்று எழுதப்பட்டிருந்தது. கண்கள் குளமாகக் கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தாள்.

**மூதுரையும் பொருளும்**

- **நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி**
  **என்று தருங்கொ லெனவேண்டா - நின்று**
  **தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
  **தலையாலே தான்தருத லால்.**

நல்லவர்களுக்குப் பயன்கருதாமல் நாம் செய்கின்ற உதவி, தென்னையானது தன் வேரால் உறிஞ்சிய நீரைத் தன் தலையில் இளநீராகத் தருவதைப் போல நிச்சயமாக நமக்குப் பயன் தரும்.

## நடவடிக்கை 1

மூதுரையையும் அதன் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறுக; அழகான கையெழுத்தில் எழுதிக் காட்டுக.

4.13.1 - நான்காம் ஆண்டுக்கான மூதுரையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசிக்கப் பணித்தல்.
- மூதுரையைச் சரியாக உச்சரித்து வாசித்தல்.
- மூதுரையை எழுதிக் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகா இடங்கள் அறிக.

சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகா.

**எடுத்துக்காட்டு :**

1. சில + சில = சில சில
2. பல + பாடங்கள் = பல பாடங்கள்
3. சில + சொற்கள் = சில சொற்கள்
4. பல + சாலைகள் = பல சாலைகள்
5. சில + பொம்மைகள் = சில பொம்மைகள்
6. பல + பொருள்கள் = பல பொருள்கள்

**தகவல் அறிக**

- சில, பல - அஃறிணை
- சிலர், பலர் - உயர்திணை
- பல மாணவர்கள் ( X )
- மாணவர்கள் பலர் (✓)
- பல எழுத்தாளர்கள் ( X)
- எழுத்தாளர்கள் பலர் (✓)

## நடவடிக்கை 1

வலிமகாமல் எழுதுக.

பூந்தோட்டத்தில் நுழைந்த எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பல + செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன. சில + பூக்கள் நறுமணம் வீசின. பல + பெரிய கற்கள் நடைபாதையின் ஓரத்தில் கிடந்தன. சில + தேனீக்கள் பறந்து வந்தன. பல + தடவை பயந்து ஒதுங்கினேன். சில + சிறிய கற்களை எடுத்துக் கொண்டேன். யாரோ சில + பாடல்கள் பாடுவதைக் கேட்டேன். மாலையில் பல + பறவைகள் பூந்தோட்டத்தை நோக்கிப் பறந்து வந்தன. நானும் வீடு திரும்பினேன்.



5.9.1 - சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகா இடங்களை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டுகளை வாசிக்கச் செய்தல்.
- வலிமிகா பயிற்சியை முறையாகச் செய்து பத்தியை மீண்டும் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்



# தொகுதி 13
# போக்குவரத்து

## பாடம் 1
## சின்னங்களும் குறிப்புகளும்



### கலந்துரையாடுக.

1



- வேகக் கட்டுப்பாட்டை மீறக்கூடாது.
- இக்கருவி வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனமோட்டிகளின் வாகனங்களைப் புகைப்படமாகக் காட்டும்.
- வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனமோட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்படும்.

2




- பாதசாரிகள் மேம்பாலத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- மேம்பாலத்தில் கவனமாக நடக்க வேண்டும்.
- மேம்பாலத்திலிருந்து எட்டிப்பார்ப்பது, விளையாடுவது கூடாது.

3



- பள்ளி மாணவர்கள் சாலையைக் கடந்து செல்வர்.
- வாகனமோட்டிகள் வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- பள்ளி மாணவர்களின் பாதுகாப்பின் மீது அக்கறை கொள்ள வேண்டும்.
- பள்ளி மாணவர்கள் சாலையைக் கடக்க முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.



- வாகனமோட்டிகள் வாகனங்களைக் கவனமுடன் செலுத்த வேண்டும்.
- வாகனத்தைச் செலுத்தும்போது திறன்பேசியைப் பயன்படுத்தக்கூடாது.
- சட்டத்தை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.
- சாலை பாதுகாப்புச் சட்டங்களைக் கடைப்பிடிப்பதால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.



- மாற்றுத் திறனாளிகள் செல்லும் வழி.
- இவர்களை வாகனமோட்டிகள் மதிக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகள் சாலையில் பாதுகாப்பாகச் செல்ல அனைவரும் உதவ வேண்டும்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்.



- மிதிவண்டி ஓட்டுநர் சாலையின் ஓரமாகச் செல்ல வேண்டும்.
- தலையில் பாதுகாப்புக் கவசம் அணிந்திருக்க வேண்டும்.
- வெளிர் நிறத்தில் ஆடைகளை அணிந்திருப்பது அவசியமாகும்.
- வாகனமோட்டிகள் இவர்களின் பாதுகாப்புக்கு மதிப்பளிக்க வேண்டும்.

## நடவடிக்கை 1

கொடுக்கப்பட்ட நடப்புச் செய்தி தொடர்பான கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.

மேம்பாலங்கள் அமைப்பதன் நோக்கத்தையும் அவற்றின் நன்மைகளைப் பற்றியும் கூறுக.

### சொற்களஞ்சியம்

- கட்டுப்பாடு
- விதிகள்
- அபராதம்
- மீறுதல்
- பாதசாரிகள்

1.10.1 - நடப்புச் செய்தியைப் பற்றிய கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சின்னங்கள் தொடர்பான குறிப்புகளை வாசிக்கப் பணித்தல்.
- சாலைச் சின்னங்கள் பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.
- கருத்துகளைத் தொகுத்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 2

# போக்குவரத்து வளர்ச்சி



## வாசித்து அறிக.

ஆதிகால மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நடந்தே சென்றனர். சிறிது காலத்திற்குப் பிறகு மரக்கட்டைகளை ஒன்றாகக் கட்டி மிதவைகளாகப் பயன்படுத்திக் கடந்தனர். ஆறுகள் இவர்களின் முக்கியமான போக்குவரத்துச் சாதனமாகவும் அமைந்தன.



தங்களின் போக்குவரத்து வசதிக்காகக் கால்நடைகளைப் பயன்படுத்தினர். கால்நடைகளை வண்டிகளில் பூட்டிப் பொருள்களை எடுத்துச் சென்றனர். நாகரிக முன்னேற்றங்கள் ஏற்பட்டதும் கால்நடை வண்டிகளுக்கு மாற்றாக இயந்திரத்தால் இயங்கும் வண்டிகள் உருவாக்கப்பட்டன. மனிதர்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப பல இடங்களுக்கு இலகுவாகப் பயணம் செய்தனர்.



பல கண்டுபிடிப்புகளால் மிதிவண்டி, பேருந்து, மகிழுந்து, தொடர்வண்டி, உந்துருளி போன்ற பல வாகனங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பயணம் செய்ய விமானங்களும் கப்பல்களும் உருவாக்கப்பட்டன. பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கும் இத்தகைய போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.



அன்று எளிமையான முறையில் சாதாரணமாகக் கப்பல்களாக இருந்தவை இன்று பல மாடிகளைக் கொண்ட நவீன சொகுசுக் கப்பல்களாக வளர்ச்சி கண்டுள்ளன. அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொண்டே இருக்கின்றன. முன்னேற்றம் கண்ட சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் அதிவிரைவு மின்தொடர் வண்டிகள் மக்களின் முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக உள்ளன.





பொதுப்போக்குவரத்து வசதிகளை மக்கள் நாடுகின்றனர் என்பது இன்றைய சூழலில் நாம் அறிந்த ஒன்றே. மக்களின் தேவைகளை நன்கு உணர்ந்தே பல நவீனப் போக்குவரத்து வசதிகள் இன்று சேவையில் உள்ளன. போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்தில் பேருந்து, விரைவுப் பேருந்து, விரைவுத் தொடர்வண்டி போன்ற வசதிகள் நாளுக்கு நாள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இவை யாவும் மக்களின் பயணத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சொற்களஞ்சியம்**


- சாதனம்
- கால்நடை
- இலகுவாக
- ஏற்றுமதி
- இறக்குமதி

## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியில் கண்டறிந்த முக்கியக் கருத்துகளைப் பொருத்தமான வரைபடத்தில் எழுதிக் காட்டுக.

## நடவடிக்கை 2

ஒற்றுமை வேற்றுமைகளை இரட்டைக் குமிழி வரிபடத்தின் மூலம் எழுதுக.




2.4.9 - வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட கருத்துகளை உரையாடுதல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 3

# சாலை விபத்துகள்

## வாசித்து எழுதுக.




நமது நாட்டில் வாகனங்கள் செல்வதற்குச் சாலைகள் முக்கியமான வழியாகும். இத்தகைய சாலைகள் நாளுக்கு நாள் பல மேம்பாடுகளைக் கண்டு வருகின்றன. நெடுஞ்சாலைகள் நாட்டின் பல இடங்களுக்கு நாம் பயணம் செய்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன.

சாலைகளின் வசதிகள் அதிகரித்த போதிலும் சாலை விபத்துகள் நாளுக்கு நாள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சாலை விபத்துகள் நிகழ்வதற்குப் பல காரணங்களைக் கூறலாம். வாகனமோட்டிகள் பொறுப்பின்றித் தங்களின் வாகனங்களைச் செலுத்துவதால் பெரும்பாலான விபத்துகள்


KPM

ஏற்படுகின்றன. இச்சூழலில் வாகனங்களை அதிபயங்கர வேகத்தில் செலுத்துகின்றனர். வேகக் கட்டுப்பாடுகளையும் மீறும் இவர்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. மேலும், மற்ற வாகனமோட்டிகளுக்கும் பல இன்னல்கள் உண்டாகின்றன.

சாலை விதிகளைப் பின்பற்றாமல் செல்வதாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. இருக்கைப்பட்டை அணியாமல் செல்வது, அறிவிப்புப் பலகைகளை அலட்சியம் செய்வது, அபாயக் குறியீடுகளை மீறிப் பயணிப்பது, வளைவுகளில் வேகத்தைக் குறைக்காமல் செல்வது போன்ற செயல்களாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. இருக்கைப்பட்டை அணியாமல் வாகனத்தைச் செலுத்துவதால் விபத்துகள் நேரிடும் போது உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன.

வாகனமோட்டிகளின் மெத்தனப் போக்கும் சிந்தனையும் சாலை விபத்துகள் நடக்க மற்றொரு காரணமாகத் திகழ்கின்றன. வாகனங்களைச் செலுத்தும்போது திறன்பேசியைப் பயன்படுத்துதல், மது அருந்திவிட்டு போதையில் வாகனத்தைச் செலுத்துதல் போன்ற எதிர்மறை நடவடிக்கைகளினால் விபத்துகள் ஏற்படுகின்றன. இத்தகைய சூழலில் வாகனமோட்டிகள் தங்களின் நிதானத்தையும் இழக்கின்றனர் என்பதும் உண்மையே.

## நடவடிக்கை 1

கொடுக்கப்பட்ட தலைப்புகளில் முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றைப் பத்தியில் எழுதுக.

1. பொதுப்போக்குவரத்து
2. வாகன நெரிசல்

### அருஞ்சொற்கள்

- மேம்பாடு
- கட்டுப்பாடு
- அலட்சியம்
- உயிர்ச்சேதம்
- நிதானத்தை

## நடவடிக்கை 2

சாலை விபத்துகளையும் நெரிசலையும் குறைக்கும் பொருட்டு வழிமுறைகள் அடங்கிய வரிபடம் ஒன்றனை வரைந்து எழுதுக.

3.5.5 - முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- விவாதங்களில் கூறப்பட்ட முதன்மைக்கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று எனப் பிரித்துக் கூறப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட தலைப்புகளில் முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று அடங்கிய பத்திகளை எழுதுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## வெற்றி வேற்கையையும் பொருளையும் அறிக.









## சொற்களஞ்சியம்

- இரவல்
- படைப்பாற்றல்
- நற்சிந்தனை
- முத்திரை
- செம்மை

## வெற்றி வேற்கையும் பொருளும்

- **கல்விக் கழகு கசடற மொழிதல்.**
  பிழையறப் பேசுவதே கற்ற கல்விக்குச் சிறப்பு.

## நடவடிக்கை 1

வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; சரியான வரிவடிவத்துடன் எழுதுக.

## நடவடிக்கை 2

வெற்றி வேற்கையின் பொருளுக்கு ஏற்ப நீ அறிந்த சில உதாரணங்கள், சூழல்கள் ஆகியவற்றைக் கூறி உரையாடுக.

## தகவல் அறிக

அதிவீரராம பாண்டியர் என்பவர் ஓர் அரசர் மட்டுமின்றி திறமையான தமிழ்ப் புலவருமாவார். இவருக்குச் சீவலமாறன் எனும் பெயரும் உண்டு.

4.12.1 - நான்காம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- வெற்றி வேற்கையையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான வேறு ஒரு சூழலை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.



‘படி’ சேர்ந்துவரும் சொல்லுக்குப் பின் வலிமிகாது.

**எடுத்துக்காட்டு:**

1. கேட்கும்படி + சொன்னார் = கேட்கும்படி சொன்னார்
2. அமரும்படி + பணித்தார் = அமரும்படி பணித்தார்

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

1. தரும்படி + பணித்தார் =
2. வாங்கும்படி + சொன்னார் =
3. மூடும்படி + கூறினாள் =
4. உதிரும்படி + தட்டினாள் =
5. எழும்படி + பணித்தார் =
6. மறக்கும்படி + கெஞ்சினான் =
7. சிரிக்கும்படி + பேசினான் =
8. உறங்கும்படி + தாலாட்டினாள் =
9. வரையும்படி + பணித்தார் =
10. நிறுத்தும்படி + சொன்னான் =
11. ஆடும்படி + சொன்னாள் =
12. தேடும்படி + பணித்தார் =
13. மகிழும்படி + கூறினார் =
14. கேட்கும்படி + பாடினாள் =
15. ஓடும்படி + பணித்தார் =
16. பறிக்கும்படி + சொன்னார் =
17. விழும்படி + செய்தான் =
18. வெளுக்கும்படி + துவைத்தாள் =
19. இரசிக்கும்படி + பாடினார் =
20. உண்ணும்படி + கூறினார் =
21. பறக்கும்படி + செய்தார் =
22. திறக்கும்படி + பணித்தாள் =

5.9.2 - ‘படி’எனும் சொல்லுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வலிமிகா இடங்கள் பற்றி விளக்கி அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டுகளை வாசித்து அறியச் செய்தல்.
- சேர்த்தெழுதும் பயிற்சிகளைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 14
# சுகாதாரம்
## பாடம் 1
## பல் பரிசோதனை

### கலந்துரையாடுக.





**தகவல் அறிக**

**உண்ணும் முறை**

- கடித்தல்
- விழுங்கல்
- நக்கல்
- மெல்லல்
- பருகல்
- உண்ணல்

### நடவடிக்கை 1

குறிப்புகளைத் துணையாகக் கொண்டு அனுபவத்தைத் தொகுத்துக் கூறுக.

பள்ளியில் - பல் பரிசோதனை நாள் - மாணவர்கள் - பற்களைச் சோதித்தல் - பல் தூரிகையைப் பயன்படுத்துதல் - பெற்றோரிடம் - அன்று முதல்

1.10.2 - பெற்ற அனுபவங்களைத் தொகுத்துக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர் படங்களைப் பார்த்துக் கலந்துரையாடப் பணித்தல்.
- குறிப்புகளைக் கொண்டு அனுபவக் கதையாகக் கூறப் பணித்தல்.
- மாணவர்கள் தாங்கள் பெற்ற வேறு அனுபவங்களைத் தொகுத்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 2

# தூய்மையைப் பேணுவோம்.

## வாசித்து அறிக.

செயலாளர்,
செம்பங்கி குடியிருப்புப் பகுதி,
அலோர் மாவட்டம்,
71350 அலோர் காஜா,
மலாக்கா.

---

நகராண்மைக் கழகத் தலைவர்,
அலோர் மாவட்டம்,
71350 அலோர் காஜா,
மலாக்கா.

06 ஜூலை 2020

மதிப்பிற்குரிய ஐயா,

**குப்பைத் தொட்டிகளைப் புதிதாக மாற்ற வேண்டுகோள்**

வணக்கம். செம்பங்கி குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்களாகிய நாங்கள் சில வேண்டுகோள்களைத் தங்கள் பார்வைக்கு வைக்கிறோம்.

2. எங்கள் குடியிருப்புப் பகுதியில் சுமார் 260 வீடுகள் உள்ளன. எங்களின் வீடுகளுக்குச் சில ஆண்டுகளுக்கு முன் அளிக்கப்பட்ட குப்பைத் தொட்டிகள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனால், நாங்கள் குப்பைகளைக் கொட்டிச் சரியான முறையில் மூட முடியவில்லை. இதன் விளைவாகக் கொசுக்கள் உற்பத்தியாகின்றன.

3. துர்நாற்றம், குப்பைகளில் மொய்க்கும் ஈக்கள் போன்றவற்றினால் இங்கு வசிக்கும் பலருக்கு அடிக்கடி நோய்கள் உண்டாகின்றன. சிறு குழந்தைகளும் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர். சுகாதாரம் பாதிக்கப்படுவதால் எங்களின் அன்றாட வாழ்க்கையும் சீராக இல்லை.

4. எனவே, தயைகூர்ந்து எங்கள் வசிப்பிடப் பகுதிக்குப் புதிய குப்பைத் தொட்டிகளை மாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களது சேவைக்கு எங்களின் மனமார்ந்த நன்றி.

இங்ஙனம்,
*மாதவன் த/பெ கந்தன்*
செயலாளர், செம்பங்கி குடியிருப்புப் பகுதி.

## நடவடிக்கை 1

அலுவல் கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.

2.3.10 - கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கடிதத்தைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- கடிதத்தில் கூறப்பட்ட விவரங்கள் பற்றி மாணவர்கள் கூறச் செய்தல்.
- மேலும் சில கடிதங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 3

# உணவே மருந்து

## வாசித்து எழுதுக.

க. தமிழ்மாறன்,
64, ஜாலான் கருடன்,
தாமான் மெலூர்,
25000 கோத்தா பாரு,
கிளந்தான்.

29.09.2020

பேரன்புமிக்க அத்தை அவர்களுக்கு,

வணக்கம். நாங்கள் இங்கு நலமாக இருக்கிறோம். அங்கு உங்கள் அனைவரின் நலமறிய ஆவல்.

சென்ற வாரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தங்கை அருள்மொழி நேற்றுதான் வீடு திரும்பினாள். உடல் எடை கூடுதலினால் அருள்மொழிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. மருத்துவர்கள் அவளை நன்கு பரிசோதித்தனர். உடல் பருமன்தான் மூச்சுத் திணறலுக்குக் காரணம் என்றனர்.

அருள்மொழி அடிக்கடி நொறுக்குத் தீனி, துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு, குளிர்பானங்கள் ஆகியவற்றை விரும்பிச் சாப்பிடுவாள் என்பது உங்களுக்குத்தான் தெரியுமே! அவளின் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று மருத்துவர்கள் உறுதிபட அறிவுரை கூறி உள்ளனர்.

மேலும், தொடர்புச்சாதனங்களான தொலைக்காட்சி, கணினி, இணையம் போன்றவற்றைப் பயன்படுத்தும் காரணத்திற்காக அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பதும் தவறு என்றனர். தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது விளையாடுவது, உடல் பயிற்சி செய்வது அவசியம் என்றும் கூறினர். தொலைக்காட்சி, முகநூல், இணையம் ஆகியவற்றைப் பார்த்தபடி சாப்பிடுவதும் கூடாது என்று அறிவுரை கூறினர்.

மருத்துவர் கொடுத்த அனைத்து விளக்கங்களும் அறிவுரைகளும் மிகவும் பயனுள்ளவையாகவே இருந்தன. இனி, நானும் மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்வேன். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். அருள்மொழி இப்போது குணமாகி நலமாக இருக்கிறாள்.

விரைவில் நாங்கள் அனைவரும் உங்களைக் காண வருவோம். மாமாவை நலம் விசாரித்ததாகக் கூறவும். மீண்டும் அடுத்த மடலில் சந்திக்கின்றேன்.
நன்றி.

இப்படிக்கு,
*க. தமிழ்மாறன்*

## நடவடிக்கை 1

உறவுக் கடிதத்தின் அமைப்பு முறையைப் பற்றிக் கலந்துரையாடுக.

## நடவடிக்கை 2

தலைப்பிற்கேற்ப 80 சொற்களில் உறவுக் கடிதம் எழுதுக.

3.6.9 - 80 சொற்களில் உறவுக் கடிதம் எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உறவுக் கடிதத்தின் அமைப்பு முறையைக் கலந்துரையாடுதல்
- உறவுக் கடிதம் ஒன்றனை மாணவர்கள் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## செய்யுளின் பொருளை அறிக.












**நாலடியாரும் பொருளும்**

- **நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை**
  **அல்லார் எனினும் அடக்கிக்கொளல் வேண்டும்**
  **நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு**
  **புல்லிதழ் பூவிற்கும் உண்டு.**

நல்லவர் என ஒருவரை நாம் நினைத்து அதிக அன்புடன் உறவாடிப் பழகிய பின்னர், அவர் நல்லவராக இல்லாவிடினும் அவருடைய குற்றங்குறைகளைப் பிறரிடம் கூறக்கூடாது. அவற்றை மனத்திலேயே அடக்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், நெல்லுக்கும் அதன் உமி குறையாக உண்டு. நீருக்கும் நுரை குறையாக உள்ளது. சிறப்புப் பெற்ற மலருக்கும் கூட அதன்மேல் உள்ள புற இதழ் குறையாக உள்ளது. ஒருவருடைய குற்றங்குறைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது.

## நடவடிக்கை 1

செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; சரியான வரிவடிவத்துடன் எழுதிக் காட்டுக.

## நடவடிக்கை 2

செய்யுளுக்குப் பொருத்தமான வேறு சூழலைக் கூறி உரையாடுக.

4.10.2 - நான்காம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறச் செய்தல்.
- செய்யுளுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை மாணவர்கள் குழுமுறையில் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகா இடங்கள் அறிக.

- அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின்பின் வலிமிகாது.
- எது என்னும் வினாச் சொல்லின்பின் வலிமிகாது.

**எடுத்துக்காட்டு :**

1 அது + திடல் = அது திடல்
2 இது + குடை = இது குடை
3 எது + தவறு = எது தவறு?
4 அது + கட்டம் = அது கட்டம்
5 இது + பறவை = இது பறவை
6 எது + தீமை = எது தீமை?

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அது + கரம் | = | | 13 | அது + சிலந்தி | = | |
| 2 | இது + கடல் | = | | 14 | எது + பட்டம் | = | |
| 3 | எது + பெரியது | = | | 15 | இது + பாடல் | = | |
| 4 | அது + குளம் | = | | 16 | இது + கவிதை | = | |
| 5 | இது + தொட்டி | = | | 17 | எது + புதுமை | = | |
| 6 | எது + சரி | = | | 18 | இது + காந்தம் | = | |
| 7 | இது + சாலை | = | | 19 | அது + பொம்மை | = | |
| 8 | எது + சாட்டை | = | | 20 | எது + கூடம் | = | |
| 9 | அது + படகு | = | | 21 | அது + கதவு | = | |
| 10 | இது + தோட்டம் | = | | 22 | இது + போர்வை | = | |
| 11 | எது + பாதை | = | | 23 | எது + கேணி | = | |
| 12 | அது + சேவல் | = | | 24 | அது + சீப்பு | = | |

5.9.3 - அது, இது, எது என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகா இடங்களை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டுகளை வாசிக்கப் பணித்தல்.
- வலிமிகாப் பயிற்சிகளைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்




# தொகுதி 15
## நேசமிகு சமூகம்
## பாடம் 1
## ஒற்றுமையுணர்வு

### செவிமடுத்திடுக.



**மரம் நடுவோம்**
- வசிப்பிடத்தைச் சுற்றிலும் மரங்கள் நடலாம்.
- உயிர்வளி அதிகரிக்கும்.
- பசுமை, மன அமைதி உருவாகும்.
- இயற்கை அழகு இதமான சூழலை உருவாக்கும்.

செவிமடுத்திடுக




**இசை உடற்பயிற்சி**
- காலை வேளையில் நடைபெறும்.
- ஆண்களும் பெண்களும் கலந்து கொள்ளலாம்.
- உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம்.




**சேமிப்புத்திட்டம்**
- சமூக நலம்.
- சேமிக்கும் உணர்வை வளர்த்தல்.
- எதிர்காலம், சிந்தனை, சிக்கனம், மிதமான வாழ்வு.
- வளமான வாழ்வின் அடித்தளம்.

**கைத்தொழில் கற்போம்**
- இளைஞர்களுக்கு முதலிடம்.
- சிறுதொழில் செய்ய ஊக்குவித்தல்.
- சுயகாலில் நிற்றல், தன்னம்பிக்கை வளர்த்தல்.



1.3.5 - செவிமடுத்தவற்றிலுள்ள கருப்பொருளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- செவிமடுத்தவற்றிலுள்ள கருப்பொருளைக் கூறுதல்.
- குழுமுறையில் கருப்பொருளைப் பட்டியலிட்டு விளக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

பாடம் 2

# விளம்பரத்தின் அவசியம்

## வாசித்து அறிக.



தற்போதைய வணிகத் துறை போட்டிகள் நிறைந்த ஒன்றாகும். வியாபாரத்துறை சிறந்து விளங்க வேண்டுமாயின் விளம்பரங்களே துணைபுரியும் கருவியாகின்றன.

விளம்புதல் என்ற சொல்லின் பொருள் திரும்பத் திரும்பச் சொல்லுதல் எனப் பொருள்படும். ஒரு பொருளை விற்பனை செய்வதற்கு அப்பொருளைப் பற்றிய விவரங்களைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டும். அவ்வகையில் வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள், முகநூல் போன்ற தகவல் ஊடகங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன.

விளம்பரங்களின் மூலம் பல நிறுவனங்கள் தங்களின் வணிகத்தில் முன்னேற்றம் காண்கின்றன. தகவல் ஊடகங்கள் மட்டுமன்றி சுவரொட்டி, பேருந்துகள், மின்சார இரயில்கள், சாலையோர பதாகைகள் போன்றவற்றிலும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. பலவிதமான விளம்பரங்களினால் பொதுமக்கள் கவரப்படுகின்றனர். தங்களுக்குப் பிடித்தமான பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர்.

பொருள்களை வாங்கும் சக்தி அதிகரிப்பதனால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் காண்கின்றது. மேலும், உள்நாட்டுப் பயன்பாடும் அதிகரிக்கின்றது. இதன்மூலம் அவற்றின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கின்றது. தொடர்ந்து நாட்டின் பணபலத்தை வலுப்படுத்த வழிவகுக்கின்றது.



விளம்பரங்கள் உள்நாட்டு மக்களை மட்டுமன்றி வெளிநாட்டு மக்களையும் ஈர்க்கவே செய்கின்றன. இதனால், வெளிநாட்டவரும் நம் நாட்டுப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்த முற்படுகின்றனர். இதன் மூலம் நம் நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது.




தொடர்புச் சாதனங்களின் மூலம் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு வினாடிக்கு, நிமிடத்திற்கு என்று குறிப்பிட்ட தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது. சுவரொட்டிகள், பேருந்தில் விளம்பரங்கள் போன்றவற்றுக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திய பிறகே அத்தகைய விளம்பரங்களைச் செயல்படுத்த முடியும். நிறுவனங்களால் செலுத்தப்படும் விளம்பரத் தொகையும் நாட்டின் வருமானமாகவே அமைகின்றது.

தனி நபர், நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்கான செலவுதான் விளம்பரம். ஆயினும், பயனீட்டாளர்களாகிய நாம் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கிப் பயன்பெற வேண்டும்.

## நடவடிக்கை 1

வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. விளம்பரங்கள் எத்துறையின் கருவியாக விளங்குகின்றன?
2. விளம்புதல் எனும் சொல்லின் பொருள் யாது?
3. விளம்பரங்களைத் தாங்கிச் செல்லும் சாதனங்கள் யாவை?
4. விளம்பரங்கள் மூலம் நிறுவனங்கள் எவ்வாறு பயனடைகின்றன?
5. விளம்பரங்களினால் நாடு பெறும் நன்மைகளைக் கூறுக.
6. நீ விளம்பரம் செய்ய விரும்பினால் எந்தத் தொடர்புச் சாதனத்தைத் தேர்வு செய்வாய்? ஏன்?

விளம்பரங்களினால் ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடுக.

2.6.6 - பொருளாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்குச் சரியான விடையளிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 3

# முடிவுரையை அறிக

## வாசித்து எழுதுக.

| தலைப்பு | முடிவுரை |
|---|---|
| ஒன்றுபட்டு வாழ்வதன் அவசியம் | நாம் அனைவரும் இனம், மதம் என்ற பாகுபாடின்றி ஒற்றுமையாக வாழ வேண்டும். ஒன்றுபட்டு வாழ்வதன் மூலம் நமது நாட்டை வலிமையுள்ளதாக உருவாக்கலாம். |
| உழைப்பே உயர்வு தரும் | உழைக்க வேண்டும் எனும் எண்ணம் நம் அனைவரின் மனத்திலும் எழ வேண்டும். உழைக்கும் ஒவ்வொருவரும் வாழ்வில் வெற்றி பெறுவது நிச்சயம். எனவே, உழைப்போம், உயர்வோம். |
| மனிதநேயத்தின் சிறப்பு | மானிடராய்ப் பிறந்த நாம் அனைவரும் ஒருவரோடு ஒருவர் அன்பு செலுத்தி சகோதர மனப்பான்மையுடன் வாழ வேண்டும். மனித நேயமே நம் வாழ்வின் ஆனந்தம். |
| கல்வியே சிறந்த செல்வம் | மாணவர்களாகிய அனைவரும் கல்வியின் சிறப்புகளை அறிந்திருக்க வேண்டும். கல்வி என்பது நமது இரு கண்களுக்கு ஒப்பானது என அறிந்து திறம்படக் கற்று வாழ்வில் சிறக்க வேண்டும். |
| இளைஞர்களும் சமுதாயத் தொண்டும் | இளைஞர்கள் ஆற்றும் சமுதாயத் தொண்டுகளால் நம் நாடு மேன்மேலும் முன்னேறும். எனவே, இளைஞர்கள் தங்களைத் தொண்டு செய்ய ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். |
| சேமிப்பின் அவசியம் | மாணவர்களாகிய நாம் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறுவயது முதலே சேமிக்கப் பழகுவோமாக. |

## நடவடிக்கை 1

குறிப்புகளைக் கொண்டு முடிவுரை எழுதுக.

| | |
|---|---|
| நூல் நிலையத்தின் பயன்கள் | கற்பது - அவசியம் - பொது அறிவை - பருவத்தே - இளமையில் கல் |
| சுற்றுப்புறத் தூய்மையின் அவசியம் | சுற்றுப்புறத் தூய்மை - மக்களின் - பொறுப்பு - கடமையாகப் போற்ற - சுத்தம் சுகம் தரும் |
| இணையத்தின் நன்மை தீமைகள் | பல நன்மைகள் - அல்லவை நீக்கி - நல்லவற்றையே பெற |

## நடவடிக்கை 2

தலைப்பிற்கு ஏற்ற முடிவுரையை எழுதுக.

1. காலம் பொன் போன்றது.

2. பசுமை போற்றுவோம்.

3. வளர்ப்புப் பிராணிகள்.

4. மூத்தோர் செயல்.

3.5.4 - கட்டுரைத் தலைப்புக்கேற்ற முடிவுரையைப் பத்தியில் எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கட்டுரைத் தலைப்புகளின் முடிவுரைகளை வாசித்தல்.
- குழுமுறையில் மாணவர்கள் கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு முடிவுரை எழுதப் பணித்தல்.
- தலைப்பிற்கேற்ப முடிவுரையை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறிக.



குருவும் சீடனும் வெளியூருக்குச் சென்றனர். இருவரும் குதிரையில் பயணம் செய்தனர். இருள் பரவத் தொடங்கியது. பாதை ஓரம் இருந்த மரத்தில் தங்கள் குதிரையைக் கட்டி வைத்துவிட்டு ஓய்வெடுக்கத் தொடங்கினர். அவ்வழியாக வந்த வழிப்போக்கன் ஒருவன் அவர்களைப் பார்த்து "நீங்கள் இருவரும் சேர்ந்தாற்போல தூங்கிவிடாதீர்கள். இங்கு வழிப்பறித் திருடர்கள் அதிகம். ஒருவர் தூங்கினால், மற்றொருவர் குதிரைக்குக் காவல் இருக்க வேண்டும்," என்றான்.

சிறிது நேரம் யோசித்த குரு, "நீ விழிப்போடு இரு. நான் உன் மடியில் தலை வைத்துத் தூங்குகிறேன்," என்றார். சீடனும் சம்மதம் தெரிவித்தான்.

"ஆனால், குருவே எனக்கும் தூக்கம் வருகிறது. தூங்காமல் இருக்க ஏதாவது வழி சொல்லுங்கள்..." என்றான் சீடன்.

"நீ ஏதாவது ஒரு சிக்கலைப் பற்றி யோசித்துக் கொண்டிரு..." எனச் சற்றுக் கோபம் கொண்டவராகக் **கடுகடு**வெனப் பேசினார் குரு.

நள்ளிரவில் கண்விழித்த குரு, "சீடனே! எதை நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்றார்.

"குருவே, ஆகாயத்தில் **பளபள**வென மின்னும் நட்சத்திரங்கள் தானாக வந்தனவா அல்லது யாராவது கொட்டினார்களா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன்," என்றான்.

மீண்டும் இரவு இரண்டு மணி அளவில் குரு கண்விழித்து, "இப்பொழுது என்ன நினைத்துக் கொண்டு விழித்திருக்கிறாய்?" என்று வினவினார்.

"குருவே, கடல் நீரில் உள்ள உப்பு தானாக வந்ததா அல்லது யாரேனும் மூட்டை மூட்டையாகக் கொண்டு சென்று கொட்டினார்களா என யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்றான்.

பொழுது விடிந்தது. யாரோ காய்ந்த இலைகளின் மீது **சரசர**வென நடப்பது போல உணர்ந்த குரு கண் விழித்தார். சீடனிடம் அதே கேள்வியைக் கேட்டார்.

“குருவே, குதிரை தானாக ஓடிவிட்டதா அல்லது யாரேனும் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்..” என்றான்.

**இரட்டைக்கிளவிகளும் பொருளும்**

- **கடுகடு**
  பேச்சில், செயலில் ஒருவர் தன் கோபத்தின் கடுமையை வெளிப்படுத்துதல்.
- **பளபள**
  கண்ணைக் கூசச் செய்யும் ஒளி.
- **சரசர**
  காய்ந்த இலை (சருகு) ஒன்றோடொன்று உரசும் போது அல்லது மிதிபடும் போது உண்டாகும் ஒலி / உரசல் சத்தம்

## நடவடிக்கை 1

இரட்டைக்கிளவிகளைச் சரியான வாக்கியத்துடன் சேர்த்து வாசித்திடுக.

1. மாலதி தோட்டத்தில் நடந்தபோது ______ வெனும் ஓசை கேட்டது.
2. அம்மா வாங்கிய வெள்ளிப்பாத்திரங்கள் ______ வென மின்னின.
3. வேலைகளை முறையாகச் செய்யாத பணியாளர்களிடம் முதலாளி ______ வெனப் பேசிக் கண்டித்தார்.

## நடவடிக்கை 2

வாக்கியம் அமைத்திடுக.

1. பளபள ______
2. கடுகடு ______
3. சரசர ______

## நடவடிக்கை 3

இரட்டைக்கிளவிக்கு ஏற்ப சூழலை உருவாக்கப் பணித்தல்.

4.5.4 - நான்காம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறிதல்.
- வாக்கியங்களில் சரியான இரட்டைக்கிளவிகளை இணைத்து வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையாளர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.

நான்காம் வேற்றுமை உருபு (கு)க்குப்பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு :**

1 தோழிக்கு + தந்தாள்=தோழிக்குத் தந்தாள்

2 பள்ளிக்கு + சென்றான்=பள்ளிக்குச் சென்றான்



### நடவடிக்கை 1

வலிமிகும் இடங்களை அறிந்து சேர்த்தெழுதுக.

1 மருதன் காலை வேளையில் தன் தோட்டத்துக்கு+சென்றான். நிறைய பூச்செடிகளை நட்டான். செடிகளுக்கு+தண்ணீர் ஊற்றினான். நீண்ட நேரம் வேலை செய்ததால் அவனுக்கு+களைப்பாக இருந்தது. மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுத்தான். மாலையில் வீட்டிற்கு+திரும்பினான்.

2 பள்ளிக்கு+போன தங்கை வீடு திரும்பினாள். மதிய உணவு உண்ட பின் தனது அறைக்கு+சென்றாள். வீட்டுப் பாடங்களை எடுத்தாள். கணித வினாக்களுக்கு+பதில் எழுதினாள். சிறிது நேரத்தில் அவளுக்கு+தாகம் எடுத்தது. அம்மாவிடம் பழச்சாறு கேட்டாள்.

3 மாலை நேரமானது. அலுவலகத்திற்கு+சென்ற தந்தை வீடு திரும்பினார். தந்தைக்கு+களைப்பாக இருப்பதாகக் கூறினார். பாட்டி அவருக்கு+சூடான தேநீர் தயாரித்துக் கொடுத்தார். எங்களுக்கு+பிடித்தமான உளுந்து வடையைச் செய்து கொடுத்தார்.

4 அம்மா சமையலுக்கு+ தேவையான காய் கறிகளைச் சந்தையில் வாங்கினார். அவருக்கு+துணையாக அண்ணனும் சென்றார். இருவரும் பொருள்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு+புறப்பட்டனர்.

5.8.1 - இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகும் இடங்களை அறிதல்.
- நான்காம் வேற்றுமை உருபுக்குப்பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும் என்பதை அறியச் செய்தல்.
- வலிமிகும் சொற்களைச் சேர்த்தெழுதும் பயிற்சியைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

தொகுதி 16
# பாதுகாப்பு
பாடம் 1
## ஆபத்தைத் தவிர்ப்போம்

கலந்துரையாடுக.



## நடவடிக்கை 1


தொடர்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுக.

**எடுத்துக்காட்டு :**

- நாம் வீட்டில் பாதுகாப்பைப் பேண வேண்டும்.
- பெரியோரின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.

## நடவடிக்கை 2

தொடர்படங்களுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுக.



1.7.14 - தொடர்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- படங்களுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுதல்.
- குழுமுறையில் படங்கள் உணர்த்தும் கதையைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 2

# நலம் பேணுக

## வாசித்து அறிக.




நம் வாயில் பற்களுக்கு இடையில் பாதுகாப்பாக இருக்கும் உறுப்பு நாக்கு. இது தசையால் ஆனது. உடலில் எலும்பு இல்லாத உறுப்புகளில் நாக்கும் ஒன்று. உணவை உண்பது, உணவை மென்று விழுங்குவது, பானங்களை அருந்துவது போன்ற உணவுச் செரிமான இயக்கத்துக்கு உதவுவது நாக்கின் முக்கியப் பணியாகும்.

நாம் பேசுவதற்குத் தேவையான ஒலி வடிவத்தைத் தருவதற்கு நாக்கின் அசைவுகள் மிக முக்கியமாகும். நாக்கின் மேற்பரப்பில் ஆயிரக்கணக்கான அரும்புகள் அமைந்துள்ளன. நாம் உண்ணும் உணவின் சுவையை அறிய உதவுவதும் நாக்குதான். அதற்கு உதவும் வகையில் நாக்கில் சுவையுணர்வு ஏற்பிகள் ஏராளமாக உள்ளன. இவை இனிப்பு, கரிப்பு, புளிப்பு, கசப்பு ஆகிய நான்கு அடிப்படைச் சுவைகளை நமக்கு உணர்த்துகின்றன.

நாக்கின் நுனி இனிப்புச் சுவையை உணர்த்தும். கரிப்புச் சுவையை நாக்கின் மேற்புறம் அறியும். நாக்கின் பின்புறம் கசப்பு அறியும். புளிப்புச் சுவையை நாக்கின் பக்கவாட்டுப் பகுதிகள் உணர்த்தும். நமது நாக்கைச் சுத்தமாக வைத்திராவிட்டால் பூஞ்சை போன்ற தொற்றுக் கிருமிகளால் பாதிப்படையும். இதனால், நாக்கில் புண் ஏற்படும். இரும்புச் சத்து போன்ற ஊட்டச் சத்துகள் குறைவாக உள்ளவருக்கு அடிக்கடி நாக்கில் புண்கள் உண்டாகும்.

நோய் எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், புகைபிடிப்பவர்கள், பற்கள் கூர்மையாக உள்ளவர்கள், மருந்துகளின் ஒவ்வாமை இருப்பவர்கள் ஆகியோரின் நாக்கில் புண் தோன்றும். பெரும்பாலும் குழந்தைகள், சிறுவர்கள் இப்பிரச்சனைக்கு ஆளாகின்றனர். இதற்குக் காரணம் ஊட்டச்சத்துக் குறைபாடுதான் எனலாம். கீரை வகைகள், பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, பருப்பு வகைகள், பேரீச்சம், நிலக்கடலை, தக்காளி, திராட்சை போன்ற உணவு வகைகளை அடிக்கடி உண்ண வேண்டும். நாக்கு என்பது ஒரு நோய் காட்டும் உறுப்பு என்றும் கூறலாம். நாக்கைப் பார்த்தே நாற்பதுக்கும் மேற்பட்ட நோய்களைக் கண்டறியலாம்.

நாக்கைப் பாதுகாக்க காலை, இரவு என இரு வேளைகளிலும் பற்களை நன்கு துலக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பற்களைத் துலக்கும் ஒவ்வொரு முறையும் நாக்கையும் சுத்தப்படுத்த வேண்டும். அதிக சூடான பானங்களும், அதிக குளிரான பானங்களும் நாக்கைப் பாதிப்படையச் செய்யும். அதிகமான நோய் எதிர்ப்பு மருந்து மாத்திரைகளை உண்பதாலும் நாக்கு பாதிப்படையும். எனவே, மருத்துவர் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ள வேண்டும். தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிப்பதையும் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நாக்கின் பாதுகாப்பு அம்சங்களைப் பின்பற்ற வேண்டுவது நமது கடமையாகும்.

## அருஞ்சொற்கள்

- பானங்கள்
- அரும்புகள்
- பூஞ்சை
- கிருமிகள்
- ஆலோசனை

## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளை அடையாளம் கண்டு கூறுக.

## நடவடிக்கை 2

பத்தியில் கூறப்பட்ட முக்கியக் கருத்தை அடையாளம் கண்டு இணைப்பு வரிபடத்தில் எழுதி வாசித்திடுக.

2.4.7 - வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட கருப்பொருளை அடையாளம் கண்டு உரையாடுதல்.
- கருத்துகளை இணைப்பு வரிபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 3

# அன்பே தெய்வம்

## தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுக.




**நடவடிக்கை 1**

தொடர்படத்தைக் கொண்டு 80 சொற்களில் கதை ஒன்றனை எழுதுக.


## நடவடிக்கை 2

தொடர்படத்தைக் கொண்டு 80 சொற்களில் கதை ஒன்றனை எழுதுக.

அ




ஆ




3.6.7 - 80 சொற்களில் தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பார்த்து உரையாடுதல்.
- குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதையை உருவாக்கப் பணித்தல்.
- கதையை எழுதி வாசித்துக் காட்டுதல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4


# செய்யுளும் மொழியணியும்

## உலகநீதியையும் பொருளையும் அறிக.

சூழல் 1



சூழல் 2




**உலகநீதியும் பொருளும்**

- **நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்.**
  நஞ்சுடைய பாம்புடன் ஒருநாளும் விளையாடக்கூடாது.
- **நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்.**
  நல்லவர்களுடைய நட்பு இல்லாதவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ளக்கூடாது.

## நடவடிக்கை 1

உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக; மனனம் செய்து சரியான வரிவடிவத்துடன் எழுதுக.

## நடவடிக்கை 2

உலகநீதிகளுக்கு ஏற்ப வேறு சூழலை அல்லது கதை ஒன்றனை உருவாக்கிக் கூறுக.

4.9.2 - நான்காம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரையாடலை வாசித்து அறிதல்.
- உலகநீதியையும் பொருளையும் அறியச் செய்தல்.
- உலகநீதிகளுக்கு ஏற்ப வேறு சூழல்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.








### நடவடிக்கை 1

சரியான உரையாடலைக் கூறுக.





5.8.2 - அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப் பின் வலிமிகும் என்பதனை அறியச் செய்தல்.
- உரையாடலுக்கு ஏற்ற பதில் வாக்கியத்தைக் கூறப் பணித்தல்.
- மேலும் சில சொற்களைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# குரங்கும் முதலையும்




1 ஆரம்பம்

2 எழுத்தறி வித்தவன்...

3 2ஆம் வேற்றுமை உருபு

12 ஒரு கட்டம் பின்னால் செல்க

13 5ஆம் வேற்றுமை உருபுகள்

14 பதினைந்துக்குச் செல்லவும்.

15 முக்கனிகள் யாவை?

16 எட்டுக்குச் செல்க

17 கிளையில்லா மரம்

18 முதலில் இருந்து ஆரம்பிக்கவும்

19 தோன்றின் புகழொடு...

28 எதிர்ச்சொல்
அகம் X
புகழ்ச்சிX

29 பொருள் கூறுக:
சினம்-
அன்னம்-

30 வெற்றி உனதே! வாழ்த்துகள்!

**விதிமுறைகள்**

1. 2 பேர் விளையாடலாம்.
2. தாயம் போட்டு ஆரம்பிக்கவும்.
3. 1 முதல் 30 வரை கட்டங்களில் உள்ள குறிப்புகளைப் பின்பற்றுங்கள்.
4. குரங்குக் கட்டத்துக்கு வந்தால் வேகமாக முன்னேறலாம்.
5. முதலைக் கட்டத்துக்கு வந்தால் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.
6. யார் முதலில் 30ஆவது கட்டத்தை அடைகிறாரோ, அவரே வெற்றியாளர்.

**4** ஐந்துக்குச் செல்லவும்

**5** முத்தமிழ் யாவை?

**6** மீண்டும் ஒரு வாய்ப்பு

**7** முதலில் இருந்து ஆரம்பிக்கவும்

**8** 6ஆம் வேற்றுமை உருபு

**9** எண் ஆறுக்குச் செல்லவும்

**10** ஒரு கட்டம் முன் செல்க

**11** நெஞ்சாரப் பொய்... நிலையில்லாக்...

**20** மீண்டும் ஒரு வாய்ப்பு

**21** ஆன முதலில் அதிகம்...

**22** ஒரு கட்டம் முன் செல்க

**23** சிலை மேல்... கண்ணினைக் காக்கும்...

**24** இரண்டு கட்டங்கள் முன் செல்க

**25** ஐம்பெருங் காப்பியங்களில் மூன்று

**26** பாரம்பரிய விளையாட்டுகளில் மூன்று

**27** இருபதுக்குச் செல்க

**ஆசிரியர் குறிப்பு**

- தாயக் கட்டையை உருட்டி விளையாடப் பணித்தல்.
- கட்டங்களில் உள்ள வினாக்களுக்கு விடையளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

## தொகுதி 17
# நிறைவான கல்வி
## பாடம் 1
# பாராட்டுகள்

### கலந்துரையாடுக.

**வாழ்த்துகள்!**

அன்புள்ள வகுப்பு ஆசிரியருக்கு,
அண்மையில் நடந்த பேச்சுப் போட்டியின்போது உங்கள் வகுப்பு மாணவர்கள் வெற்றி பெற்ற மற்றொரு குழுவுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். வாழ்த்துகள்!

திரு. மணியம்.

**பாராட்டுகிறோம்**

அன்புள்ள பள்ளித் தலைமையாசிரியருக்கு,
பேருந்தில் பயணம் செய்யும் உங்கள் மாணவர்கள் எப்பொழுதும் நன்னடத்தையுடன் திகழ்கின்றனர். வாழ்த்துகள்!

திரு. நாகேந்திரன்

**நன்றி நவில்கிறோம்**

அன்புள்ள பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கு,
பள்ளியைச் சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க நீங்கள் செய்யும் பணிகள் மிகச் சிறந்தவை. தொடர்க! வாழ்த்துகள்!

முன்னாள் மாணவர் சங்கம்

அன்புள்ள ஆசிரியர்களுக்கு,
இப்பள்ளி மாணவர்களுக்காக நீங்கள் தன்னலம் கருதாது உழைப்பதிலும் கல்வியில் சிறந்த மாணவர்களை உருவாக்குவதிலும் மிகச் சிறந்து விளங்குகின்றீர்கள். பாராட்டுகளுடன் வாழ்த்துகள்.

இயக்குநர்
- மாநிலக் கல்வித் துறை

**நன்றி**

### நடவடிக்கை 1

செவிமடுத்தவற்றிலுள்ள கருப்பொருளை அறிந்து கூறுக.

செவிமடுத்திடுக

1.3.5 - செவிமடுத்தவற்றிலுள்ள கருப்பொருளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செவிமடுத்தவற்றில் கருப்பொருளைக் கூறப் பணித்தல்.
- குழுமுறையில் கருப்பொருளைப் பட்டியலிட்டுக் கலந்துரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்



பாடம் 2

# நமது பண்பாடு



## வாசித்து அறிக.



'பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்' என்பது கலித்தொகைச் செய்யுளாகும். மக்களின் சமூக வாழ்க்கையின் வளர்ச்சி கருதி, பாங்கு அறிந்து, பெருமை உணர்ந்து, பயன் தெரிந்து ஒழுகும் பண்பைத்தான் பண்பாடு என்று தமிழ்ச்சான்றோர் கூறுகின்றனர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்...' எனும் பாடலைப் பாடியுள்ளார் கணியன் பூங்குன்றனார். இப்பாடலில், எந்த ஊராயினும் அது எமது ஊரே! எந்த மனிதராயினும் அவர் எமது உறவினரே! என்று உலகப் பொது நோக்கைக் கொண்ட பண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை அடைவதையே பண்டைய தமிழர்கள் சிறந்த பண்பாட்டுக் கூறாகக் கருதினர். அறம், பொருள், இன்பம் என மூன்றையும் போற்றி வாழ்ந்தனர். அறத்திலிருந்து தவறினால் பழிவரும் என்ற பயம் கொண்டிருந்தனர்.

தமிழ் மன்னர்கள் புலவர்களைப் போற்றிப் பரிசளிக்கும் பண்பு பெரிதும் போற்றப்பட வேண்டியதாகும். சங்க காலத்தில் சேரமான் கடுங்கோ வாழியாதன் என்ற மன்னன் கபிலருக்கு நூறாயிரம் பொன்னும், பொற்காசுகளும் வழங்கியுள்ளார். மேலும், தமிழர்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது உணவு. உணவு உண்ணும் முறை, ஆடை அணிதல், வழிபாடு போன்றவை தமிழர்களின் தனித் தன்மைகளைக் காட்டுகின்றன. உணவின் மூலமான அரிசி, சிறு தானியங்கள், இயற்கையாகப் பெறப்படும் காய்கறிகள் இவர்களின் முக்கிய உணவாகும். ஆள் பாதி ஆடை பாதி எனும் பழமொழிக்கு ஏற்பத் தமிழர்களின் உடைகளும் தனித்தன்மைதான். தமிழ்ப் பெண்கள் சேலை அணிவது, நெடுங்காலமாகப் பின்பற்றப்படும் பழக்கமாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் இவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருக்கும்.



ஆண்கள் வேட்டி, சால்வை அணிந்து கொண்டு பண்பாட்டை நிலைப்படுத்தினர். தொழில்துறையில் பார்த்தோமானால், தமிழர்கள் இயல்பான நீரோட்டத்துடன் இணைந்து செயல்படுவார்கள். விவசாயம், மாடு வளர்த்தல், பயிரிடுதல், தானியங்களைச் சேகரித்தல் போன்றவை முக்கியத் தொழிலாகும்.



திருமணச் சடங்குகளில், தமிழர்களின் பண்பாடு மிகவும் போற்றுதலுக்குரியது. மஞ்சள் பூசுதல், குங்குமப் பொட்டு வைத்தல், தலைப்பாகை அணிதல், தாலி அணிவித்தல், மெட்டி அணிதல், மாலை மாற்றுதல் முதலான கூறுகள் நமது பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் நிலைக்கச் செய்கின்றன.

காலப்போக்கில் பண்பாடுகள் சில மாற்றங்களைக் கண்டாலும், அவற்றை நிலைக்கச் செய்வது அனைவரின் கடமையாகும்.

**அருஞ்சொற்கள்**
- தன்மை
- நாணம்
- இயல்பான
- தானியங்கள்
- சடங்குகள்

## நடவடிக்கை 1

வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. சான்றோர் கூறிய பண்பாடு எனப்படுவது யாது?
2. தமிழ் மன்னர்களின் சிறப்புகளைக் குறிப்பிடுக.
3. நமது அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது என்ன? ஏன்?
4. பெண்களின் நான்கு குணங்களைப் பட்டியலிடுக.
5. தமிழர்களின் முக்கியத் தொழில்கள் யாவை?
6. நமது பண்பாடு ஏன் காக்கப்பட வேண்டும்?

2.6.4 - பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்து அறிதல்.
- முக்கியக் கருத்துகளைக் கலந்துரையாடுதல்.
- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை அளிக்கப் பணித்தல்.


**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 3

# சிறப்பாகச் செயல்படுவோம்

## உரையாடி எழுதுக.

1




2



3



4



## நடவடிக்கை 1

தொடர்படத்தையொட்டி வாக்கியங்கள் அமைத்திடுக.

3.4.13 - தொடர்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படத்தைப் பார்த்து அறிதல்.
- குழுமுறையில் கரிக்கோல் பெட்டியைச் செய்யத் தயார்படுத்துதல்.
- வாக்கியங்களை வாசித்துப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்ப இயங்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.




**திருக்குறளும் பொருளும்**

- **தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
  கற்றனைத் தூறும் அறிவு. (396)**
  எந்த அளவுக்குத் தோண்டுகின்றோமோ அந்த அளவுக்கு நீர் மணற்கேணியில் ஊறும். அதுபோல எந்த அளவுக்குக் கல்வி கற்கிறோமோ அந்த அளவுக்கு அறிவு வளரும்.

### நடவடிக்கை 1

திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.

### நடவடிக்கை 2

திருக்குறளுக்கு ஏற்ப வேறு சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறுக.

4.3.4 - நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்து அறிதல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுதல்.
- திருக்குறளுக்கு ஏற்ப வேறு சூழல் அல்லது கதை ஒன்றனை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 5
# இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.

1 அறிவழகன் கடைக்குச் சென்றான். சில அழகிய பொம்மைகளை அங்கு+கண்டான்.

2 பல வண்ண பொம்மைகளை இங்கு+பார்க்கலாம் என்று கடைக்காரர் கூறினார்.

3 எங்கு+தேடியும் இதுபோன்ற பொம்மைகள் எனக்குக் கிடைக்கவில்லை என்று கடைக்காரரிடம் சொன்னான்.

## நடவடிக்கை 1

வலிமிகும் இடங்களை அறிந்து சேர்த்தெழுதுக.

பள்ளி விடுமுறை நாளில் நண்பர்கள் மூவரும் அங்கு+கூடினர். எங்கு+பார்த்தாலும் பசுமையாக இருந்தது. அங்கு+பெரிய ஆலமரங்கள் சில இருந்தன. நண்பர்கள் மூவரும் எங்கு+செல்ல நினைத்தனரோ அவ்விடத்தை வந்தடைந்தனர்.

முதலில் அங்கு+கூடாரம் ஒன்றனை அமைத்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு அருகிலுள்ள ஆற்றில் குளித்தனர். அங்கு+சிறிய மீன்களைப் பிடித்தனர். “வாருங்கள் இங்கு+சிதறிய குப்பைகளை அகற்றுவோம்,” என்றான் நண்பர்களில் ஒருவன். மூவருமாகச் சேர்ந்து அங்கு+கிடந்த குப்பைக் கூளங்களைச் சுத்தம் செய்தனர். அங்கு +பிடித்த மீன்களைப் பங்கிட்டு எடுத்துக் கொண்டு களிப்புடன் வீடு திரும்பினர்.



5.8.3 - அங்கு, இங்கு, எங்கு என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வலிமிகும் இடங்களை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- வலிமிகும் பயிற்சிகளைப் பிழையறச் செய்து பத்தியை மீண்டும் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மை **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 18
## குடியியல்
## பாடம் 1
# ஆர்வமே முக்கியம்

### கலந்துரையாடுக.

1 வணக்கம் செண்பகம், அணிச்சல் செய்யும் போட்டியில் வெற்றி பெற்ற உங்களுக்கு எங்களின் வாழ்த்துகள்.


2 வணக்கம் அக்கா, மிக்க நன்றி.


3 நீங்கள் அணிச்சல் செய்த செயற்பாங்கு முறைகளை எங்களிடம் பகிர்ந்து கொள்ள இயலுமா?

4 நிச்சயமாக அக்கா. முதலில் ஒரு பாத்திரத்தில் வெண்ணையையும் தூள் சீனியையும் நன்றாகக் கலந்துகொள்ள வேண்டும். இதனையடுத்து முட்டைகள் ஐந்தை எடுத்துத் தனியே அடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

5 முட்டையை உண்ணாதவர்கள் அவற்றைத் தவிர்த்துவிட இயலுமா?

6 கண்டிப்பாக முடியும் அக்கா. அடுத்தபடியாக, சீனி, வெண்ணெய்க் கலவையில் அணிச்சல் மாவைக் கொட்டவும். முட்டையையும் அக்கலவையில் கலந்து சீராகக் கிளற வேண்டும்.






## நடவடிக்கை 1

நேர்காணலில் செவிமடுத்த முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறுக.

## நடவடிக்கை 2

பழ அணிச்சல் செய்யும் முறையைக் கோவையாகக் கூறுக.

1.3.4 - செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நேர்காணலைச் செவிமடுக்கச் செய்தல்.
- முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறப் பணித்தல்.
- பாகமேற்று நடித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 2

# எறும்பு கற்பிக்கும் பாடம்

## வாசித்து அறிக.

எறும்புகள் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நற்பண்புகள் நிறைய உள்ளன. ஒழுக்கத்தையும் ஒழுங்கையும் எறும்புகள் மிக அருமையாகக் கற்றுத் தருகின்றன. ராணி எறும்பு, பணியாளர்கள் என தங்களுக்கென தனித்தனி ஒழுங்கைப் பின்பற்றுகின்றன. ஓர் அணி உணவு தேடவும் மற்றோர் அணி புற்று அமைக்கவும் என ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்றன. மேலும், வரிசையாகச் செல்வதில் எறும்புகளை மிஞ்சிய வேறு உயிரினம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒற்றுமையும் பகிர்தலும் எனும் குணம் நிறைந்த உயிரினம் எறும்பு. ஓர் எறும்பு உணவைக் கண்டுபிடித்தால் மற்ற எறும்புகளுக்குத் தகவலை அனுப்பும் ஆற்றல்மிக்கது. சோழ அரசன் தமது சேனைகளோடு வரும் தகவலைக்கூட ஓர் எறும்பு அனைத்து எறும்புகளுக்கும் கூறி, புற்றுக்குள் சென்றுவிடுமாறு செய்தது எனவும் கூறப்படுகின்றது.



உறுதியையும் நம்பிக்கையையும் எறும்புகள் வலுவாகக் கடைப்பிடிக்கின்றன. தன்னைவிட உருவில் பெரிய உணவையும் தடையின்றி எடுத்துச் செல்லும் ஓர் எறும்பு, வழியில் மண் விரிசலைக் கண்டது. ஆனாலும், சிறிதும் அச்சம் கொள்ளாமல் விரிசலுக்கிடையில் உணவையே பாலமாக வைத்து கடந்து சென்று, மீண்டும் அந்த உணவை எடுத்துச் சென்றதாகக் கதை ஒன்றும் கூறப்படுகிறது.





சுறுசுறுப்பும் உழைப்பும் எறும்புகளுக்கே உள்ள சிறப்பான குணமாகும். எந்நேரமும் உழைத்து வாழும் பண்பினையும் சோம்பலின்றி இயங்கும் பண்பினையும் எறும்புகளிடம் காணலாம். திட்டமிட்டு வாழ்வதிலும் எறும்புகளுக்கு நிகர் வேறில்லை. மழைக்காலத்திற்கு முன்பே உணவுகளைப் புற்றில் சேமித்துக் கொள்கின்றன. வெள்ளம் வருமுன் அணைபோடு என்பதற்கு முதன்மை உதாரணமாகத் திகழ்வதே எறும்புகள்தான்.

இயல்பாகவே ஞானம் உள்ள எறும்புகளிடம் அரிய பல நற்பண்புகளை நாம் கற்றுக் கொள்ளலாம். இப்பண்புகள் யாவும் நம்மை வாழ்வில் சிறப்படையச் செய்யும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியிலுள்ள கருச்சொற்களை அடையாளம் கண்டு வாசித்திடுக.

2.4.8 - வாசிப்புப் பகுதியிலுள்ள கருச்சொற்களை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பத்திகளில் உள்ள கருச்சொற்களை அடையாளம் காணச் செய்தல்.
- கண்டறிந்த கருச்சொற்களைப் பொருத்தமான வரிபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 3

# கூட்டுப்பணி

## வாசித்து அறிக.



கூட்டுப்பணி என்பது பலரும் ஒன்றாக இணைந்து செய்யும் ஒரு சேவை அல்லது தொண்டாகும். இத்தகைய கூட்டுப்பணியின் மூலம் நாம் பல நன்மைகள் அடையலாம்.

கூட்டுப்பணியின் மூலம் நாம் செய்கின்ற வேலையை விரைவில் செய்து முடிக்க இயலும். பலரும் குழுமுறையில் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்வதால் அவ்வேலை விரைவில் நிறைவு பெறுகின்றது.

கூட்டுப்பணியின் மூலம் நாம் வாழும் இடத்தைச் சுத்தம் செய்து அழகுபடுத்த இயலும். வசிப்பிடத்தைச் சுத்தம் செய்தல், பூங்கா உருவாக்குதல், கொசுக்களை ஒழிக்கும் நடவடிக்கையாக சாக்கடையைச் சுத்தம் செய்தல் போன்றவற்றைக் கூட்டுப்பணியின் மூலம் குறுகிய நேரத்தில் செய்ய முடிகின்றது.

ஒற்றுமை, நல்லிணக்கம் போன்ற நற்பண்புகளைக் கூட்டுப்பணி மூலம் உருவாக்கலாம். இனம், மொழி என்று வேறுபட்ட மக்களைச் சந்திக்கும் போது அவர்களுடன் பழகும் முறை, புரிந்துணர்வு, மதிக்கும் பண்பு போன்றவற்றை நாம் வளர்த்துக் கொள்ள முடியும்.


உடல் ஆரோக்கியம், மனமகிழ்ச்சி என்பனவற்றையும் கூட்டுப்பணியின் மூலம் நாம் பெறலாம். கூட்டுப்பணியின் மூலம் நம்மை அறியாமலேயே நாம் உடற்பயிற்சி செய்கின்றோம். உடலிலுள்ள கழிவு வியர்வையாக வெளிவருகின்றது. எனவே, நாம் சுறுசுறுப்புடனும் மனமகிழ்ச்சியுடனும் செயல்பட முடிகின்றது.

கூட்டுப்பணியின் மூலம் அன்பையும் பரிமாறிக் கொள்ளலாம். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதுபோல எங்குச் சென்றாலும் சூழலுக்கு ஏற்ப நம்மை வழிநடத்த இயலும். ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டிப் பழகவும் முடியும். இதன் மூலம் நமக்குச் சிறந்த நண்பர்களும் கிடைக்கின்றனர்.

கூட்டுப்பணியின் மூலம் அனைவரும் பல நன்மைகளையே பெறுகின்றனர். இதனால்தான், இன்று வரை இத்தகைய நடவடிக்கை நம் நாட்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## நடவடிக்கை 1

கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு 'ஒற்றுமையின் அவசியம்' எனும் தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.





**அருஞ்சொற்கள்**

- தொண்டு
- துன்பம்
- கழிவு
- நல்லிணக்கம்
- புரிந்துணர்வு

## நடவடிக்கை 2

கொடுக்கப்பட்ட தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.




3.6.8 - 80 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கட்டுரையை வாசித்து அறியச் செய்தல்.
- கருத்துகளைப் பட்டியல் இட்டு உரையாடுதல்.
- குறிப்புகளைக் கொண்டு கருத்து விளக்கக் கட்டுரையை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** நாட்டுப்பற்று

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரையும் பொருளையும் அறிக.






**மரபுத்தொடரும் பொருளும்**

- **கங்கணம் கட்டுதல்** - உறுதி பூணுதல்
- **கடுக்காய் கொடுத்தல்** - ஏமாற்றித் தப்புதல்

## நடவடிக்கை 1

மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து வாக்கியத்தில் பயன்படுத்துக.

1. மாறன் தன் நண்பனின் பணத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு வேறு இடத்திற்கு ஓடி விட்டான்.

2. தேர்வில் எல்லாப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தம்பி விடாமுயற்சியுடன் படிக்கிறான்.

4.6.4 - நான்காம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறிதல்.
- மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிந்து கூறப் பணித்தல்.
- வாக்கியங்களில் பொருத்தமான மரபுத்தொடரைப் பயன்படுத்தி எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# பாடம் 5
# இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.




### நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

1. பல+சிறுவர்கள் திறமையாகப் பாடினர்.
2. நேற்று சில+பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது.
3. பல+பழங்கள் அங்கு விற்கப்படுகின்றன.
4. என் தோழி சில+படங்களைச் சேகரித்து ஒட்டினாள்.
5. பல+குடும்பத்தினர் அம்மலைப் பகுதியில் வசிக்கின்றனர்.
6. சில+சொற்களை ஆசிரியர் பட்டியலிடச் சொன்னார்.
7. அக்காள் பல+கவிதைகளை எழுதிப் பல+பரிசுகளைப் பெற்றுள்ளார்.

**சொல்லும் பொருளும்**

- அகவை - வயது
- மௌனம் - அமைதி
- வழி - பாதை
- தொலைவு - தூரம்

5.9.1 - சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகா இடங்களை அறியச் செய்தல்.
- உரையாடலை வாசித்துப் புரிந்து கொள்ளப் பணித்தல்.
- சேர்த்தெழுதுதல் நடவடிக்கையைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# தொகுதி 19
# கடமைகள் போற்றுவோம்

## பாடம் 1
## எங்கள் பொறுப்பு

### கலந்துரையாடுக.



### நடவடிக்கை 1

மேற்கண்ட சூழலுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.

1.7.18 - சூழலுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலைப் பார்த்து உரையாடுதல்.
- சூழலுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடப் பணித்தல்.
- குழுமுறையில் மாணவர்களைச் சூழலுக்கேற்பச் சொல், சொற்றொடர், பொருத்தமான வாக்கியம் ஆகியவற்றைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** தாங்கும் வலிமை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்

பாடம் 2

# அடிச்சொற்கள் அறிந்தேன்

## வாசித்து அறிக.






# சொற்களும் அடிச்சொற்களும்.

| | |
|---|---|
| நிற்றல் | நில் |
| காட்டுதல் | காட்டு |
| வாடினாள் | வாடு |
| உதவினர் | உதவி |
| நாடினார் | நாடு |

| | |
|---|---|
| பாடினாள் | பாடு |
| வந்தாள் | வா |
| காட்சி | காண் |
| நடந்தேன் | நட |
| தொடுத்தனர் | தொடு |

## நடவடிக்கை 1

அகராதியைப் பயன்படுத்தி அடிச்சொல்லை எழுதி வாசித்திடுக.

1 ஆண்டான் = ______

2 இகழ்ந்தனர் = ______

3 சென்று = ______

4 வென்று = ______

5 பொழிக = ______

6 கெடுதல் = ______

7 உரைப்பவர் = ______

8 கனிந்தது = ______

9 வனைந்தான் = ______

10 துயின்றாள் = ______

11 கேட்டல் = ______

12 கற்றவர் = ______

13 நீந்தினான் = ______

14 முறித்தல் = ______

15 பயின்றான் = ______

16 எழுதினான் = ______

17 பார்த்தான் = ______

18 சுடுதல் = ______

19 கொடுத்தல் = ______

20 உண்டான் = ______

21 செய்து = ______

22 அடித்து = ______

2.5.4 - அடிச்சொற்களை அறிய அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரையாடலை வாசித்து அறிதல்.
- அகராதியைப் பயன்படுத்தி அடிச்சொற்களை அறியப் பணித்தல்.
- சரியான அடிச்சொற்களை எழுதி வாசித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 3

# ஆனந்தம் கொண்டோம்

## கதை எழுதுக.




### நடவடிக்கை 1


தனிப்படத்தைப் பார்த்துக் கதை ஒன்றனை எழுதுக.

தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் அப்பண்டிகையைக் கொண்டாட ஆயத்த வேலைகளைச் செய்வது வழக்கம். இவ்வாண்டும் நாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை அம்மா பகிர்ந்து கொடுத்துவிட்டார்.


## நடவடிக்கை 2

தனிப்படத்தைக் கொண்டு கதை ஒன்றனை எழுதுக.

அ




ஆ




3.6.6 - 80 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தனிப்படத்தைப் பார்த்து உரையாடுதல்.
- சூழலைக் கொண்டு கதை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்


பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## வெற்றி வேற்கையையும் பொருளையும் அறிக.

மகாபாரதம் பல கதாபாத்திரங்களைக் கொண்டது. அதில் கர்ணனின் கதை மிகச் சிறப்பானதாகும். உயிர் நண்பன் துரியோதனனுக்காகப் போர்க்களம் சென்று உயிர் துறந்தவன். கர்ணனின் கொடை உள்ளம் நாம் அனைவரும் அறிந்ததே!

ஒருமுறை, கர்ணன் எண்ணெய் நீராட்டுக்காகத் தங்கக் கிண்ணத்தில் எண்ணெய் எடுத்துத் தன் உடலில் தடவிக் கொண்டிருந்தான். அச்சமயம் யாசகன் அங்கு வந்தான். உடனே, தனது இடது கை பக்கமாக இருந்த தங்கக் கிண்ணத்தைத் தனது இடக்கையாலேயே எடுத்து இரவலனுக்கு அளித்துவிட்டான்.



அருகில் நின்றிருந்த நண்பர், “கர்ணா! இடது கையால் தானம் தரலாகாது என்று அறநூல் கூறுகின்றதே! தாங்கள் செய்தது அறநூலுக்கு எதிரானது அல்லவா? வலது கையால்தானே தர்மம் செய்தல் வேண்டும்?” என்றான். “நண்பரே! அறநூலை நான் நன்கு படித்தவன். ஆனால், மனித மனம் நிலையானது அல்ல. நொடிக்கு நொடி மாறும். இடது கை அருகே இருக்கும் தங்கக் கிண்ணத்தை வலது கையால் எடுக்கச் சில நொடிகள் ஆகும். அந்தச் சில நொடிகளில் மனம் மாறிட வாய்ப்புண்டு. இவ்வளவு உயர்ந்த தங்கக் கிண்ணத்தைத் தானம் தர மனம் மறுக்கலாம். அதனால்தான், இடக்கையில் தானம் செய்தேன்,” என்றான்.

இதைக் கேட்ட நண்பர், “உன்னைவிட ஒருவன் தானத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க முடியாது,” என்று வாழ்த்தினார். கர்ணன் பிறந்தது முதல் தமது வாழ்க்கையில் பல சவால்களையும் இன்னல்களையும் சந்தித்துப் போராடி, முன்னேற்றப் பாதையில் பயணித்தான். தனது உயிரைக் காத்து வைத்திருந்த தருமத்தின் அருளையும்கூட தானமாய்க் கொடுத்ததால்தான் கர்ணன் இறந்த பிறகும் எல்லோரின் மனத்திலும் நீங்கா இடம் பிடித்துள்ளான். கொடைக்கு உதாரணம் கர்ணன் அல்லவா!

**தகவல் அறிக**

**பஞ்சபாண்டவர்கள்**
- தருமன்
- பீமன்
- அர்ஜுனன்
- நகுலன்
- சகாதேவன்

**வெற்றி வேற்கையும் பொருளும்**

- **பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.**
  உயர்வும் தாழ்வும் அவரவர் செயலுக்கு ஏற்பவே அமையும்.

## நடவடிக்கை 1

வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக.

## நடவடிக்கை 2

வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான கதை ஒன்றனை உருவாக்கி வகுப்பறை மூலையில் பார்வைக்கு வைத்திடுக.

4.12.1 - நான்காம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கதையை வாசித்துப் புரிந்து கொள்ளப் பணித்தல்.
- வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறியச் செய்தல்.
- வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான கதை ஒன்றனை உருவாக்கிக் கூறப் பணித்தல்

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

## பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகா இடம் அறிக.

'படி' சேர்ந்துவரும் சொல்லுக்குப்பின் வலிமிகாது.

**எடுத்துக்காட்டு:**

1. அம்மா புத்தகங்களை அடுக்கும்படி சொன்னார்.
2. ஆசிரியர் படக்கட்டுரையை எழுதும்படி கூறினார்.

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

1. அப்பா திருக்குறளை மனனம் செய்யும்படி+பணித்தார்.
2. பந்தை உதைக்கும்படி+கூறி அண்ணன் திடலில் முன்னோக்கி ஓடினார்.
3. உணவு சிதறும்படி+செய்ததால் அம்மா கடிந்து கொண்டார்.
4. தம்பி புதிய உடையை வாங்கும்படி+கெஞ்சினான்.
5. பெரியவர் நல்ல கருத்துகளை அறியும்படி+பேசினார்.
6. அத்தை சமைத்த உணவுகளை மூடும்படி+கூறினார் .
7. இராமன் நடந்த சம்பவத்தை நினைக்கும்படி+செய்தார்.
8. கதவைத் திறக்கும்படி+சிறுவன் வேண்டினான்.
9. விதிமுறைகளைப் பின்பற்றும்படி+பெரியவர் வலியுறுத்தினார்.
10. வாகனத்தைக் கவனமாகச் செலுத்தும்படி+தந்தையிடம் அம்மா கூறினார்.
11. மரத்தின் நிழலில் அமரும்படி+பணியாட்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.



5.9.2 - 'படி'எனும் சொல்லுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகா இடங்களை அறியச் செய்க.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசித்து அறிக.
- சேர்த்தெழுதுதல் பயிற்சியைப் பிழையறச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்



# தொகுதி 20
# வரலாறும் இலக்கியமும்

## பாடம் 1
## கற்காலத் தொடர்பு மொழி

### செவிமடுத்துக் கலந்துரையாடுக.




**உணர்ச்சி ஒலிகள்**

இன்ப துன்பத்தின் உணர்ச்சியை வெளியிடும் ஒலிகள் உணர்ச்சி ஒலிகள் எனப்படும்.
சான்று: ஆ, ஈ, ஊ, ஓ, ஐ

**விளி ஒலிகள்**

பிறரை விளிக்கும் (அழைக்கும்) ஒலிகள் விளி ஒலிகள் எனப்படும்.
சான்று: ஏ, ஏய், ஓ, ஏலா, எல்லா

**ஒலிப்பொலிகள்**

ஒலிக்குறிப்பு செய்யும் பொருள்களைக் கொண்டும் விலங்குகள், பறவைகள் எழுப்பும் ஒலிகளைக் கொண்டும் குறிப்பாக உணர்த்துவது ஒலிப்பொலிகள் எனப்படும்.
சான்று: கூ, கா, உர், குர், மா, சரசர, கீர், சலசல, கலகல

**குறிப்பொலிகள்**

வழக்கப்படி சில கருத்துகளைப் பிறருக்குத் தெரியும் வகையில் எழுப்பும் ஒலிகள் குறிப்பொலிகள் எனப்படும்.
சான்று: ஊம், சீ, பூ, ச், ச்சொ, ச்சூச்சூ, மேமே, பொபொ என்பன.

### வாய்ச்செய்கை

கற்காலத் தமிழர்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும் தன் வாயினால் செய்யும் சில செய்கைகளும் சமிக்ஞைகளும் ஒவ்வோர் ஒலியைப் பிறப்பித்தன.
சான்று: ஆ - அ - அங்கா, அவ் - கவ் - வவ் - அவ்வு, கவ்வு - வவ்வு

### சுட்டொலிகள்

ஒன்றைச் சுட்டிக்காட்ட ஒலிக்கும் ஒலிகள் சுட்டொலிகள் எனப்பட்டன. இச்சுட்டொலிகளின் தோற்றமே தமிழின் கருநிலை.
சான்று: அ - அது, இ - இது

(மூலம் - தமிழர் வரலாறு தொகுதி 2)

## நடவடிக்கை 1

செவிமடுத்த முக்கியக் கருத்துகளைப் படங்களுக்கு ஏற்ப கோவையாகக் கூறுக.

## நடவடிக்கை 2

கோவையாகக் கூறி உரையாடுக.

- அன்று புகைவண்டி என்று அழைக்கப்பட்டது.
- கற்சாலைகளில் ஓடா.
- அச்சட்டங்களைத் தண்டவாளங்கள் என்றனர்.
- இன்று தொடர்வண்டி எனப் பெயர் பெற்றுள்ளது.
- இரும்புச் சட்டங்களைச் சமமான தரையில் அமைத்தனர்.
- புகைவண்டியை உருவாக்கியவர் ஜார்ஜ் ஸ்டீபன்சன் என்பவராவார்.
- இவரே புகைவண்டியின் தந்தை.




## நடவடிக்கை 3

விவரங்களைச் சேகரித்துக் கோவையாக உரையாடுக.

- மலாக்கா உருவாக்கம்
- மலேசியாவின் சுதந்திரம்
- வானொலி கண்டுபிடிப்பு
- மின்விளக்குக் கண்டுபிடிப்பு



1.3.4 - செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்பு மொழிபற்றிய படங்களைப் பார்த்து உரையாடுதல்.
- செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறுதல்.


**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


பாடம் 2

# போரும் வேந்தர்களும்

## வாசித்து அறிக.

சேர, சோழ, பாண்டியன் ஆகிய மூவேந்தரும் தங்களுடன் மூன்று பொருள்களைத் தவறாது வைத்திருந்தனர். அவை குடை, முடி, கோல் என்பனவாகும். வெண்கொற்றக்குடை என்பது காவல் மொழியையும் மணிமுடி என்பது அரசியல் தலைமையையும் செங்கோல் என்பது நீதியையும் குறிக்கும் குறியீடுகளாகும்.



சேரன்


சோழன்



பாண்டியன்

இவை மூன்றும் தங்களுக்கு நிலைக்க வேண்டும் என்பதற்காகவே போர் புரிந்தனர். தன் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளவும் விரிவாக்கிக் கொள்ளவும் எனப் போர் இரண்டு நிலைகளில் நடைபெற்றது. அக்கால போர்க்களத்தில் வில், அம்பு, வேல், குந்தம், கோல், கைக்கோடரி, முசலம் போன்றவை ஆயுதங்களாயின. இரும்பாலான மெய்மறைகள், கேடயம், உடலில் போர்த்தும் கவசம் ஆகியன தடுப்பாயுதங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. போரைத் தொடங்கும் முன்பு கொம்பு, சங்கு, முரசு போன்றவற்றை முழக்கினர். வீரமுரசு, தியாகமுரசு, நியாயமுரசு என முரசு மூன்று வகையாகக் கூறப்பட்டது.


எதிரிகளின் கோட்டை வாயில்களையும் சுற்றுச் சுவர்களையும் உடைக்க யானைப் படையினைப் பயன்படுத்தினர். வேந்தர்களுக்கு யானைகளே தாம் உலா வரும் வாகனமாகவும் போர்க்கள வாகனமாகவும் பயன்பட்டன. பொது வாழ்வில் மிகுதியாகவும் போர்க் களத்தில் குறைவாகவும் தேர்கள் பயன்படுத்தப்பட்டன. வாளும் வேலும் ஏந்திய வீரர்கள் குதிரை மீது சென்று எதிரிகளைத் தாக்கினர்.



வேல் ஏந்திய காலாட்படை வீரர்கள் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து அணிவகுத்தனர். இப்படையினைத் தூசுப்படை என்றனர்.



போரில் இப்படையினரே முன் சென்றனர். கடல் வழியாக வரும் எதிரிகளைத் தாக்கக் கடற்படையினையும் வேந்தர்கள் வைத்திருந்தனர். இ∴து அவர்களின் கடல் வாணிபத்திற்குப் பாதுகாப்பாகவும் இருந்தது.



போருக்குச் செல்லுதலை ஒரு விழாவாகக் கொண்டாடியும் உள்ளனர். இதற்கெனப் பல்வேறு சடங்குகளும் செய்யப்பட்டன. போருக்குப் பின்னரும் சில சடங்குகள் நடத்தப்பட்டன. போரில் மரணம் அடைவதையே வீர மரணம் என முழக்கமிட்டனர்.

## நடவடிக்கை 1

உரைநடையை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.

1. மூவேந்தர்கள் யாவர்?
2. மூவேந்தர்கள் போர் புரிந்ததன் நோக்கம் என்ன?
3. மூவேந்தர்களின் போர்ப் படைகள் யாவை?
4. போர் வீரர்களுக்குப் பயன்பட்ட படைகள் யாவை?
5. தூசுப்படை எனக் கூறப்பட்டது எது? ஏன்?
6. கடற்படையினரின் பணிகள் யாவை?
7. வீர மரணம் எனக் கூறப்படுவது எது?

2.6.5 - இலக்கியம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியை வாசித்து அறிதல்.
- உரைநடைப் பகுதியில் இடம்பெற்ற கருத்துகளைக் கூறப் பணித்தல்.
- உரைநடைப் பகுதி தொடர்பான வினாக்களுக்கு விடையளித்திடப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 3

# பேசும் திருக்குறள் கிடைத்தால்...

## வாசித்து எழுதுக.




திருக்குறளை உலகத் திருமறை என்பர். இவ்வரிய திருக்குறள் பேசும் ஆற்றல் பெற்று எனக்குக் கிடைத்தால், அடேயப்பா! அளவிலா மகிழ்ச்சி கொள்வேன்.

தினமும் திருக்குறளைச் சொல்லக் கேட்டு எளிதாக நானும் மனனம் செய்து கொள்வேன். அந்நூலை எங்குச் சென்றாலும் மறவாமல் எடுத்துச் செல்வேன். நான் போகும் இடமெல்லாம் ஒவ்வொரு குறளாகக் கேட்டு அவற்றிற்கான விளக்கம், கதை போன்றவற்றையும் சொல்லக் கேட்பேன்.

சொற்சுவை, பொருள்சுவை அடங்கிய இந்நூலை என் ஆசிரியர்களிடமும் கொடுப்பேன். வகுப்பறையின் முன் நின்று அத்திருக்குறள் நூலைப் பேச வைத்து தோழர்களுடன் கேட்டு மகிழ்வேன். 1330 குறட்பாக்களையும் என் பள்ளி மாணவர்கள் அனைவரும் கேட்டு அறியச் செய்வேன்.

மனிதர்களின் வாழ்க்கை நெறி, ஒழுக்கம், அன்பு, நட்பு, கல்வி இன்னும் எண்ணிலடங்கா பண்புக்கூறுகளைக் கேட்டு நாங்கள் அனைவரும் சிறந்து விளங்குவோம்.

பேசும் திருக்குறளை எடுத்துக் கொண்டு பல நாடுகளுக்கும் செல்வேன். எட்டுத் திசையும் திருக்குறளின் புகழ் மணக்கச் செய்வேன்.

## நடவடிக்கை 1

ஏதேனும் ஒரு தலைப்பில் கற்பனைக் கட்டுரை எழுதுக.

1. நான் ஒரு பறக்கும் தட்டானால்...
2. எனக்குப் பேசும் பொம்மை கிடைத்தால்...

3.6.10 - 80 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கற்பனைக் கட்டுரையை வாசித்தல்.
- கொடுக்கப்பட்ட தலைப்புகளில் கற்பனைக் கட்டுரை எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



## திருக்குறளும் பொருளும்

- **அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
  **புன்கண்ணீர் பூசல் தரும். (71)**
  அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ?
  அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

**QR நோக்குக் குறியீடு**

https://youtu.be/_8D5s-IYYr0?t=3

## நடவடிக்கை 1

திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக; மனனம் செய்து சரியான வரிவடிவத்துடன் எழுதிக் காட்டுக.

## நடவடிக்கை 2

உன் தங்கை அல்லது தம்பிக்குப் பிறந்தநாள் வாழ்த்து அட்டை ஒன்றனைத் தயாரித்துக் கொடுத்திடுக.

## நடவடிக்கை 3

கொடுக்கப்பட்ட பாடல் வரிகளைப் பாடி மகிழ்க.
அன்பின் அவசியத்தை உரையாடுக.



அன்பு என்பதே தெய்வமானது
அன்பு என்பதே இன்பமானது (அன்பு)
மதத்தின் மீது வைத்த அன்பு பக்தியானது
மனிதன் மீது வைத்த அன்பு பாசமானது
இதயம் மீது வைத்த அன்பு உண்மையானது
ஏழை மீது வைத்த அன்பு கருணையானது (அன்பு)

- கவிஞர் கண்ணதாசன்

## நடவடிக்கை 4

அன்னையின் சேவைக்கு நன்றி கூறும் வகையில் வாழ்த்து அட்டை ஒன்றனைத் தயாரித்திடுக.

4.3.4 - நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்து திருக்குறளின் பொருளை அறியச் செய்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறச் செய்தல்.
- திருக்குறளுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.


1. அது பறவைகள் வாழும் இடமாகும்.
2. இது பார்ப்பதற்கு மென்மையாக உள்ளது.
3. எது பரிசு பெறும் கட்டுரை?

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

1. அது+பேசும் கிளியென நினைத்தேன்.
2. இது+காட்சிப் பேழையில் வைத்த பொருள்.
3. எது+சரியான விடை எனக்கூறு.
4. அது+தத்திச் செல்லும் பிராணி.
5. இது+குழந்தைக்குப் பிடித்த விளையாட்டு.
6. எது+பட்டணத்திற்கு அருகில் உள்ள மண்டபம்?
7. அது+சுற்றுப்பயணிகள் செல்லும் பேருந்து.
8. இது+தவறான கூற்றென ஆசிரியர் கூறினார்.
9. எது+சாதுவான பிராணிகள் உண்ணும் உணவு?
10. அது+தாவரங்களை உண்ணும் பிராணி.
11. இது+புதுமையான இரண்டு மாடிக் கட்டடம்.
12. எது+புதிய சாதனை எனக் கூறு?






5.9.3 - அது, இது, எது என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வலிமிகா இடங்களை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- சொற்களைச் சேர்த்து வாக்கியங்களை எழுதும் பயிற்சியைச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 21
## அறிவியல்
## பாடம் 1
# பள்ளியின் அறிவியல் வாரம்

### கலந்துரையாடுக.

| நாள் | நடவடிக்கை | கலந்துகொள்ளும் மாணவர்கள் |
|---|---|---|
| திங்கள் | குறுக்கெழுத்துப் போட்டி | படிநிலை 1<br>படிநிலை 2 |
| செவ்வாய் | அறிவியல் புதிர் | படிநிலை 1<br>படிநிலை 2 |
| புதன் | அறிவியல் உலகம் காண்போம் (காணொலி) | படிநிலை 1<br>படிநிலை 2 |
| வியாழன் | ஐம்புலன்களின் இயக்கம் (உரை) | படிநிலை 2 |
| வெள்ளி | அறிவியல் உருவாக்கம் (குழு நடவடிக்கை) | படிநிலை 2 |

### நடவடிக்கை 1
அட்டவணையில் உள்ள தகவல்களைப் பற்றி விவரித்துக் கூறுக.

### நடவடிக்கை 2
குழு முறையில் வினா விடை போட்டி நடத்தி தகவல்களைப் பரிமாறிக் கொள்க.

1.9.1 - அட்டவணையில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுக.

**ஆசிரியர் குறிப்பு**

- அட்டவணையில் உள்ள தகவல்களைப் பற்றிக் கலந்துரையாடப் பணித்தல்.
- குழுமுறையில் தகவல்களை விவரித்துக் கூறப் பணித்தல்.
- குழுமுறையில் கேள்வி பதில் நடவடிக்கையைச் செய்தல்.


**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 2

# சூழலும் தாவரங்களும்

## வாசித்து அறிக.

உலகின் சுற்றுச்சூழல் ஒரே மாதிரி இல்லை. வெப்பநிலை மாற்றம், வெயில், மழை போன்ற காரணிகளால் சூழல்கள் வேறுபடுகின்றன. இத்தகைய பகுதிகளில் வாழும் தாவரங்கள் குறிப்பிட்ட சூழலோடு தங்களைப் பொருத்திக் கொள்கின்றன.




தாவரங்கள் பகலில் தங்கள் உணவைத் தயாரிக்கச் சூரிய வெளிச்சம் தேவை. சூரிய ஒளியை நீருடனும் கரிவளியுடனும் இணைத்துச் சர்க்கரை மூலக் கூறுகளைத் தயாரிக்கின்றன. இவ்வேளையில், உயிர்வளியையும் வெளியேற்றுகின்றன. இந்த முழுச் செயல்முறைக்கு 'உணவுச்சேர்க்கை' என்று பெயர்.

இரவு நேரங்களில் தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் உணவு தயாரித்துக் கொள்வதில்லை. காரணம், இரவில் சூரிய ஒளி இல்லாததுதான். தாவரங்கள் இரவில் உயிர்வளியை உட்கொள்ளும்.

சில செடிகொடிகளில் இரவு வேளையில் பூக்களும் இலைகளும் சுருண்டு மூடிக் கொள்ளும். வாயு மண்டலத்தின் தன்மை, காலநிலை இவற்றைப் பொறுத்துப் பருவங்கள் மாறுகின்றன. இந்தப் பருவமாற்றம் ஆண்டுச் சுழற்சியின்படி நிகழ்கிறது. உலகெங்கிலும் உள்ள தாவரங்கள் பருவ மாறுதல்களைச் சமாளித்துக் கொள்கின்றன.

வெப்ப மண்டலக் கோட்டுக்கு உள்ளே உள்ள இடங்களில் இரண்டு பருவங்கள்தாம். ஒன்று வறண்ட காலம், மற்றொன்று மழைக்காலம். வெப்ப மண்டல எல்லைக் கோட்டுக்கு வெளியே உள்ள இடங்களில் நான்கு பருவங்கள் உள்ளன. அவை இளவேனிற்காலம் (மார்ச் - மே) கோடைக்காலம் (ஜூன் - ஆகஸ்ட்), இலையுதிர்க்காலம் (செப்டம்பர் - நவம்பர்), பனிக்காலம் (டிசம்பர் - பிப்ரவரி) என்பனவாகும்.

## நடவடிக்கை 1

வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை நிரலொழுங்கு வரிபடத்தில் எழுதி வாசித்திடுக.

### அருஞ்சொற்கள்

- வெப்பநிலை
- உயிர்வளி
- ஒளிச்சேர்க்கை
- பருவமாற்றம்
- சமாளித்து

### சொல்லும் பொருளும்

- காலம் - தருணம்
- தாவரம் - பயிர்
- பாதகம் - கெடுதல்
- சேனை - படை

## நடவடிக்கை 2

பத்தியில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து கூறுக.

உலகில் ஏழில் ஒரு பகுதி பாலைவனமாய் உள்ளது. இது வறண்ட நிலப்பகுதியாகும். ஆண்டுக்குச் சராசரி 25 சென்டிமீட்டர் அளவே மழையைப் பெறக்கூடியது. பாலைவனங்களில் பகலில் வெப்பம் அதிகமாக இருக்கும். இரவு வேளையில் குளிராக இருக்கும். பாலைவனம் நீரற்ற வறண்ட பகுதியாக இருந்தாலும், ஆழமான பகுதிகளில் நீர் இருக்கவே செய்யும். பாலைவனத்தில் பேரீச்ச மரங்கள் வளரும். ஒட்டகம் பாலைவனத்தில் நடக்கக்கூடிய முக்கிய விலங்கினமாகும். இவை திமில்களில் நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளும். ஒட்டகத்தைப் பாலைவனக் கப்பல் என்றும் கூறுவர். கொடிய வெப்பத்தைத் தாங்கும் பல்லிகளும் பாலைவனத்தில் வாழ்கின்றன. பாலைவனத்தில் வளரும் ‘வெல்விட்சியா’ என்ற தாவரம் பெரிய வேர்களைக் கொண்டது. இவற்றின் நீண்ட இலைகள் நீரை வெளியேறவிடாமல் தடுக்கும் தோல் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.



2.4.9 - வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- முக்கியக் கருத்துகளை இணைப்பு வரிபடத்தில் எழுதப் பணித்தல்.
- பத்தியில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து பட்டியலிடச் செய்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 3

# உடற்பயிற்சியின் நன்மைகள்

## வாசித்து எழுதுக.

மானிடராகப் பிறந்த நாம் நம் உடலினை எப்பொழுதும் சீராக வைத்துக் கொள்ள வேண்டும். உடல் உறுப்புகளுக்குச் சரியான இயக்கங்களைக் கொடுக்க வேண்டும். அத்தகைய பயிற்சியை உடற்பயிற்சி என நாம் கூறுகின்றோம்.



உடற்பயிற்சி செய்வதன் மூலம் நாம் பல நன்மைகளை அடைய முடிகின்றது. உடற்பயிற்சி செய்வதனால் உடல் தசைகள் யாவும் விரிவடைகின்றன. இதனால், உடல் கழிவுகள் வியர்வையாக வெளியாகின்றன. எனவே, நமது உடலிலும் மனத்திலும் உள்ள சோர்வு நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகின்றது.

உடல் எடையை ஒவ்வொருவரும் சீராகவும் கட்டுக்கோப்பாகவும் வைத்துக் கொள்வதற்கு உடற்பயிற்சி பெரிதும் துணைபுரிகின்றது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதனால் நம் உடல் பருமனுக்கும் தீர்வு காண முடிகின்றது.

காலை, மாலை வேளைகளில் உடற்பயிற்சி செய்வதன்வழி சுத்தமான காற்றையும் சுவாசிக்க முடிகின்றது. இதனால், நமது உடலினுள் இருக்கும் உயிர்வளியின் அளவு அதிகரிக்கவே செய்கின்றது. எனவே, நாம் நமது இருதயத்தைச் சீராக இயக்க முடிகின்றது.

தொடர்ச்சியான உடற்பயிற்சி நம்மைப் பல நோய்களிலிருந்தும் பாதுகாக்கின்றது. உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் குறைந்து நோய் தடுப்புச் சக்தியையும் அதிகரிக்கின்றது என்றே கூற வேண்டும். ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது போல் நோயின்றி நலமுடன் வாழ நாம் உடற்பயிற்சியை மேற்கொள்வது அவசியமாகும்.

## நடவடிக்கை 1

கருத்து விளக்கக் கட்டுரையை வாசித்துக் குழுவில் உரையாடிப் பொருத்தமான கருத்து வரிபடம் ஒன்றனைத் தயாரித்திடுக.

## நடவடிக்கை 2

கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு சுற்றுப்புறத் தூய்மைக்கேட்டைப் பற்றிக் கருத்து விளக்கக் கட்டுரையை எழுதுக.

**சுற்றுப்புறத் தூய்மைக்கேடு**

**முன்னுரை**
- அசுத்தமான சூழல்
- காற்று, நீர், நிலம்

**காரணம்**
- மக்களின் அலட்சியம்
- சட்டத்திட்டங்களை மதிப்பதில்லை
- திறந்த வெளியில் குப்பைகளை எரிப்பது
- திட்டமிடப்படாத மேம்பாட்டுத் திட்டங்கள்

**தடுக்கும் முறை**
- மக்களின் சமூக உணர்வு
- கூட்டுப்பணி
- இயற்கையை நேசித்தல்
- சட்டத்தைக் கடுமையாக்குதல்

**விளைவுகள்**
- நோய்
- நீரின் தூய்மைக்கேடு
- நீர்வாழ் உயிரினங்கள் அழிவு
- காற்றுத் தூய்மைக்கேடு
- சுற்றுச்சூழல் பாதிப்பு

## நடவடிக்கை 3

கொடுக்கப்பட்ட தலைப்புகளில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.

1. சரிவிகித உணவின் அவசியம்.
2. உடல் பருமன் ஏற்படுவதன் காரணங்கள்.

3.6.8 - 80 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உடற்பயிற்சியின் நன்மைகள் பற்றி உரையாடச் செய்தல்.
- 'சுற்றுப்புறத் தூய்மைக்கேடு' எனும் தலைப்பில் கட்டுரை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## இணைமொழியையும் பொருளையும் அறிக.



வல்லாரைக் கீரை, பூண்டு வகையைச் சேர்ந்த சிறு செடியாகும். ஞாபக சக்திக்கு மிகவும் சிறந்தது. நீர் நிறைந்த வாய்க்கால், வயல் வெளியிலும் படர்ந்து செழித்து வளரும்.

பச்சை நிறத்திலான நீண்ட காம்புகளையும், நுனியில் மனித மூளை வடிவில் ஓர் இலையையும் கொண்டிருக்கும். இது மூளையின் செயல்பாட்டுக்கு அதிக துணை புரிகின்றது.

வல்லாரை இலைகளில் ஏழு நரம்புகளைக் காணலாம். அதன் முழுத் தாவரமும் துவர்ப்பு, கார்ப்பு, இனிப்புச் சுவையையும் குளிர்ச்சித் தன்மையையும் கொண்டது. வல்லாரையின் **அருமை பெருமை**களை இன்று பலரும் அறிந்துள்ளனர். இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, தாது உப்புகள் அடங்கியுள்ளன. நரம்பு மண்டலங்களுக்கு அமைதி தருவதுடன் இரத்த நாளங்களிலும் அடைப்புகள் ஏற்படாமல் தடுக்கிறது. மேலும், நோய் எதிர்ப்புச் செயல்பாட்டினைத் திறம்படச் செய்யவும் துணைபுரிகின்றது.

இக்கீரையின் மகத்துவத்தை உணர்ந்து அனைவரின் வீட்டுத் தோட்டத்திலும் வளர்த்துப் பயனடையலாம்.

**இணைமொழியும் பொருளும்**

**அருமை பெருமை** - சிறப்பு / உயர்வு / மேன்மை

## நடவடிக்கை 1

வாக்கியங்களில் இணைமொழியைப் பயன்படுத்திக் கூறுக.

1. பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் ______ உணர்ந்து தினமும் அவற்றை உண்ண வேண்டும்.
2. வாசிக்கும் பழக்கத்தின் ______ உணர்ந்து மாணவர்கள் தினமும் அப்பழக்கத்தினை மேற்கொள்ள வேண்டும்.
3. நமது பாரம்பரிய உணவு வகைகளின் ______ அறிந்து அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவது சிறப்பாகும்.
4. சேமிப்பின் ______ சிறு வயது முதலே குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வது பெற்றோர்களின் கடமையாகும்.

4.4.4 - நான்காம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- இணைமொழியையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- கொடுக்கப்பட்ட வாக்கியங்களில் இணைமொழியைப் பயன்படுத்திக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 5

# இலக்கணம்

## இயல்பு புணர்ச்சி அறிக.

**நிலைமொழி ஈற்றில் மெய்** எழுத்து இருந்து **வருமொழி முதலில் உயிரெழுத்து** வருமாயின் அம்மெய்யும் உயிரும் உயிர்மெய் எழுத்தாகப் புணரும். இதுவும் இயல்பு புணர்ச்சியே.

**எடுத்துக்காட்டு:**

| | மெய் | | உயிர் | |
|---|---|---|---|---|
| 1 | ஆ**ண்** | + | **அ**ழகன் | = ஆ**ண**ழகன் (உயிர் மெய்) |
| 2 | சின**ம்** | + | **இ**ல்லை | = சின**மி**ல்லை (உயிர் மெய்) |



### நடவடிக்கை 1

சேர்த்தெழுதுக.

1. தாள் + எடு =
2. நூல் + இல்லை =
3. குழல் + ஊது =
4. கடல் + அலை =
5. நேரம் + ஏது =
6. படம் + இல்லை =
7. மண் + எடு =
8. மடல் + எழுது =
9. மேகம் + அது =
10. சுடர் + ஏற்று =
11. தேன் + அமுது =
12. தேர் + ஓடு =
13. கனம் + ஏது =
14. சொல் + ஆழம் =
15. மூங்கில் + இலை =
16. கண் + அழகி =
17. சொல் + அழகு =
18. இடம் + அறிந்து =
19. குணம் + இல்லை =
20. பணம் + ஏது =
21. பெயர் + என்ன =
22. குழல் + ஊதினான் =

5.7.1 - இயல்பு புணர்ச்சி பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இயல்பு புணர்ச்சி பற்றி விளக்கம் பெறச் செய்தல்.
- எடுத்துக்காட்டுச் சொற்களை வாசிக்கப் பணித்தல்.
- சேர்த்தெழுதும் நடவடிக்கையைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும  **உ.சி.தி:** பயன்படுத்துதல்  **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 22
# தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

## பாடம் 1
## தீதும் நன்றும்

### தொகுத்துக் கூறுக.




- இத்தகைய சாதனங்களைப் பயன்படுத்தும்போது பெற்றோர்களின் கண்காணிப்பு அவசியம்.
- கண்கள் பாதிப்பு.
- மாணவர்கள் அதிக நேரம் செலவழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- தொடர்பில்லாத அகப்பக்கங்களைப் பயன்படுத்துவது தவறாகும்.
- இயங்கலை (online) சேவையில் பயனற்ற பொருள்களை வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
- பொய்யான தகவல்களைப் பகிர்தல், விளம்பரங்களில் ஏமாறுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

## நடவடிக்கை 1

கொடுக்கப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறிக் குழுவில் உரையாடுக.

## நடவடிக்கை 2

'மாணவர்களும் தொடர்புச் சாதனங்களும்' எனும் தலைப்பில் உரையாடுக.



| நன்மை | தீமை |
|---|---|
| • எளிதில் தொடர்பு<br>• தகவல்களை எளிதில் திரட்டலாம்<br>• நட்பு வட்டம் பெருகும்<br>• இணையத்தில் வேலைகளை எளிதில் முடிக்கலாம்<br>• விளம்பரங்களின் தளம் | • நேர விரயம்<br>• கண் பாதிப்பு<br>• கணினி விளையாட்டுகளில் ஈடுபாடு அதிகமாகும்<br>• இணையத்தில் வாணிப மோசடி<br>• பொய்யான தகவல்கள்<br>• தரமற்ற பொருள்கள்<br>• ஆபாசப் படங்கள் |



## நடவடிக்கை 3

'மாணவர்கள் திறன்பேசியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள்' எனும் தலைப்பையொட்டி உரையாடுக.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தால் எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகள் யாவை?

1.10.1 - நடப்புச் செய்தியைப் பற்றிய கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.

**ஆசிரியர் குறிப்பு**

- படங்களையொட்டிக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுதல்.
- படங்களையொட்டிக் குழு முறையில் கலந்துரையாடி தொகுத்துக் கூறுதல்.
- மாணவர்களும் தொடர்புச் சாதனங்களும் எனும் தலைப்பில் உரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 2
# பல்திறன் கற்றல்

## வாசித்து அறிக.

த. கனிமொழியன்,
24, கம்பன் தெரு,
தாமான் கம்பன்,
31700 கம்பார்,
பேராக்.

25 செப்டம்பர் 2020

அன்புள்ள நண்பன் மணிவண்ணனுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். அங்கு உன் நலமறிய ஆவல். என் பள்ளியில் நடத்தப்படும் 21ஆம் நூற்றாண்டு கற்றல் முறை பற்றி விளக்கம் கேட்டிருந்தாய். அதைக் குறித்து விளக்க இக்கடிதத்தை எழுதுகிறேன்.

புதிய அணுகுமுறைகளைப் புகுத்தி வகுப்பறைத் தோற்றத்தையும் கற்றல் கற்பித்தலையும் உருமாற்றம் செய்திருப்பதுதான் இந்த 21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலாகும். கற்றல் புத்தாக்கச் சிந்தனையோடு இணையத்தைப் பயன்படுத்திப் பல வகையான தொழில்நுட்ப விவரங்களைக் கற்றுக் கொள்கிறோம். நாங்கள் மடிக்கணினி, திறன்பலகை ஆகியவற்றின் மூலம் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றோம்.

ஆசிரியர்கள் வெண்கட்டியைப் பயன்படுத்திப் போதித்த காலம் மறைந்து போயிற்று என்றே கூற வேண்டும். இப்பொழுதெல்லாம் வகுப்பறைக்குள் மடிக்கணினி கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பெரும் பங்காற்றுகின்றது. இதன்வழி, உயர்நிலைச் சிந்தனையும் மாணவர்களிடையே புகுத்தப்படுகின்றது. இச்சிந்தனை மேம்பாட்டிற்குச் சிந்தனை வரிபடங்கள் அடிப்படையாக அமைகின்றன. நாங்கள் கற்கும் பாடங்களிலும் இவ்வரிபடங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

கற்றல் கற்பித்தலில் இணையம் உயிர்நாடியாகிவிட்டது. மாணவர்களாகிய நாங்களே சுயமாக இயங்கும் வகையில் எல்லா நடவடிக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பாட நேரத்தின்போது எங்கள் ஆசிரியர்கள் பல்திறன் கற்றல் நுணுக்கங்களைப் பயன்படுத்துகின்றனர். பாடத்தின் நோக்கத்தை முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவித்து எழுதுபலகையில் எழுதுகின்றனர்.

எங்கள் ஆசிரியர்கள், மாணவர்களிடையே மரியாதைப் பண்பு, நம்பிக்கை, ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை போன்ற நற்பண்புகளைக் குழு வேலைகள் மூலம் இணைக்கின்றனர். ஆசிரியர்கள் தற்போது மாணவர்களுக்கு வழிகாட்டுபவர்களாக விளங்குகின்றனர்.

21ஆம் நூற்றாண்டு கற்றல்வழி நாங்கள் தகவல் தொடர்புச் சாதனங்களைத் திறமையாக இயக்கவும் கற்றுக் கொண்டுள்ளோம். மீண்டும் அடுத்த மடலில் சந்திக்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,
அன்பு நண்பன்,
*கனிமொழியன்*

## நடவடிக்கை 1


கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.

## நடவடிக்கை 2

திறன்பேசியின் நன்மை தீமை தொடர்பான மாதிரி கடிதம் ஒன்றனை வாசித்திடுக.

## நடவடிக்கை 3

திறன்பேசி, பொதுத்தொலைபேசி ஒற்றுமை வேற்றுமைகளை இரட்டைக்குமிழி வரிபடத்தில் எழுதிக் காட்டுக.




2.3.10 - கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கடிதத்தைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- கடிதத்தில் கூறப்பட்ட தகவல்களைப் பற்றிக் குழுமுறையில் உரையாடப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ற மாதிரிக் கடிதம் ஒன்றனை வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 3

# நன்மைகள் அறிவோம்

### வாசித்து எழுதுக.



பிறருடன் விரைவில் தொடர்புகொள்ள முடிகிறது



வேலைகளை எளிதாக்கும்

தொடர்புச் சாதனங்களின் நன்மைகள்



புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிகாட்டியாய் அமையும்



சிறந்த பொழுதுபோக்கு

### நடவடிக்கை 1

தொடர்புச் சாதனங்களினால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

### நடவடிக்கை 2

இணையமும் மாணவர்களும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

3.6.8 - 80 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்புச் சாதனங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- குழு முறையில் தொடர்புச் சாதனங்களினால் ஏற்படும் நன்மைகள் பற்றி உரையாடப் பணித்தல்.
- கருத்துகளை விளக்கிக் கட்டுரையாக எழுதுதல்.


**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 4


# செய்யுளும் மொழியணியும்

## உலகநீதியையும் பொருளையும் அறிக.

சூழல் 1




சூழல் 2




**உலகநீதியும் பொருளும்**

- **அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்.**
  பயம் இல்லாமல், தனியாகப் பயணம் செய்யக்கூடாது.
- **அடுத்தவரை யொருநாளுங் கெடுக்க வேண்டாம்.**
  தன்னை நம்பி வந்தவரை ஒருபோதும் கெடுக்கக்கூடாது.

## நடவடிக்கை 1

உலகநீதியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.

## நடவடிக்கை 2

உலகநீதியின் பொருளை விளக்கும் வாக்கியங்களுக்கு ( ✓ ) என அடையாளமிடுக.

| | | |
|---|---|---|
| 1 | இரவில் பயமின்றித் தனியாகப் பயணம் செய்யாதே. | |
| 2 | குமணன் தன்னை நம்பி வந்த நண்பனை ஆதரித்தான். | |
| 3 | நல்லவர்களுக்கு மட்டுமே உதவி செய்ய வேண்டும். | |
| 4 | நம்பி வந்தவர்களை ஏமாற்றக்கூடாது. | |
| 5 | தனியாகப் பேருந்தில் பயணம் செய்வது சிறந்தது. | |


## நடவடிக்கை 3

சூழலுக்கு ஏற்ற உலகநீதியை எழுதுக.

அ



ஆ




4.9.2 - நான்காம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உலகநீதிகளையும் அவற்றின் பொருளையும் வாசித்து அறிதல்.
- சூழலுக்கு ஏற்ற உலகநீதியைத் தெரிவு செய்து விளக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## பாடம் 5
# இலக்கணம்

## ஏனெனில், ஆனால், ஆதலால் ஆகிய இடைச்சொற்களை அறிக.

இடைச்சொற்கள் வாக்கியங்களைக் கருத்தால் இணைக்கப் பயன்படுபவை. இவை **இணைப்பிடைச் சொற்கள்** என்று அழைக்கப்படும்.



**எடுத்துக்காட்டு :**

1. மலர்விழியால் இன்று பேச முடியவில்லை. **ஏனெனில்**, அவளுக்குத் தொண்டை வலி.
2. இலக்கியன் முயற்சியுடன் படித்தான். **ஆனால்**, வகுப்பில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெறவில்லை.
3. கனத்த மழை பெய்தது. **ஆதலால்**, மாணவர்களால் திடலில் விளையாட முடியவில்லை.

## நடவடிக்கை 1

சரியான இடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை நிறைவு செய்க.

| ஏனெனில் | ஆனால் | ஆதலால் |
|---|---|---|

1. சாலையில் விபத்து ஏற்பட்டது. ______ , போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.
2. யாழினி பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டாள். ______ , வெற்றி பெறவில்லை.
3. இறைநம்பிக்கை ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும். ______ , அதுவே சிறந்த வாழ்வுக்கு வழிகாட்டி.
4. தூங்கிய குழந்தை திடுக்கிட்டு விழித்தது. ______ , அழவில்லை.
5. நாய் குரைத்தது கேட்டு வெளியில் சென்று பார்த்தேன். ______ , அங்கு யாரும் இல்லை.
6. கனத்த மழை பெய்தது. ______ , அந்தக் கிராமத்தில் வெள்ளப் பேரிடர் ஏற்பட்டது.

5.3.20 - ஆகவே, எனவே, ஆகையால், ஏனென்றால், ஏனெனில், ஆனால், ஆதலால் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இடைச்சொற்கள் பற்றிய விளக்கம் அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் சரியான இடைச்சொல்லை எழுதி வாசிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 23
## சமயம்
### பாடம் 1
### கல்விப் பயணம்

**தொகுத்துக் கூறுக.**



**தேசியப் பள்ளிவாசல்**

- தேசியப் பள்ளிவாசல் கோலாலம்பூரில் உள்ளது.
- தலைநகரில் மிகப் பெரிய பள்ளிவாசலாகத் திகழ்கின்றது.
- இங்கு ஒரே நேரத்தில் 15 ஆயிரம் பேர் தொழ இயலும் என்று கூறப்படுகிறது.
- இப்பள்ளிவாசலின் பிரதான கூரை குடை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

**பத்துமலை**

- பத்துமலை முருகன் கோயில் தலைநகரில் அமைந்துள்ளது.
- பத்துமலை முருகன் கோயில் 1891ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- கரடுமுரடான பாதையை மாற்றி 1938ஆம் ஆண்டு மலைக்கோயிலுக்குச் செல்ல 272 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன.
- பத்துமலை முருகன் கோயில் சுற்றுலாத் தலங்களில் முக்கியமான ஒன்றாகும்.






## சீனக்கோயில்

- சீனர்கள் இங்குச் சென்று வணங்குவார்கள்.
- ஊதுபத்திகளை ஏற்றி வைத்து வணங்குவது இவர்களின் வழக்கமாகும்.
- பௌத்த மதத்தினரும் இக்கோயில்களுக்குச் சென்று வணங்குவர்.

## தேவாலயம்

- கிறிஸ்துவ மதத்தினர் தேவாலயங்களுக்குச் செல்வது வழக்கமாகும்.
- அவர்கள் ஏசு கிறிஸ்துவை வணங்குவர்.
- ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான கிறிஸ்துவர்கள் தேவாலயங்களுக்குச் செல்வர்.




### நடவடிக்கை 1

குறிப்புகளைக் கொண்டு பெற்ற அனுபவங்களைத் தொகுத்துக் கூறுக.

### நடவடிக்கை 2

வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுக.

### நடவடிக்கை 3

வழிபாட்டுத் தலங்களில் கடைப்பிடிக்கப்படும் ஒழுக்க நெறிகளைத் தொகுத்துக் கூறுக.

1.10.2 - பெற்ற அனுபவங்களைத் தொகுத்துக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வழிபாட்டு இடங்களைச் சுற்றிப் பார்த்த அனுபவத்தைப் பற்றி உரையாடுதல்.
- பெற்ற அனுபவத்தைத் தொகுத்துக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

பாடம் 2

# நவராத்திரி விழா

## வாசித்து அறிக.

### கம்பர் இளைஞர் சங்க ஏற்பாட்டில் நவராத்திரி வழிபாடு

எதிர்வரும் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஒன்பது தினங்களும் சிறப்பான பல நிகழ்ச்சிகள் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- சமயச் சொற்பொழிவு
- சமயக்குரவர்களின் கதை
- கொலு வைப்பது பற்றிய தெளிவுரை
- கோயில் வழிபாட்டின் நன்மைகள்





பாரம்பரியம் காக்கும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நாள் : 06. 10. 2020
நேரம் : மாலை மணி 6:00 தொடக்கம்
இடம் : நகராண்மை மண்டபம், சிரம்பான்.

**திரண்டு வருக!**

**தெளிவு பெறுக!**

## நடவடிக்கை 1

பதாகையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசித்துக் காட்டுக.

2.3.9 - பதாகையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.


**ஆசிரியர் குறிப்பு**

- பதாகையைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பதாகையில் கூறப்பட்ட தகவல்களைப் பற்றி விளக்கம் அளித்து கலந்துரையாடுதல்.
- மாணவர்கள் குழுமுறையில் பதாகை ஒன்றனை உருவாக்கி வாசித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்



## பாடம் 3
# சமயச் சின்னங்கள்




## வாசித்து எழுதுக.


வேல்


வேள்வி


கோலம்


கோளம்



கொலு


கொழுக்கட்டை


ஒலி


ஒளி

1. பத்துமலை முருகன் கோயில் அடிவாரத்தில் நீண்ட **வேல்** ஏந்திய முருகன் சிலை உள்ளது.
2. அண்ணனின் திருமண வைபவத்தில் ஐயர் **வேள்வி** வார்த்துச் சடங்குகளை ஆரம்பித்தார்.
3. வாசலில் **கோலம்** இடுவது தமிழர்களின் பண்பாடாகும்.
4. கோள்கள் உள்ள வட்டத்தைக் **கோளம்** என்போம்.
5. நவராத்திரியில் வீட்டில் **கொலு** வைப்பர்.
6. அத்தை சுவையான **கொழு**க்கட்டை செய்தார்.
7. கோயில் மணியின் **ஒலி** கேட்டது.
8. அகல் விளக்கின் **ஒளி** பிரகாசமாக இருந்தது.





## நடவடிக்கை 1

வாக்கியங்களில் உள்ள லகர, ழகர, ளகரச் சொற்களை வேறுபாடு விளங்க வாசித்து அறிக.

## நடவடிக்கை 2

சரியான லகர, ழகர, ளகரச் சொல்லை எழுதுக.

1. சிறுவன் கடையில் ________ வாங்கினான். (பலம் / பழம்)
2. கனத்த மழை பெய்ததால் ________ ஏற்பட்டது. (வெள்ளம் / வெல்லம்)
3. வீரனின் கையில் நீண்ட ________ இருந்தது. (வால் / வாள்)
4. அண்ணன் தொழிற்சாலையில் ________ செய்கிறார். (வேளை / வேலை)
5. ஆடுகள் இலை ________ களைத் தின்றன. (தலை / தழை)
6. சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் ________ விளையாடினர். (கோழி / கோலி)
7. அம்மா தினமும் அதி ________ யில் எழுவது வழக்கம். (காளை / காலை)
8. அந்த இளைஞன் சிற்பக் ________ யில் சிறந்தவன். (கலை / களை)
9. வெள்ளை நிறத் ________ ஒன்றில் தங்கை படம் வரைந்தாள். (தால் / தாள்)
10. ________ ப் பேரலை பல உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியது. (ஆளி / ஆழி)

## நடவடிக்கை 3

லகர, ழகர, ளகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.



| | |
|---|---|
| அலகு | பறவையின் மூக்கு |
| அழகு | எழில் |
| ஒளி | வெளிச்சம் |
| ஒலி | சத்தம் |
| கிலி | பயம் |
| கிளி | பறவை |
| தால் | நாக்கு |
| தாழ் | தாழ்ப்பாள் |

| | |
|---|---|
| களி | மகிழ்ச்சி |
| கழி | நீக்கு |
| மலை | குன்று |
| மழை | மாரி |
| விளி | கூப்பிடு |
| விழி | கண் |
| கோல் | தடி |
| கோள் | கிரகம் |



3.4.14 - லகர, ழகர, ளகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சமயச் சின்னங்கள் பற்றி உரையாடச் செய்தல்.
- வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- லகர, ழகர, ளகர வேறுபாடு விளங்க வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.

### கதை 1



மல்லிகை அடுக்குமாடி குடியிருப்பு மக்கள் அடிக்கடி கூட்டுப்பணி செய்வர். குடும்ப தினம், சிறுவர் தினம், திறந்த இல்ல உபசரிப்பு போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வர். **ஒன்று பட்டால் உண்டு வாழ்வு** எனும் பழமொழிக்கேற்ப மக்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் செயல்பட்டுச் சிறப்புடனும் சுபிட்சத்துடனும் வாழ்கின்றனர்.

### கதை 2




நீலவேணி சிறுவயதிலிருந்தே சேமிக்கும் பழக்கத்தை உடையவள். பெற்றோர் கொடுக்கும் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வாள். தினசரி சிறுசிறு தொகையை உண்டியலில் சேமித்தும் வைப்பாள். உண்டியல் பணத்தை எடுத்துச் சென்று வங்கியில் சேமிக்கத் தொடங்கினாள். **சிக்கனம் சீரளிக்கும்** எனும் பழமொழியின் பொருளை உணர்ந்து செயல்பட்டால் என்றும் சிறந்து வாழலாம் என்பதை நீலவேணி அறிந்து பெருமை கொண்டாள்.

**பழமொழிகளும் பொருளும்**

- **ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.**
  எல்லாரும் ஒன்றிணைந்து ஒருமித்த கருத்தோடு செயல்பட்டால் நல்வாழ்வு அமையும்.
- **சிக்கனம் சீரளிக்கும்.**
  தேவைக்கு ஏற்பச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்து வாழ்ந்தால் சிறப்புற வாழலாம்.

### நடவடிக்கை 1

பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; சரியான வரிவடிவத்துடன் எழுதுக.

### நடவடிக்கை 2

பழமொழிகளுக்கு ஏற்ப சூழல் அல்லது கதை ஒன்றனை உருவாக்குக.

4.7.4 - நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பத்திகளை வாசிக்கச் செய்தல்.
- பழமொழிகளையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/பரிவுள்ளவர்

## பாடம் 5
# இலக்கணம்

## தொடர் வாக்கியம் அறிக.

**எடுத்துக்காட்டு:**

1. மாணவர்கள் காலம் தவறாமல் பள்ளிக்கு வந்தனர்; பாடங்களைச் சிறப்பாகக் கற்றனர்.
2. நாங்கள் குறித்த நேரத்தில் வந்தோம். எனினும், திரைப்பட நுழைவுச் சீட்டை வாங்க இயலவில்லை.

### நடவடிக்கை 1

தொடர் வாக்கியங்களை எழுதுக.

**சொல்லும் பொருளும்**

- வன்மை - வலிமை
- தன்மை - இயல்பு
- போலி - சாயல்
- குழவி - குழந்தை
- முருகு - அழகு

1. தேன்மொழி - படித்தாள் - தேர்வில் - வெற்றி
2. அத்தை - செடிகள் - உரம் - செழிப்பாக
3. தம்பி - திருக்குறள் மனனம் - பரிசு
4. தர்மன் - வசதி குறைந்த - மிகவும் புத்திசாலி
5. சரிவிகித உணவு - அவசியம் - உண்ண
6. தொழிலாளர்கள் - உழைத்தனர் - நிறைந்த - ஊதியம்
7. அண்ணனும் - தம்பியும் - வீட்டுப் பாடங்கள் - விளையாட
8. வளவன் - துரித உணவு- வயிற்று வலி
9. பாண்டிய மன்னன் - பொற்கொல்லன் பேச்சு - கோவலனுக்குத் தண்டனை
10. வள்ளி - சுறுசுறுப்பானவள் - அனைவரும் - பாராட்டி




5.4.7 - தொடர் வாக்கியம் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர் வாக்கியம் பற்றிய விளக்கம் பெறச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- தொடர் வாக்கியங்களைச் சரியாக எழுதும் பயிற்சியை அளித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 24
## வணிகவியல்
### பாடம் 1
## விளம்பர அட்டைகள்

### செவிமடுத்துக் கூறுக.

**உணவுச் சேவை**

- சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் சமைக்கப்பட்ட உணவு.
- பாரம்பரிய முறையில் மண் சட்டியில் சமைக்கப்பட்ட உணவு.
- வீடுகளுக்கு அனுப்பும் சேவை மட்டுமே. உடனே அழையுங்கள்!
- தொடர்ப்புக்கு :
  திரு. ச. மேகநாதன்
  திறன்பேசி: 013-1234567

**நவீன முறையில் தையற்கலை**

- சிறப்பான பயிற்சியாளர்கள்.
- பாரம்பரிய , நவீன பாணியிலான உடை வடிவமைப்பைக் கற்றுக் கொள்ளலாம்.
- மூன்று மாதங்களில் இக்கலையைக் கற்றுக் கொள்ளலாம்.
- சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- தொடர்பு கொள்ளுங்கள்
  திருமதி த. காவேரி
  திறன்பேசி : 012-1235567

**சிறு வாணிபம் நடத்த ஆர்வமா?**

- முறையான பயிற்சி
- பாதுகாப்பான இடவசதி
- தங்கும் இடவசதியும் உண்டு
- நற்சான்றிதழ் வழங்கப்படும்
- தொடர்புக்கு:
  திரு. மு. அன்புக்கரசன்
  மின்னஞ்சல்: anbu@yahoo.com

**பகுதி நேர வேலை வாய்ப்பு**

- அனுபவமிக்க நிறுவனம்
- திறமைக்கு ஏற்ப ஊதியம்
- இலவச மருத்துவச் சேவை
- பல்கலைக்கழக மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- விவரம் பெற அழையுங்கள்.
  திரு. வ. வீரசேனன்
  திறன்பேசி : 015-1235567
  மின்னஞ்சல் : veera@yahoo.com

### நடவடிக்கை 1

செவிமடுத்த விளம்பரங்களில் கூறப்படும் முக்கியக் கருத்துகளை அறிந்து குழுவில் உரையாடுக.

## நடவடிக்கை 2

கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.

1. சிறு வணிகம் நடத்த எண்ணம் கொண்டால் யாரைத் தொடர்பு கொள்ளலாம்?
2. உணவுச் சேவை விளம்பரம் கொடுத்தவர் யார்?
3. உணவுச் சேவையின் பாரம்பரியம் யாது?
4. இலவச மருத்துவச் சேவை எந்த விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது?
5. மூன்று மாதங்களில் கலையைக் கற்பிக்கும் விளம்பரம் எது?
6. சிறு வாணிபம் நடத்த கற்றுக் கொள்வதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

## நடவடிக்கை 3

செவிமடுத்த வேறு விளம்பரங்களின் முக்கியக் கருத்துகளைக் கூறுக.

தொலைக்காட்சி விளம்பரங்களினால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக.

தொலைக்காட்சி விளம்பரங்கள் எவ்வாறு சிறுவர்கள் மனத்தைக் ஈர்க்கின்றன என்பது பற்றி உரையாடுக.

1.4.5 - செவிமடுத்த விளம்பரத்திலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- விளம்பர அட்டைகளில் கூறப்பட்ட தகவல்களைப் பற்றி உரையாடப் பணித்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்கு விடையளிக்கச் செய்தல்.
- வேறு சில விளம்பரங்களைச் செவிமடுத்து முக்கியக் கருத்துகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 2

# சிறுதொழில் கற்போம்

## விளம்பரத்தை வாசித்து அறிக.




## நடவடிக்கை 1

விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.

2.3.8 - விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- விளம்பரத்தில் கூறப்பட்ட தகவல்கள் பற்றி உரையாடுதல்.
- மாணவர்கள் குழுமுறையில் விளம்பரம் ஒன்றனைத் தயாரித்து வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 3

# சந்தையில் ஒரு நாள்


## வாசித்து மகிழ்க.




சென்ற **ஞாயிற்றுக்கிழமையன்று** என் **தாயாருடன்** சந்தைக்குச் சென்றேன். பொது **விடுமுறை** என்பதால் மக்கள் கூட்டம் **நெரிசலாக** இருந்தது. **இறைச்சி**, மீன், **காய்கறிகள்**, பழங்கள், உணவுப் **பொருள்கள்** எனப் பல பொருள்கள் அங்கு விற்கப்பட்டன. அம்மா செழிப்பான **கீரைகளை** வாங்கினார். பின்னர் மீன், இறைச்சி என வாங்கினார். பொருள்களின் விலையை அம்மா **பேரம்** பேசியதைக் கண்டேன்.

சில கடைகளில் மக்கள் **வரிசையாக** நின்று பொருள்களை வாங்கினர். அம்மாவிடம் **இறால்** வாங்கும்படி கேட்டேன். என் விருப்பத்திற்கு இசைந்து அம்மா **பெரிய** வகை இறால் வாங்கினார். அனைத்துப் பொருள்களையும் நாங்கள் கொண்டு வந்த பைகளில் போட்டுக்கொண்டோம். **இறுதியாகக் குளிர்பானம்** வாங்கிக் கொண்டு வீடு திரும்பினோம்.

## வாக்கியங்களில் உள்ள ரகர, றகர வேறுபாடு அறிக.



1
- சகுந்தலை குளக்**கரை** ஓரமாக அமர்ந்து பனிக்கூழ் உண்டாள்.
- அம்மா வாழைக்**கறை** பட்ட சட்டையைத் துவைத்தார்.

2
- வனிதை இனிமையான **குரலில்** பாட்டுப் பாடினாள்.
- நாள்தோறும் **குறள்** படித்தல் நன்மை பயக்கும்.



3
- வியாபாரி இறைச்சியைக் **கூரிய** கத்தியால் வெட்டினார்.
- ஆசிரியர் **கூறிய** அறிவுரைகளைக் கடைப்பிடித்தேன்.

4
- அத்தை காய்கறிகளைக் கத்தியால் **அரிந்தாள்**.
- கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளை வாசித்து **அறிந்து** கொண்டேன்.



5
- **கீரியும்** பாம்பும் சண்டையிட்டுக் கொண்டன.
- தம்பியின் கையில் முள் **கீறியதால்** காயம் ஏற்பட்டது.

6
- வீட்டை அலங்கரிக்க அம்மா புதிய **திரை**ச்சீலைகளை வாங்கினார்.
- கப்பம் எனும் **திறை** செலுத்தும் முறை ஆங்கிலேயர் ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.



7
- அந்நாளில் தோட்டத் தொழிலாளர்களின் தலைவனாக **துரை** எனும் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- சரக்குக் கப்பல் ஒன்று கிள்ளான் **துறை**முகத்தை அடைந்தது.






## நடவடிக்கை 1

வண்ணமிடப்பட்ட ரகர, றகரச் சொற்களைப் பயன்படுத்தி வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.

## நடவடிக்கை 2

வாக்கியம் அமைத்திடுக.

1. அரம் = ________
   அறம் = ________
2. சிரை = ________
   சிறை = ________
3. மரி = ________
   மறி = ________
4. எரி = ________
   எறி = ________
5. அரி = ________
   அறி = ________
6. சொரி = ________
   சொறி = ________

## நடவடிக்கை 3

படத்திற்குப் பொருத்தமான ரகர, றகரச் சொல்லை எழுதுக.

1. என்னை ________ என்றும் அழைப்பர்.



2. அன்னம் ________ இனத்தைச் சேர்ந்தது.



3. ஆல ________ அடர்ந்து வளர்ந்திருந்தது.



4. ________ நிறைந்த வீரர்கள் வாட்போர் புரிந்தனர்.



5. புயல் காற்றினால் வீட்டின் ________ சேதமடைந்தன.



6. மணப்பெண் கட்டியிருந்த ________ப் புடவை அழகாகக் காட்சியளித்தது.



3.4.15 - ரகர, றகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலைப் பார்த்துக் கலந்துரையாடல் நடத்துதல்.
- சூழலில் உள்ள ரகர, றகரச் சொற்களை வாசித்து விளக்கப் பணித்தல்.
- மாணவர்கள் குழுமுறையில் மர வரிபடத்தில் ரகர, றகரச் சொற்களைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.

ஓர் அரசன் சோதிடர் ஒருவரை அரசவைச் சோதிடராக நியமனம் செய்திருந்தான். சோதிடர் அத்துறையில் மிகவும் திறமைசாலியாக இருந்தார். அக்கலையைக் **கரைத்துக் குடித்திருந்த** அவரின் புகழ் நாளுக்கு நாள் அதிகரித்தது.

அரசன் சோதிடரின் திறமையைப் பார்த்துப் பொறாமை கொண்டான். சோதிடரின் புகழைக் குறைக்க எண்ணினான். ஒருநாள் சபையில் அமர்ந்திருந்த சோதிடரைப் பார்த்து, "ஒவ்வொருவருக்கும் ஆயுள் எப்போது முடியும் என்று உங்களால் சொல்ல முடியுமல்லவா?" என்றான்.

"நிச்சயம் முடியும்," என்றார் சோதிடர்.

"அப்படியானால் உங்கள் ஆயுள் எப்போது முடிகிறது?" என்று கேட்டான் அரசன். அவையில் உள்ள அனைவரும் சிரித்தனர். தம்மைப் பலர் முன்னிலையில் **கரி பூச** நினைக்கும் அரசனின் நோக்கத்தைச் சோதிடர் அறிந்து கொண்டார்.



"அரசரே! எல்லாருடைய ஆயுளைப் பற்றிக் கூறுகிற நான் என் ஆயுளைப் பற்றித் தெரியாமலா இருப்பேன்? நான் அதைக் கூறினால் நீங்கள் கவலைப்படுவீர்கள்," என்றார்.

"நான் கவலைப்படமாட்டேன். சுற்றி வளைக்காமல் நீங்கள் கூறுங்கள்," என்றார் அரசன்.

"அரசே! நீங்கள் எப்போது இறக்கிறீர்களோ அதற்குச் சரியாக மூன்று நாள்களுக்கு முன்பாக நான் இறப்பேன். அதாவது, நான் இறந்த மூன்றாவது நாளில் நீங்களும் மரணித்துவிடுவீர்கள்," என்றார் சமயோசிதமான சோதிடர்.

சோதிடர் கூறியதைக் கேட்டதும் அரசன் வாயடைத்துப் போனான். அன்று முதல் சோதிடரை மிகவும் நல்ல முறையில் அன்பாகக் கவனித்தான்.

## மரபுத்தொடர்களும் பொருளும்

- **கரி பூசுதல்**
  அவமானம் ஏற்படுத்துதல் / மதிப்பைக் கெடுத்தல்
- **கரைத்துக் குடித்தல்**
  ஒரு கலையை அல்லது துறையைப் பற்றி முழுக்கப் படித்து அறிதல்

## நடவடிக்கை 1

மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக.


## நடவடிக்கை 2

சூழலுக்கு ஏற்ற மரபுத்தொடரை எழுதுக.









4.6.4 - நான்காம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிந்து விளக்கப் பணித்தல்.
- சூழலுக்கு ஏற்ற மரபுத்தொடரை எழுதி விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## நிறுத்தக்குறிகளை அறிக.

**எடுத்துக்காட்டு :**

1. சுந்தரி ஓடினாள்; கால் இடறி விழுந்தாள்.
2. வாழ்வில் வெற்றி பெற உழைப்பு வேண்டும்: அஃது இல்லையேல் எதையும் சாதிக்க இயலாது.
3. நல்ல தமிழில் எழுத வேண்டுமென்றால் நாம் அறிய வேண்டியவை: இலக்கணம், இலக்கியம், மொழிநடை.
4. "அம்மா எனக்குச் சுவையான மீன் கறி சமைக்கக் கற்றுத் தாருங்கள்," என்றாள் மாதவி.



## நடவடிக்கை 1

சரியான நிறுத்தக்குறிகளை இடுக.

1. தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் ___ அதுவே வளமான வாழ்விற்கு அடித்தளமாகும் ___
2. சிறுவன் பேருந்தில் ஏறினான் ___ அமர்வதற்கு இடம் இல்லாமல் நின்றான்.
3. ___ தொல்காப்பியம் ___ என்பது பழமையைக் காத்து இயம்பும் நூல் என்று பொருள்படும்.
4. ___ நாளை நாங்கள் வெளியூர் செல்வோம் ___ என்றாள் கார்குழலி ___
5. காந்தியின் தன்னலமற்ற சேவையைக் கருதி அவரை மக்கள் ___ மகாத்மா ___ என்று அழைத்தனர்.



5.5.4 - அரைப்புள்ளி, முக்காற்புள்ளி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
5.5.5 - ஒற்றை மேற்கோள் குறி, இரட்டை மேற்கோள் குறிகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நிறுத்தக்குறிகளை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- சரியான நிறுத்தக்குறிகளை இடும் பயிற்சியைச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்



# தொகுதி 25
## போதைப்பொருள்
## பாடம் 1
## அரிய வாய்ப்பு

### செவிமடுத்துக் கூறுக.

**கண்காட்சியும் கருத்தரங்கும்**

மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
நம் பள்ளியின் சுகாதார வாரத்தை முன்னிட்டுக் கண்காட்சியும் கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
இந்நிகழ்ச்சியின் விவரம்:

| | |
|---|---|
| தேதி | : 11.10.2020 (ஞாயிறு) |
| நேரம் | : காலை 9:00 முதல் மாலை 5:00 வரை |
| இடம் | : பள்ளி மண்டபம் |
| தலைப்பு | : போதைப்பொருளைத் தவிர்ப்போம் |
| சிறப்பு வருகையாளர் | : மாவட்ட சுகாதார அதிகாரி |



படிநிலை இரண்டில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**வாருங்கள்! வாருங்கள்!**

செவிமடுத்திடுக

### நடவடிக்கை 1

செவிமடுத்த அறிவிப்பில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.

1.4.4 - செவிமடுத்த அறிவிப்பிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பதிவு செய்யப்பட்ட அறிவிப்பை மாணவர்கள் செவிமடுத்தல்.
- செவிமடுத்த அறிவிப்பில் உள்ள முக்கியக் கருத்துகளைக் குழுமுறையில் பட்டியலிட்டுக் கூறப் பணித்தல்.
- அறிவிப்பினையொட்டிய வினாவிடைப் பயிற்சியைச் செய்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

பாடம் 2

# விழிப்புணர்வு கொள்வோம்

## வாசித்து அறிக.

### மேடை நாடகம்

### தெராத்தாய் வசிப்பிட மக்களுக்கு ஒரு நற்செய்தி!

இவ்வட்டார இளைஞர் சங்கம் மேடை நாடகம் ஒன்றனை ஏற்பாடு செய்துள்ளது. 'போதைப்பொருள் அற்ற நாடு' எனும் கருப்பொருள் கொண்ட இந்நாடகம் எதிர்வரும் சனிக்கிழமை இரவு நடைபெறும்.

பள்ளி மாணவர்களும் பெற்றோர்களும் திரளாக வந்து மேடை நாடகத்தைக் கண்டு களிக்கவும். போதைப்பொருளுக்கு எளிதில் அடிமையாகும் பள்ளி மாணவர்கள் பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் இந்நாடகம் சித்தரிக்கும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் விளையும் கொலை, கொள்ளை, கும்பல் சண்டை போன்ற சட்ட விரோதச் செயல்கள் பற்றி நமக்குத் தெரிய வரும்.

சிறுவயது முதலே போதைப்பொருளைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

**வாருங்கள்! வாருங்கள்!**
**அனைவரும் ஒன்றிணைவோம்!**
**விழிப்புணர்வு பெறுவோம்!**
**போதைப்பொருளை வேரோடு சாய்ப்போம்!**



மேல் விவரங்கள் பெறுவதற்கு,
திரு. த. கோச்செழியன்
திறன்பேசி: 012-1234567

## நடவடிக்கை 1

அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.


## நடவடிக்கை 2

வினாக்களுக்கு விடையளி.

1. மேடை நாடகத்தின் ஏற்பாட்டாளர் யார்?
2. இந்நாடகத்தின் கருப்பொருள் யாது?
3. இம்மேடை நாடகம் எவ்வாறு பொதுமக்களுக்குப் பயனளிக்கும்?
4. அறிவிப்பில் கூறப்பட்ட சட்ட விரோதச் செயல்கள் யாவை?
5. பொதுமக்கள் போதைப்பொருள் ஒழிப்பிற்கு எவ்வாறு துணைபுரியலாம்?

## நடவடிக்கை 3

அறிவோட்ட வரிபடத்தில் போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புகளை எழுதுக.



**சொல்லும் பொருளும்**

- சுவர் - மதில்
- குருதி - ரத்தம்
- ஈகை - தானம்
- அகம் - உள்ளம்
- வாய்மை - உண்மை

2.3.7 - அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசிக்கப் பணித்தல்.
- அறிவிப்பு தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கப் பணித்தல்.
- போதைப்பொருளின் பாதிப்பை வரிபடத்தில் எழுதி வாசிக்கச் செய்தல்.


**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

பாடம் 3

# நல்லதைச் செய்வோம்

## வாசித்து எழுதுக.




### நடவடிக்கை 1

உரையாடலில் உள்ள ணகர, நகர, னகரச் சொற்களை வாசித்துப் பொருளை அறிக.

## நடவடிக்கை 2

ணகர, நகர, னகரச் சொற்களை எழுதுக.

1. ______ மாதத்தில் அக்காவின் திருமணம் நடைபெறும்.
2. அப்பா சுவரில் ______ அடித்து ஓவியத்தை மாட்டினார்.
3. அதிக ______ கொண்ட புத்தகப் பையைத் தூக்கலாகாது.
4. அம்மா கூறிய விடுகதையைக் கேட்டு ஒரு ______ யோசித்தேன்.
5. தம்பியின் புதிய சட்டையின் நிறம் ______.
6. சரவாக் மாநிலத்தில் மிக ______ மான ஆறு உள்ளது.
7. ______த்தில் ஊற்றிய பாலைப் பூனை குடித்தது.
8. ______ம் என்பது துன்பம் என்பதைக் குறிக்கும்.
9. அரசர் அமைச்சர்களுக்கு ______ இட்டார்.
10. ______ ஒன்று அசைந்து அசைந்து நடந்து வந்தது.
11. வேகமாக ஓடிய குதிரை ______த்தது.
12. வேடன் எய்த ______ குறி தவறிவிட்டது.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| கனை | ஆனை | கின்ன | நீளம் | கனம் | ஆனி |
| கணை | ஆணை | கிண்ண | நீலம் | கணம் | ஆணி |

## நடவடிக்கை 3

பொருள் விளங்க வாக்கியம் அமைத்திடுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பனை | = | | 4 | மனை | = |
| | பணை | = | | | மணை | = |
| 2 | நுனி | = | | 5 | அன்னம் | = |
| | நுணி | = | | | அண்ணம் | = |
| 3 | கனி | = | | 6 | தனி | = |
| | கணி | = | | | தணி | = |

3.4.16 - ணகர, நகர, னகர வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் உள்ள ணகர, நகர, னகரச் சொற்களைக் கண்டறிந்து வாசித்திடச் செய்தல்.
- பொருத்தமான ணகர, நகர, னகரச் சொல்லை வாக்கியத்தில் எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடரையும் பொருளையும் அறிக.

காட்சி 1




காட்சி 2



## காட்சி 3




**உவமைத்தொடரும் பொருளும்**

- **காட்டுத் தீ போல**
  ஒரு செய்தி விரைவாகப் பரவுதல்

## நடவடிக்கை 1

உவமைத்தொடரைச் சரியான வாக்கியத்துடன் இணைத்துக் கூறுக.

1. வங்கியைக் கொள்ளையடித்த சம்பவம் ______ பரவியது.
2. அடைமழையும் புயற்காற்றும் ஏற்படுத்திய சேதங்கள் ______ நாட்டு மக்களிடையே பரவியது.
3. தமிழ்ப்பள்ளி மாணவர்கள் உலகளாவிய நிலையில் பெற்ற வெற்றிகள் ______ எல்லாராலும் பேசப்படும் செய்தியாகும்.
4. கடினமாக உழைத்து உயர்ந்த மருதனின் கதை ______ மக்களிடையே சென்றடைந்தது.

## நடவடிக்கை 2

மேற்கண்ட உவமைத்தொடருக்கு ஏற்ப சூழல் ஒன்றனை உருவாக்குக.

4.11.2 - நான்காம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடல்களை வாசித்து அறியச் செய்தல்.
- உவமைத்தொடரையும் அதன் பொருளையும் அறியச் செய்தல்.
- உவமைத்தொடரைச் சரியான வாக்கியத்துடன் இணைத்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5

# இலக்கணம்

## வேற்றுமை உருபு அறிக.

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | • சிறுகதை **கபிலனால்** எழுதப்பட்டது.<br>• முகிலன் **அகிலனோடு** விளையாடச் சென்றான்.<br>• அண்ணன் **அண்ணியுடன்** விருந்திற்கு வந்தார். |
| நான்காம் வேற்றுமை | கு | • **தம்பிக்குப்** பரிசு கிடைத்தது. |

## நடவடிக்கை 1

மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.



1. காவியன் (தங்கை) ______ பள்ளிக்குச் சென்றான்.
2. பரிசு (ஆசிரியர்) ______ அளிக்கப்பட்டது.
3. (அத்தை) ______ ஒரு கடிதம் வந்தது.
4. இராமன் (சீதை) ______ காட்டிற்குச் சென்றான்.
5. (வளர்மதி) ______ கதைப் புத்தகம் படிப்பதில் மிக ஆர்வம்.
6. சிறுவன் (நண்பர்கள்) ______ காற்பந்து விளையாடினான்.
7. தினமும் உடற்பயிற்சி (செய்து) ______ நலமாக வாழலாம்.
8. வான்மதியின் (தந்தை) ______ பதவி உயர்வு கிடைத்தது.
9. (சோழ அரசன்) ______ கோயில் கட்டப்பட்டது.
10. அமிர்தம் (தோழி) ______ சுற்றுலா சென்றாள்.




| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஐந்தாம் வேற்றுமை | இன், இருந்து, இல், நின்று | • அப்பா **அலுவலகத்திலிருந்து** புறப்பட்டார்.<br>• இலைகள் **மரத்தினின்று** விழுந்தன. |
| ஆறாம் வேற்றுமை | அது, உடைய | • **நண்பனது** மகிழுந்து புதியது.<br>• **அமிர்தனுடைய** வீடு மாடி வீடாகும். |
| ஏழாம் வேற்றுமை | இல், இடம், பால், கண் | • **பெட்டியில்** துணிகள் உள்ளன.<br>• **அவள்கண்** நான் நட்பு கொண்டேன். |
| எட்டாம் வேற்றுமை | உருபு இல்லை (விளித்தல் /அழைத்தல்) | • **தோழா!** இங்கே பார். |

## நடவடிக்கை 2

ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை இணைத்து எழுதிடுக.

1. இளந்தேங்காய் (தென்னை) ________ விழுந்தது.
2. (தோழி) ________ பள்ளிக்கூடம் அருகில் உள்ளது.
3. (மாணவர்கள்) ________ நற்பண்புகள் உள்ளன.
4. (அவன்) ________ அன்பு கொண்டேன்.
5. (இறைவன்) ________ எங்களுக்கு அருள்புரிவாயாக.
6. (இருப்புப்பேழை) ________ நகைகள் வைக்கப்பட்டுள்ளன.
7. உலகத்தில் (தாய்) ________ அன்பே உயர்ந்தது.
8. (கண்ணன்) ________ இங்கே வா.
9. (வள்ளல்) ________ ஈகை மனம் உண்டு.
10. (இளமாறன்) ________ எழுதுகோல் விலை உயர்ந்தது.
11. மாணவர்கள் (பேருந்து) ________ கீழே இறங்கினர்.
12. நான் இப்போதுதான் (பள்ளி) ________ வீடு திரும்பினேன்.





5.3.18 - மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
5.3.19 - ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வேற்றுமை உருபுகளை அறியச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசித்து அறியப் பணித்தல்.
- வேற்றுமை உருபுகளைச் சேர்த்து வாக்கியங்களில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# மீள்பார்வை

1. கோடிட்ட சொல்லின் வேற்றுமை உருபுகளைக் கண்டறிக.

திருமகள் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றாள். எனவே, திருமகளைப் பலரும் பாராட்டினர்.

அ. இரண்டாம், மூன்றாம் வேற்றுமை
ஆ. முதலாம், இரண்டாம் வேற்றுமை
இ. மூன்றாம், நான்காம் வேற்றுமை
ஈ. ஐந்தாம், இரண்டாம் வேற்றுமை

2. சரியான **இணைமொழியை** எழுதுக.

தமிழர்கள் ______ நம் பாரம்பரியத்தைப் போற்றிக் கடைப்பிடித்து வாழ்கின்றனர்.

அ. அன்றும் இன்றும்
ஆ. அருமை பெருமை
இ. சுற்றும் முற்றும்
ஈ. மேடு பள்ளம்

3. சூழலுக்கு மிகப் பொருத்தமான திருக்குறளைத் தெரிவு செய்க.

நன்கு கல்வி கற்ற அப்பெரியவர் தம்மிடம் உள்ள சிறந்த ஆற்றலைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டார். அவரின் ஆற்றல் ஊற்றுப் போல் பெருகிக் கொண்டு தான் இருந்தது.


அ. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும். (71)

ஆ. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (396)

இ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50)

ஈ. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

4. படத்திற்குப் பொருத்தமான உலகநீதியைத் தெரிவு செய்க.




அ. நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்.
ஆ. நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்.
இ. அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்.
ஈ. அடுத்தவரை யொருநாளுங் கெடுக்க வேண்டாம்

5. சூழலுக்கேற்ற வெற்றி வேற்கையைத் தெரிவு செய்க.

பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைக் கவனமாகக் கேட்க வேண்டும். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் நமக்கு கண்கண்ட தெய்வங்களாவர்.

அ. கல்விக் கழகு கசடற மொழிதல்.
ஆ. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.
இ. பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.

6. சூழலுக்கு ஏற்ற பழமொழியைத் தெரிவு செய்க.




அ. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
ஆ. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
இ. சிக்கனம் சீரளிக்கும்.
ஈ. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

7. சரியான இரட்டைக்கிளவியை எழுதுக.

________வென மின்னிய வெள்ளிப் பாத்திரங்களை வாங்கிக் கொண்டு வெகு தாமதமாக வீட்டிற்கு வந்த என்னிடம் அம்மா ________ வெனப் பேசினார்.

அ. பளபள, கடுகடு
ஆ. பளபள, சரசர
இ. கடுகடு, சரசர
ஈ. கடுகடு, பளபள

8. மரபுத்தொடரையும் பொருளையும் இணைத்திடுக.

| | |
|---|---|
| கரி பூசுதல் | நெடுங்காலமாய் |
| கடுக்காய் கொடுத்தல் | வெறும் கற்பனை |
| தொன்று தொட்டு | அவமானம் ஏற்படுத்துதல் |
| மனக்கோட்டை | ஏமாற்றித் தப்புதல் |